REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

www.thinakaran.lk

/ Thinakaran.lk / ThinakaranLK

2024 ஒக்டோபர் 9 புதன்கிழமை

# தினகரன்

THINAKARAN 92 தினகரன்

வரு. 92 இல. 241 | Wednesday 09, October, 2024 | 20 பக்கங்கள் | 50/-


## இலங்கையில் அதிகரிக்கும் இணையவழி மோசடிகள்

**ஓக. 01 முதல் செப். 30 வரை 9,000 முறைப்பாடுகள் பதிவு**



இணையவழி குற்றங்கள் தொடர்பில் 09 ஆயிரம் முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக இலங்கை கணினி அவசர தயார்நிலை குழு தெரிவித்துள்ளது. இலங்கை கணினி அவசர 06

# ஈஸ்டர் தாக்குதலின் விசாரணை அறிக்கை பக்கங்கள் சில மாயம்

**அரசாங்கம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக அறிவிப்பு**

**லோரன்ஸ் செல்வநாயகம்**

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் தொடர்பான விசேட ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணை அறிக்கையி சில பக்கங்கள், காணாமல் போனதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் அரசாங்கம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாடு நேற்று தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது. இதன்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

விசாரணை அறிக்கையின் அந்த பக்கங்கள் எவ்வாறு காணாமலாயின என்பதும், ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் அனைத்து பக்கங்களும் அப்படியே உள்ளனவா? என்பதும் விசாரணைகளின் மூலம் கண்டறியப்படுமென்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, உயிர்த்த ஞாயிறு பயங்கரவாத குண்டுத் தாக்குதலுடன் தொடர்புடையவர்கள் மற்றும் அதனை வழிநடத்தியவர்களுக்கு எதிராக உறுதியாக சட்டம் நடைமுறைப்படுத்தப்படுமென்றும் அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

நாட்டு மக்களுக்கு எந்த வித அநீதியும் ஏற்பட அரசாங்கம் ஒருபோதும் இடமளிக்கப் போவதில்லை என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதற்கு அரசாங்கம் விசேட நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது. இதற்காக இடம்பெற்ற விசாரணைகளின் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ள அறிக்கைகள் காணாமலானது எவ்வாறு? அவற்றின் பக்கங்கள் எவ்வாறு தொலைந்து போயின என்பது தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருகிறோம்.

ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்ட அறிக்கையில், முன்னாள் சட்டப் பணிப்பாளர் தலையிட்டு, அந்த விடயங்கள் தொடர்பில் ஆலோசனை வழங்கியிருந்தார். அப்படியானால் அந்த அறிக்கையின் சில பகுதிகள் எவ்வாறு தொலைந்து போயின? சம்பந்தப்பட்ட தரப்பிடம் ஒப்படைக்கும் போது அவை இருந்தனவா? அதன் பிறகு என்ன நடந்தது? என்பது தொடர்பில் ஆய்வுக்குழு விசாரணைகளை மேற்கொண்டு வருகிறது. அவை முறைப்படி இடம்பெறும். எவ்வாறாயினும் நாட்டு மக்களுக்கு எந்த அநீதியும் ஏற்பட இடமளிக்கப் போவதில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, தாக்குதல் நடத்தப்பட்ட இடங்களில் ஒன்றான கட்டுவாப்பிட்டிய தேவாலயத்துக்கு கடந்த ஞாயிற்றுக்கிழமை சென்ற ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க, பாதிக்கப்பட்ட உறவினர்களுடன் உரையாடினார். தாக்குதலின் சூத்திரதாரிகளை சட்டத்தின் முன் நிறுத்தி, உரிய தண்டனை வழங்கப்படும் எனவும் அவர் உறுதியளித்தார். இத்தாக்குதல் பற்றி ஏற்கனவே தகவல்கள் வெளியாகியிருந்தும் இதைத் தடுப்பதற்குத் தவறிய பிரதான அதிகாரிகள் நஷ்டஈடு வழங்க வேண்டும் என்றும் நீதிமன்றம் தீர்ப்பளித்திருந்தது. தமது கட்சி ஆட்சிக்கு வந்தால், ஈஸ்டர் 06

## பெரும்போக நெற் செய்கைக்கான ரூ. 25,000 உர மானியம் திங்கள் முதல்

**முதற்கட்டமாக அம்பாறை மாவட்டத்தில்**

**லோரன்ஸ் செல்வநாயகம்**



பெரும்போக நெற் செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு 25,000 ரூபா உர மானியம் வழங்கும் செயற்திட்டம், எதிர்வரும் திங்கட்கிழமை முதல் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக அமைச்ச 06

## பிரதி பொலிஸ் மாஅதிபரின் நியமனத்துக்கு அங்கீகாரம்

**அரசியலமைப்பு பேரவை அறிவிப்பு**



பதில் பொலிஸ் மா அதிபராக சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரியவை நியமிப்பதற்கு அரசியலமைப்பு பேரவை அனுமதி வழங்கியுள்ளது.

தற்போதைய சட்ட விதிகளுக்கு அமைவாக பதில் பொலிஸ் மா அதிபர் நியமிக்கப்பட்டு 06

## பொதுத்தேர்தல் நிறைவுடன் உள்ளூராட்சி சபைத் தேர்தல்




பாராளுமன்றத் தேர்தல் நிறைவடைந்தவுடன் உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்படுமென, தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க தெரிவித்துள்ளார். 06

## இ.தொ.காங்கிரஸிலிருந்து பாரத் அருள்சாமி விலகல்

**இராஜினாமா கடிதம் ஜீவனுக்கு அனுப்பிவைப்பு**



இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உப தலைவர் பதவியிலிருந்தும், கட்சியின் அடிப்படை உறுப்பினர் பதவியிலிருந்தும் விலகுவதாக பரத் அருள்சாமி அறிவித்துள்ளார்.

பதவி விலகும் கடிதத்தை கட்சியின் பொதுச் செயலாளர் ஜீவன் தொண்டமானுக்கு நேற்று முன்தினம் (07) மாலை அவர், அனுப்பி வைத்துள்ளார்.

மக்களதும், கட்சி அங்கத்தவர்களதும் எதிர்பார்ப்புக்களை மீறி, எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் இந்த நாட்டை வங்குரோத்து நிலையடையச் 06

## ரஷ்யாவின் எண்ணெய் முனையம் மீது உக்ரேன் அதிரடித் தாக்குதல்



ரஷ்யாவால் ஆக்கிரமிக்கப்பட்ட கிரிமியன் தீபகற்பத்தின் கடற்கரையிலுள்ள பாரிய ஒரு எண்ணெய் முனையத்தின் மீது, தாக்குதல் நடத்தியதாக உக்ரேனின் இராணுவம் கடந்த திங்களன்று (07) அறிவித்துள்ளது.

இது ரஷ்யாவின் கட்டுப்பாட்டிலுள்ள எரிசக்தி வசதிகளை குறிவைத்து நடத்தப்பட்ட அண்மைய தாக்குதலாகும். குடாநாட்டின் மிகப் பாரிய எண்ணெய் பதப்படுத்தும் வசதியான ஃபியோடோசியா 06

## ஜனாதிபதி அநுர குமாரவுக்கு அமெரிக்க ஜனாதிபதி வாழ்த்து



ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுக்கு அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் மனப்பூர்வமான வாழ்த்துகளை தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவுக்கும் இலங்கைக்குமிடையிலான நீண்டகால உறவுகளை நினைவு கூர்ந்துள்ள ஜோ பைடன், முழு அமெரிக்க மக்களின் சார்பாக ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவுக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார். இலங்கையின் ஜனநாயகத்தை மேலும் பலப்படுத்துவதன் மூலம் கடந்த ஜனாதிபதித் தேர்தல் மற்றும் ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னரான காலப்பகுதியை அமைதியான முறையில் முன்னெடுத்தமைக்கும் தனது பாராட்டுக்களை ஜோ பைடன் தெரிவித்தார்.

"இந்த தேர்தல் இலங்கையின் ஜனநாயக நிறுவனங்களின் பலத்தையும், ஜனநாயகத்தின் 06

## தரம் 01 முதல் தரம் 05 வரையான மாணவர்களின் மதிய உணவு திட்டம் நிறுத்தப்படவில்லை

**கல்வி அமைச்சு திட்டவட்டமாக அறிவிப்பு**



அரசாங்க பாடசாலைகளில் ஆரம்ப தர மாணவர்களுக்கு வழங்கப்படும் மதிய உணவு, தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளதாக வெளியான செய்தி உண்மைக்கு புறம்பானதென, கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

பாடசாலை மதிய உணவுத் திட்டம் நிறுத்தப்பட்டுள்ளதாக கடந்த சில நாட்களாக பல்வேறு தகவல்கள் பரப்பப்பட்டு வருவதாக, கல்வி அமைச்சின் செயலாளர் திலகா ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

இந்த தகவல்கள் அனைத்தும் பொய்யானதெனவும் பாடசாலை மாணவர்களுக்கு மதிய உணவு வழங்கும் வேலைத்திட்டம் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுவதாகவும் திலகா ஜயசுந்தர தெரிவித்தார். 06

## சீனாவின் கடற்படை பயிற்சி பாய்மரக்கப்பல் இலங்கையில்



06

## யாழ்ப்பாணம் நோக்கிச் சென்ற பயணிகள் பஸ்கள் மீது கற்கள் வீசித் தாக்குதல்




கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் சென்ற பயணிகள் பஸ்கள் மீது கற்கள் வீசித் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. தாக்குதலில் பஸ்ஸின் கண்ணாடிகள் நொறுங்கியதுடன் பஸ் சாரதியும் காயமடைந்துள்ளார்.

வெவ்வேறு பகுதிகளில் வைத்து மூன்று பஸ்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளன.

கொழும்பிலிருந்து யாழ். நோக்கிச் சென்ற தனியார் அதி 06

## வன்னி, யாழ். மாவட்டங்களில் 05 ஆசனங்களை EPDP கைப்பற்றும்

**வேட்புமனுவை தாக்கல் செய்த குலசிங்கம் திலீபன் தெரிவிப்பு**



வன்னி மாவட்டத்தில் இரண்டு ஆசனங்களையும் யாழ். மாவட்டத்தில் மூன்று ஆசனங்களையும் கைப்பற்றுவோமென ஈ.பி.டி.பி சார்பில் வேட்பு மனு தாக்கல் செய்த, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் குலசிங்கம் திலீபன் தெரிவித்தார்.

வன்னித் தேர்தல் தொகுதிக்கான வேட்பு மனுவை நேற்று முன்தினம் (07) வவுனியா தெரிவத்தாட்சி அதிகாரி அலுவலகத்தில் தாக்கல் செய்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்து 06

## எம்.பிக்களுக்கு வழங்கப்பட்ட இலவச முத்திரைகள் ரத்து

**பாராளுமன்றம் கலைந்ததால் செல்லுபடியற்றதென அறிவிப்பு**




பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் 5,00,000 ரூபா இலவச தபால் முத்திரைகளில் எஞ்சியவற்றை, அருகிலுள்ள தபால் அலுவலகத்தில் அல்லது பாராளுமன்றத்தில் ஒப்படைக்குமாறு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு தபால் திணைக்களம் அறிவித்துள்ளது.

பாராளுமன்றம் கலைக்கப்பட்டுள்ளதால், இம் முத்திரைகளைப் பயன்படுத்துவது தடையெனவும் 06

## தமிழரசுக் கட்சி பெண் வேட்பாளர் தெரிவில் மகளிர் அணி அதிருப்தி

**சுமந்திரன் மீது கடும் குற்றச்சாட்டுகள்**




பாராளுமன்றத் தேர்தலில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பெண் வேட்பாளர் தெரிவில் கடும் அதிருப்தியை வெளியிட்டுள்ள கட்சியின் மகளிர் அணியினர், கட்சியின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் தொடர்பில் 06

## ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் தீர்மானத்தை இலங்கை நிராகரிக்கும்

**அமைச்சரவை பேச்சாளர்**

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் தற்போதைய அமர்வில் முன்மொழியப்பட்டுள்ள தீர்மான வரைவை இலங்கை அரசு நிராகரிப்பதாக அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று (08) நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டிலேயே அமைச்சர் விஜித ஹேரத் இதனைத் தெரிவித்தார்.

மனித உரிமைகள் பேரவையின் 51/1 தீர்மானத்தை இலங்கை தொடர்ந்து எதிர்க்கும் அதேவேளையில், வெளிச் சாட்சியங்களை சேகரிக்கும் பொறிமுறையின் அதிகாரங்களை நீட்டிக்கும் எந்தவொரு பிரேரணைக்கும் இலங்கை உடன்படாதென்றும் அவர் கூறினார்.

இலங்கையில் இடம்பெற்ற யுத்தக் குற்றங்கள் தொடர்பான ஆதாரங்களை சேகரிக்கும் வெளிப்புற பொறிமுறைக்கான அதிகாரங்களை நீடிக்கும் எந்த தீர்மானத்தையும் 06

## 2023, 2024 வருமான வரி நிலுவைகள் அறவிடுவதற்கு உச்ச நடவடிக்கைகள்

**வங்கிக் கணக்குகள் முடக்கத்துடன் சொத்துகளும் பறிமுதல்**

**லோரன்ஸ் செல்வநாயகம்**

அரசாங்கத்திற்கான வரி நிலுவையைச் செலுத்த வேண்டியவர்கள் இந்த ஆண்டு இறுதிக்குள் அதனை செலுத்த வேண்டும் என்றும், அவ்வாறு செலுத்தத் தவறினால் அவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் இறைவரி திணைக்களம் தெரிவித்துள்ளது. அவ்வாறு செலுத்த வேண்டிய வரி நிலுவைத் தொகையை




அறவிடுவதற்காக, உச்ச அளவில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என தெரிவித்துள்ள அத்திணைக்களம், வரி செலுத்தத் 06

## தமிழரசு கட்சியின் தலைமையை ஸ்ரீதரன் உடன் ஏற்க வேண்டும்

**ஸ்ரீதரனுக்கு மாவை அவசரக் கடிதம்**

**யாழ். விசேட, பருத்தித்துறை விசேட, யாழ். குறூப் நிருபர்கள்**



இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைமைப் பதவியிலிருந்து விலகுவதாக அறிவித்துள்ள மாவை சேனாதிராஜா, கட்சியின் தலைவர் பொறுப்பை உடனடியாக ஏற்குமாறு கட்சியின் உறுப்பினர் சிவஞானம் ஸ்ரீதரனுக்கு கடிதமொன்றை அனுப்பியுள்ளார். அக்கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, "மாவை சோமசுந்தரம் சேனாதிராஜா ஆகிய 06

92 ஆண்டுகால பாரம்பரியத்துடன் தமிழ் பேசும் மக்களின் தேசிய குரல்

# நகர்வலம்



## வீதி அபிவிருத்தி அதிகார சபை தலைவராக தர்மலிங்கம் பாஸ்கரன்



வீதி அபிவிருத்தி சபையின் தலைவராக தர்மலிங்கம் பாஸ்கரன் போக்குவரத்து அமைச்சரால் நியமிக்கப்பட்டுள்ளார்.

பேராதனை பல்கலைக்கழகத்தின் பொறியியல் பட்டதாரியான தர்மலிங்கம் பாஸ்கரன், யாழ். இந்துக் கல்லூரியின் பழைய மாணவரும் ஆவார்.

வரலாற்றில் முதன் முறையாக மேற்படி பதவிக்கு தமிழர் ஒருவர் திறமை அடிப்படையில் நியமிக்கப்பட்டுள்ளமை இதுவே முதற் தடவையாகும்.

கடந்த நாற்பது வருடங்களாக வீதி அபிவிருத்தி அதிகார சபையில் (RDA) பொறியியலாளராக பல பதவிகளை தர்மலிங்கம் பாஸ்கரன் வகித்து வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இன்றைய புதிய ஆட்சியில் இனம் பாராமல், கட்சி பாராமல், மதம் பாராமல், திறமைக்கு ஏற்ற மக்களின் தேவைக்காக, திறமைசாலிகளை இனம் கண்டு தற்போதைய அரசு முன்நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்றமை பாராட்டத்தக்கது.

## காலநிலை மாற்றத்திற்கான விவசாயத் திட்டம் மூலம் 13,000 மில். செலவில் 470 விவசாய குளங்கள் புனரமைப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**





விவசாய அமைச்சின் கீழ் செயற்படும் காலநிலை மாற்றத்திற்கான விவசாய திட்டத்தின் மூலம் 15,000 மில்லியன் ரூபா செலவில் 470 விவசாய குளங்களை புனரமைக்கும் நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.

தெரிவு செய்யப்பட்டுள்ள காலநிலை மாற்ற பாதிப்புகளுக்கு உட்படும் விவசாய வலயங்களில் உள்ள சிறிய அளவிலான விவசாயிகளின் உற்பத்தி செயற்பாடுகளை பயனுள்ளதாக மேம்படுத்தும் வகையிலேயே உலக வங்கியின் நிதியுதவியுடன் இந்த திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

அந்த வகையில் விவசாயம், காணி, கால்நடைகள், நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரியல் அமைச்சின் கீழ் இந்த திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதுடன் அதன் மூலம் 13,000 மில்லியன் ரூபா செலவில் 470 குளங்கள் புனரமைக்கப்பட்டுள்ளன.

வடக்கு, கிழக்கு, ஊவா,வடமேல், வடமத்திய மற்றும் தென் மாகாணங்கள் என ஆறு மாகாணங்களை உள்ளடக்கும் வகையில் 11 மாவட்டங்களில் இந்த திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

அந்த வகையில் குருநாகல் மாவட்டத்தில் 116 குளங்கள், புத்தளம் மாவட்டத்தில் 28 குளங்கள், அநுராதபுரம் மாவட்டத்தில் 56 குளங்கள், பொலனறுவை மாவட்டத்தில் 10 குளங்கள், கிளிநொச்சி மாவட்டத்தில் 34 குளங்கள், முல்லைத்தீவு மாவட்டத்தில் 47 குளங்கள், திருகோணமலை மாவட்டத்தில் 29 குளங்கள், மட்டக்களப்பு மாவட்டத்தில் 21 குளங்கள், அம்பாறை மாவட்டத்தில் 19 குளங்கள், மொனராகலை மாவட்டத்தில் 36 குளங்கள், ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் 74 குளங்கள் என்ற அடிப்படையில் இந்த குளங்கள் புனரமைப்பு செய்யப்பட்டுள்ளன.

இதன் மூலம் 30,000 விவசாய குடும்பங்கள் பயன்பெறுவதுடன் 38,000 ஏக்கர் விவசாய நிலங்களில் விவசாய உற்பத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அத்துடன் அடுத்த ஆண்டு டிசம்பர் மாதத்திற்குள் மேலும் 205 குளங்களை புனரமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன.

அதற்காக 4200 மில்லியன் ரூபா மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதாகவும் அதன் மூலம் பன்னிரண்டாயிரம் விவசாய குடும்பங்கள் பயன்பெறவுள்ளதாகவும் அந்தத் திட்டத்தின் உயரதிகாரியொருவர் தெரிவித்தார்.

## கடந்த 08 மாதங்களில் 239 யானைகள் உயிரிழப்பு

### வன ஜீவராசிகள் திணைக்களம் அறிக்கை

**(அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்)**



இந்த வருடத்தின் கடந்த 08 மாதங்களில் 239 யானைகள் உயிரிழந்துள்ளதாக வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அதன்படி, துப்பாக்கி சூட்டுக்கு இலக்காகி 40 யானைகளும் மின்சாரம் தாக்கி 31 யானைகளும் ரயிலில் மோதி 05 யானைகளும் வீதி விபத்துக்களில் சிக்கி 06 யானைகளும் நீரில் மூழ்கி 11 யானைகளும் ஏனைய விபத்துக்களின் மூலம் 07 யானைகளும் உயிரிழந்துள்ளன.

குறிப்பாக இளம் வயதுடைய யானைகளே அதிகளவில் உயிரிழந்துள்ளதாக வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம் தெரிவித்துள்ளது.

இவ்வருடத்தின் இதுவரையிலான காலப்பகுதிக்குள் யானைகளின் தாக்குதல்களினால் 57 பேர் உயிரிழந்துள்ளனர். கடந்த 2023 ஆம் ஆண்டில் 488 யானைகள் உயிரிழந்துள்ளதுடன் யானைகளின் தாக்குதல்களினால் 184 மனித உயிரிழப்புகள் பதிவாயிருந்ததாகவும் வன ஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளது.

## அபேக்ஷா வைத்தியசாலைக்கு மருந்துப்பொருட்கள்





உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு கொழும்பு ரோயல்ட் லயன்ஸ் கழகத்தின் ஊடாக 306 சி 1 சர்வதேச லயன்ஸ் கழகத்தின் முன்னாள் தலைவர் பந்தக தாபரே தலைமையில் மகரகம அபேக்ஷா வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிச்சை பெறும் சிறுவர்களுக்கென ஒரு தொகுதி மருந்துப் பொருட்கள் வைத்தியசாலைப் பணிப்பாளர் டொக்டர் அருண ஜயசேகரவிடம் யமுனா செனவிரட்ன வினால் கையளிக்கப்பட்டது. இந்நிகழ்வில் கொழும்பு ரோயல்ட் லயன்ஸ் கழகத்தின் தற்போதைய தலைவர் பிரசாந்த ஜயகொடி, வானசாஸ்திர அறிவியல் எழுத்தாளர் அநுர சி பெரேரா, கழகத்தின் செயலாளர் துஷாரி திஸாநாயக்க உட்பட முக்கியஸ்தர்கள் பலர் கலந்து கொண்டிருப்பதையும் கையளிக்கப்பட்ட மருந்துப் பொருட்களில் ஒரு தொகுதியையும் படத்தில் காணலாம்.

## கொழும்பு தமிழ் சங்கம் நடத்தும் அற்றைத்திங்கள்

தமிழின் மூத்த படைப்பாளிகளும் தகைசான்ற ஆளுமைகளும் தமது வாழ்வியல் அனுபவங்கள், கலை, இலக்கிய நட்பு எழுகைகள், பண்பாட்டுத் தாக்கங்கள், படைப்பு முயற்சிகள் முதலியவற்றைப் பகிர்ந்து கொள்ளும் அற்றைத்திங்கள் நிகழ்வு எதிர்வரும் 17ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 5.30 மணிக்கு கொழும்புத் தமிழ்ச் சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்விற்கு கொழும்புத் தமிழ்ச் சங்கத் தலைவர் சட்டத்தரணி சுகந்தி இராஜகுலேந்திரா தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில், பூபாலசிங்கம் வெளியீட்டகம், பூபாலசிங்கம் புத்தகசாலை அதிபர் பூபாலசிங்கம் ஸ்ரீதரசிங் உரை நிகழ்த்தவுள்ளார்.

## உலக குடியிருப்பு தினம் கொழும்பில் அனுஷ்டிப்பு

### போட்டிகளில் வெற்றிபெற்றோருக்கு பணப்பரிசு





**(அஷ்ரப் ஏ சமத்)**

உலக குடியிருப்பு தினம் நேற்று (07) திங்கட்கிழமை செத்சிரிபாயவில் உள்ள நகர அபிவிருத்தி அதிகார சபையின் கூட்ட மண்டபத்தில் நடைபெற்றது.

பிரதம அதிதியாக புதிதாக நியமிக்கப்பட்ட கிராமிய நகர மற்றும் வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சின் செயலாளர் ஏ.பி.எம் அத்தப்பத்து மற்றும் ஐக்கிய நாடுகள் மனித நிகழ்ச்சித் திட்டத்தின் இலங்கை வதிவிடப் முகாமையாளர் திருமதி ஹர்சனி ஹலங்கொட அமைச்சின் கீழ் உள்ள அதிகார சபைகளின் பொது முகாமையாளர்கள், அமைச்சின் அதிகாரிகள் கலந்து சிறப்பித்தனர். இதன்போது, அகில இலங்கை ரீதியாக உலக குடியிருப்பு தினம் பற்றி பாடசாலை மாணவர்களுக்கிடையே நடாத்திய சித்திரம் வரைதல், கட்டுரை, வீதி நாடகம் என்பவற்றில் வெற்றிபெற்ற மாணவ மாணவிகளுக்கு பணப்பரிசில்களும் விருது சான்றிதழ்களும் அதிதிகளினால் வழங்கி வைக்கப்பட்டன.

## பொலிஸார் மற்றும் மாணவர்கள் இணைந்து சிரமதானப் பணி

**(புத்தளம் தினகரன் நிருபர்)**



மதுரங்குளி கடையாமோட்டை பிரதான வீதியின் கடையாமோட்டை தொடக்கம் மல்லம்பிட்டி பெரிய பாலம் வரையான இரு ஓரங்களிலும் வீசப்பட்ட குப்பை கூளங்களால் சுற்றுச் சூழல் மிகவும் பாதிக்கப்பட்டு காணப்பட்டதுடன் இவ்வீதியில் பயணிப்பவர்களும் பல சிரமங்களுக்கு உள்ளாகி வந்தனர்.

இவற்றை கருத்தில் கொண்டு மதுரங்குளி பொலிஸார் மற்றும் கடையாமோட்டை முஸ்லிம் தேசிய பாடசால மாணவர்கள் இணைந்து சிரமதானப் பணி ஒன்றை முன்னெடுத்து மல்லம்பிட்டி பெரிய பாலத்தின் இரு ஓரங்களையும் சுத்தப்படுத்தினர்.

மேற்படி சிரமதானப் பணியில் மதுரங்குளி பொலிசார், அரச அதிகாரிகள், பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், ஊர் மக்கள் மற்றும் முன்னாள் மாகாண சபை உறுப்பினர் ஏ.எச்.எம் றியாஸ், பாடசாலை அபிவிருத்தி சங்க செயலாளரும், முந்தல் மதுரங்குளி பல நோக்கு கூட்டுறவு சங்கத் தலைவருமான ஏ.எச். எம். ஹாரூன், புத்தளம் பிரதேச சபை ஊழியர்கள், கடையாமோட்டை கிராம சேவையாளர் ஆகியோர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

### அஹதியா இடைநிலை பரீட்சையில்

## மதுரங்குளி ஹிதாயத் நகர் அஹதியா சிறந்த பெறுபேறு

**(புத்தளம் தினகரன் நிருபர்)**

2024 அஹதியா பாடசாலைகளின் மத்திய சம்மேளனத்தினால் நடாத்தப்பட்ட அஹதியா இடைநிலை சான்றிதழ் பரீட்சையில் ஹிதாயத் நகர் அல் இஸ்ஸோ அஹதியா பாடசாலை மாணவர்கள் 100 வீதம் சித்தியடைந்துள்ளதுடன் பரீட்சைக்கு தோற்றிய 19 மாணவர்களில் 09 மாணவர்கள் சகல பாடங்களிலும் ஏ சித்திகளை பெற்றுள்ளதாக அஹதியா பாடசாலையின் அதிபர் எச்.எம்.எப். ஹிமாயா தெரிவித்தார்.

அதனடிப்படையில், ஐ.எம். இஹ்சான், எம்.எம். முஸ்கித், எம்.எஸ்.முஸ்னி அஹமட், எம்.ஏ.எப். நுஸ்கா, எம்.என்.எப். நபா, எம்.எஸ். எப். அம்னா, எம். சஜா, எஸ். எப். ராயா, எஸ். எப்.சஹ்னா ஆகியோர் 03 ஏ சித்திகளைப் பெற்றுள்ளதுடன் ஜே.எப். சேஹா எனும் மாணவி ஆங்கில மொழி மூலம் தோற்றி 03 பாடங்களிலும் சித்தியை பெற்றுள்ளார்.

சிறந்த பெறுபேற்றைப் பெற்றுக் கொள்வதற்கு உழைத்த அஹதிய்யா பாடசாலையின் தலைவருக்கும் மேலதிக வகுப்புகள் மற்றும் கருத்தரங்குகள் நடத்திய பாட ஆசிரியர்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதாக அதிபர் ஹிமாயா மேலும் தெரிவித்தார்.

## அநுராதபுரம் சாஹிராவிலிருந்து 14 மாணவர்கள் பல்கலை தெரிவு

**(கல்நேவ தினகரன் விசேட நிருபர் )**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அண்மையில் வெளியிட்ட பல்கலைக்கழக அனுமதிக்கான 'இஸட் ஸ்கோர்' வெட்டுப் புள்ளிகளின்படி அநுராதபுரம் சாஹிரா தேசிய பாடசாலையிலிருந்து 14 மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதிக்கு தகைமை பெற்றுள்ளதாக பாடசாலை அதிபர் ஆஸாத் கான் தெரிவித்தார்.

இதன்படி, உயிரியல் விஞ்ஞானப்பிரிவில் எம். பீ. ஆதில் அகமட், எஸ். எச். ஹப்ரி, ஆர். ஏ. அயாஸ் அகமட் ஆகிய மூன்று மாணவர்களும் மருத்துவ பீடத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர். அத்தோடு 'டென்டல்' சிகிச்சை பீடத்திற்கு ஏ.எச். பர்வீன் என்ற மாணவியும் மேலும் விஞ்ஞானப் பிரிவில் வெவ்வேறு துறைகளுக்கு மூன்று மாணவர்களும் ஏழு மாணவர்கள் பல்கலைக் கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

பௌதிக விஞ்ஞானப் பிரிவில் பொறியியல் பீடத்திற்கு எம்.என்.எம்.நபீஸ், எம்.எம். அகீல் ஆகிய இரண்டு மாணவர்களும் கலைத்துறையில் ஐந்து மாணவர்களும் பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளமை விசேட அம்சமாகும்.

### ஹம்பாந்தோட்டை ஸாஹிரா மாணவி

## தேசிய மட்டத்தில் தமிழ் மொழித்தின போட்டியில் முதலாம் இடம்

### பாடசாலை சமூகம் பாராட்டு

**(ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்)**



ஹம்பாந்தோட்டை ஸாஹிரா தேசிய கல்லூரியின் மாணவி பாத்திமா நஸ்ரா மௌலானா அகில இலங்கை தமிழ் மொழித் தினப்போட்டியில் தேசிய மட்டத்தில் முதலாவது இடத்தினை பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளார்.

இவர், பிரிவு ஐந்து; கட்டுரை வரைதல் போட்டியில் கலந்துகொண்டு தேசிய மட்டத்தில் முதலாவது இடத்தைப் பெற்றுள்ளார். இம்மாணவி இதேபோட்டியில், ஹம்பாந்தோட்டை மாவட்டம் மற்றும் தென் மாகாணம் ஆகியவற்றில் நடைபெற்ற தமிழ் மொழித்தின போட்டிகளிலும் கலந்துகொண்டு அவற்றில் முதலாவது இடத்தினை பெற்று அகில இலங்கை தமிழ் மொழித் தின போட்டியில் கலந்துகொள்ளும் வாய்ப்பினை பெற்று அதில் கலந்துகொண்டு தேசியரீதியில் முதலாவது இடத்தினைபெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. அத்தோடு, அண்மையில் பெறுபேறு வெளியாகிய க.பொ. த. சாதாரண தரப் பரீட்சையில் ஒன்பது ஏ சித்திகளையும் பெற்று இம்மாணவி சித்தியடைந்துள்ளார். இவர் ஸெய்யித் நளீம் மௌலானா மற்றும் சித்தி ரஸீனா மௌலானா ஆகியோரின் சிரேஷ்ட புதல்வியும் ஆவார்.

# சீன கப்பலின் வருகை நாட்டின் பாதுகாப்பில் பாதிப்பை ஏற்படுத்தாது

## அனைத்து நாடுகளுடனும் சமமான செயற்பாடு

**(லோரன்ஸ் செல்வநாயகம்)**

சர்வதேச நாடுகளுடனான இராஜதந்திர உறவுகளில் சகல நாடுகளுடனும் சமமான விதத்திலேயே, செயற்படுவதாக அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

இந்தியாவைப் போன்றே, சீனா தொடர்பான செயற்பாடுகளையும் அரசாங்கம் கையாள்வதாக தெரிவித்த அவர், இந்த வகையிலே, சீன இராணுவப் பயிற்சிக் கப்பலொன்று இலங்கைக்கு வருவதற்கு அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளதாகவும் தெரிவித்தார்.

இந்தக் கப்பல் இம்மாதத்தில் நாட்டுக்கு வரவுள்ளதாகவும், இதனால் நாட்டின் பாதுகாப்புக்கு எந்த பாதிப்பும் ஏற்படாது என்றும் தெரிவித்தார்.



அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பு நேற்று தகவல் திணைக்களத்தில் இடம்பெற்றது. இதன்போது சர்வதேச நாடுகளுடனான இராஜதந்திர உறவுகள் தொடர்பில் விளக்கமளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்,

நாம், எந்த நாட்டையும் சிறப்பானதாகக் கருதவில்லை. நாடு சிறியதோ பெரியதோ, அனைத்து நாடுகளுடனும் இராஜதந்திர உறவுகளை சமமாகவே பேணுகிறோம். எங்களுக்குள் எந்த வேறுபாடும் கிடையாது.

சீனா, இந்தியா, அமெரிக்கா, ரஷ்யா, கியூபா மற்றும் வியட்நாம் ஆகிய நாடுகளுடன் நாம், இராஜதந்திர உறவுகளைக் கொண்டுள்ளோம். இந்தியாவைப் போலவே சீனாவையும் கையாள்கிறோம். விகாரைகளுக்கு சோலார் பெனல்களை வழங்கும் திட்டம் சீனாவுக்குள்ளது.

இம்மாதத்தில் இன்னும் சில தினங்களில் சீன இராணுவப் பயிற்சிக் கப்பலொன்று இலங்கைக்கு வரவுள்ளது.

இதற்கான அனுமதியை அரசாங்கம் வழங்கியுள்ளது. அதனால், இலங்கையின் பாதுகாப்புக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படாது.

இதற்கு முன்னர் அமெரிக்க, இந்திய மற்றும் ஜெர்மன் போர்க்கப்பல்கள் நாட்டுக்கு வருகை தந்துள்ளன.

# இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்கு அமெரிக்கா உதவி

இலங்கையின் பொருளாதாரத்தை பலப்படுத்தத் தேவையான எந்தவொரு ஒத்துழைப்பையும் வழங்கத் தயாரென, அமெரிக்கா உறுதியளித்துள்ளது.

இலங்கையின் ஏற்றுமதி வர்த்தக பொருளாதாரத்தை உருவாக்குவதற்கு அவசியமான ஒத்துழைப்பை வழங்கத் தயாரென, இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் தெரிவித்தார்.

ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி சனத் நந்திக குமாநாயக்க மற்றும் இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் ஆகியோருக்கிடையிலான சந்திப்பொன்று நேற்று (08) முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

இதன்போது ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் வெற்றிக்கு வாழ்த்து தெரிவித்து, அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் அனுப்பியிருந்த வாழ்த்துச் செய்தியையும் அமெரிக்க தூதுவர் ஜூலி சங் ஜனாதிபதியின் செயலாளரிடம் கையளித்தார்.



06

# கிரிக்கெட் தெரிவுக் குழு தலைவர் உபுல் தரங்கவுக்கு பிடியாணை

## நாடு திரும்பும்போது கைதாகலாம்

**(லோரன்ஸ் செல்வநாயகம்)**

கிரிக்கெட் போட்டி ஆட்ட நிர்ணய சம்பவம் தொடர்பான சாட்சியங்களை வழங்குவதற்கு நீதிமன்றத்தில் ஆஜராக தவறிய,கிரிக்கெட் தெரிவுக்குழுவின் தலைவர் உபுல் தரங்கவிற்கு மாத்தளை மேல் நீதிமன்றம் நேற்று பிடியாணை பிறப்பித்தது.

பள்ளேகலை விளையாட்டு மைதானத்தில் இவ்வருடம் மார்ச் மாதம் நிறைவடைந்த "லெஜண்ட்ஸ் லீக்" கிரிக்கெட் போட்டித் தொடரில், பணத்திற்கு ஆட்ட நிர்ணயத்தில் ஈடுபடுமாறு தமக்கு அழுத்தம் கொடுக்கப்பட்டதாக உபுல் தரங்க முறைப்பாடு செய்திருந்தார்.

மேற்படி முறைப்பாட்டிற்கிணங்க விசாரணையில் உள்ள வழக்கொன்றிற்கு, உபுல் தரங்க நீதிமன்றத்தில் ஆஜராக தவறியிருந்தார்.இக்குற்றத்திற்காகவே அவருக்கு எதிராக பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

06

# 06 கட்சிகள் போட்டியிடும் வாய்ப்பை இழப்பு

**(லோரன்ஸ் செல்வநாயகம்)**

கட்சிகளின் செயலாளர் பதவியில் பிரச்சினைகள் நிலவும் ஆறு அரசியல் கட்சிகள், இம்முறை பொதுத் தேர்தலில் போட்டியிடும் வாய்ப்பை இழந்துள்ளதாக, தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, ஐக்கிய லங்கா மகாசபா கட்சி, ஐக்கிய லங்கா பொதுஜன கட்சி, லங்கா மக்கள் கட்சி, இலங்கை முற்போக்கு முன்னணி மற்றும் ஈழவர் ஜனநாயக முன்னணி ஆகிய கட்சிகள் இந்த தேர்தலில் போட்டியிடும் வாய்ப்பை இழந்துள்ளதாகவும் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

எனினும்,எதிர்வரும் பொதுத் தேர்தலில் 77 அரசியல் கட்சிகளுக்கு தேர்தலில் போட்டியிட வாய்ப்பு உள்ளதாகவும் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அதேவேளை எதிர்வரும் நவம்பர் 14 நடைபெறவுள்ள பொதுத்தேர்தலில் போட்டியிடும் அரசியல் கட்சிகள் மற்றும் அவற்றுக்கென ஒதுக்கப்பட்டுள்ள சின்னங்களை தேர்தல்கள் ஆணைக்குழு வர்த்தமானி மூலம் வெளியிட்டுள்ளது.



நாட்டில் சிறந்த ஊடக கலாசாரத்தை நிலைநாட்டும் நோக்கில்,ஊடகவியலாளர்களுக்கு வழங்கப்படும் விருது இம்முறையும் வழங்கப்படவுள்ளது.இதற்கமைய, ஊடகவியலாளர்களின் பணி மற்றும் தரமான பங்களிப்பை மதிப்பிடுவதற்காக இவ்விழாவை நடத்த புத்தசாசன, மத, கலாசார அலுவல்கள், தேசிய ஒருமைப்பாடு, சமூக பாதுகாப்பு மற்றும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சு தீர்மானித்துள்ளது. இதுகுறித்த உத்தியோகபூர்வ அறிவிப்பு நேற்று (08) ஊடகத்துறை அமைச்சின் கேட்போர் கூடத்தில் அமைச்சர் விஜித ஹேரத் தலைமையில் நடைபெற்றது.



இந்தியாவுக்கான இலங்கை பிரதி உயர்ஸ்தானிகர் கலாநிதி டி. வெங்கடேஷ்வரன், ஆந்திர முதலமைச்சர் என்.சந்திரபாபு நாயுடுவை அண்மையில் சந்தித்துபேச்சு நடத்தினார். தகவல் தொழில்நுட்பம், வணிக மேம்பாடு, உட்கட்டமைப்பு மேம்பாடு, விவசாயம் மற்றும் பால் உற்பத்தித்துறைகளில் ஒத்துழைப்பை மேம்படுத்துவது குறித்து இதன்போது ஆராயப்பட்டது. பிராந்திய ஒத்துழைப்பை மேம்படுத்துவதன் மூலம் இலங்கைக்கும் ஆந்திர பிரதேசத்துக்கு இடையிலான கலாசார மற்றும் அரசியல் உறவுகளை வலுப்படுத்துவதன் முக்கியத்துவம் இச்சந்திப்பில் சுட்டிக்காட்டப்பட்டது.

# ஆட்சியிழந்த அரசாங்கங்களின் ஊழல்,மோசடிகளை வழங்கவும்

அதிகாரமிழந்துபோன அரசாங்கங்களின் கடந்தகால ஊழல், மோசடிகள் தொடர்பான தகவல்கள் தெரிந்தவர்கள் அதனை தங்களுக்கும் வழங்குமாறு பொதுமக்களிடம் வசந்த சமரசிங்க வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தேசிய ம க்கள் சக்தியின் நிறைவேற்றுக் குழு உறுப்பினரான வசந்த சமரசிங்க, ஊழல் எதிர்ப்பு முன்னணி அமைப்பின் தலைவராக இந்த கோரிக்கையை விடுத்துள்ளார்.

கடந்த காலங்களில் அதிகாரத்திலிருந்த ஆட்சியாளர்களின் ஊழல்கள் மற்றும் மோசடிகள் குறித்து தற்போதைய புதிய அரசாங்கத்தின் கீழ், விசாரணைகளை முன்னெடுக்கவுள்ளதாக வசந்த சமரசிங்க குறிப்பிட்டுள்ளார்.

இதற்கு ஏதுவாக முன்னைய அரசாங்கங்கள் மேற்கொண்ட ஊழல் மற்றும் மோசடிகள் தொடர்பான விபரங்கள் அறிந்துள்ளோர், அது தொடர்பான தகவல்களை தமக்கும் வழங்குமாறு அவர் பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# ஆணையாளர் நாயகமாக யூ.டி.என். ஜயவீர நியமனம்

இலங்கை மதுவரித் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகமாக யூ.டி.என். ஜயவீர நியமிக்கப்பட்டுள்ளார்.

மதுவரித் திணைக்களம் அரசின் பிரதான வருமான சேகரிப்பு நிறுவனமாகும். மேற்குறித்த நிறுவனத்தின் வினைத்திறன் மற்றும் நல்லாளுகை அரச வருமானத்தில் நேரடியாக தாக்கம் செலுத்துகிறது.

மேற்குறித்த திணைக்களத்தின் வருமான இலக்கை அடையும் செயற்பாடுகளை மாற்றமின்றி பேணிச் சென்று, எதிர்கால சவால்கள் மற்றும் குறிக்கோளை அடையும் வகையிலான தலைமைத்துவம் வழங்கப்பட வேண்டியுள்ளது.

அதற்கமைய, தற்போது மதுவரி ஆணையாளர் நாயகம் பதவியில் ஒப்பந்த அடிப்படையில் சேவையாற்றும் ஜே.எம். குணசிறியின் சேவையை உடனடியாக அமுலாகும் வகையில் இரத்து செய்வதற்கும், ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதியின் மேலதிக செயலாளராக (நிறுவன ஒருங்கிணைப்பு II) சேவையாற்றும் உள்நாட்டு இறைவரி சேவையின் விசேட தர அலுவலர் யூ.டி.என். ஜயவீரவை உடனடியாக அமுலாகும் வகையில், மதுவரி ஆணையாளர் நாயகமாக நியமிப்பதற்கும் நிதி, பொருளாதார அபிவிருத்தி, கொள்கை வகுப்பு, திட்டமிடல் மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் என்ற ரீதியில், ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது.

**கைத்தொழில் அமைச்சு**
**(சிறிய மற்றும் மத்திம அளவிலான தொழில்முயற்சி அபிவிருத்திப் பிரிவு)**
**இலங்கை கைப்பணிச் சபை**
**"லக்சல"**

LAKSALA All of Sri Lanka

## வெளிவாரி சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கான விலைமனு கோரல் – 2025

1. பாதுகாப்புச் சேவை (Security Services) - 2025.03.01 – 2026.02.28
2. சுத்திகரிப்புச் சேவை (Cleaning Service) - 2025.01.01 – 2025.12.31
3. மனிதவலு சேவை (Manpower Service) - 2025.01.01 – 2025.12.31

இலங்கை கைப்பணிச் சபை - லக்சலவிற்காக வெளிவாரிச் சேவைகளைப் பெற்றுக்கொள்ளும் அடிப்படையில் மேற்கூறிய சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்காக விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பப் படிவங்கள் மற்றும் நிபந்தனைகளை இலங்கை கைப்பணிச் சபை (நிர்வாகப் பிரிவு), இல. 215, பௌத்தாலோக்க மாவத்தை, கொழும்பு 07 எனும் முகவரியில் 2024-10-09ஆம் திகதி முதல் 2024-10-30ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 4.00 மணி வரையில் மீளளிக்கப்படாத 1500.00 ரூபாவை கணக்குப் பிரிவிற்குச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். மேலும் விண்ணப்பப் படிவங்களை வழங்குதல் / ஏற்றுக்கொள்ளல் 2024-10-30ஆம் திகதி பி.ப. 1.30 மணி வரை மட்டுமே மேற்கொள்ளப்படும்.

இதன் பிரகாரம் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்வது 2024-10-30ஆம் திகதி பி.ப. 1.30 மணிக்கு முடிவுறுத்தப்படும் என்பதுடன் அன்றைய தினத்திற்கு முன் கிடைக்கும் வகையில் பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது பின்வரும் முகவரியில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் விண்ணப்பப் படிவங்களை உள்ளிடலாம். விலைமனுக்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறித்த சேவையின் பெயரைக் குறிப்பிட்டு "விலைமனுக்களைச் சமர்ப்பித்தல் - 2025" எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

நிர்ணயிக்கப்பட்ட தினத்திற்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும் என்பதுடன் விலைமனுக்கள் ஏற்றுகொள்வது நிறைவடைந்த உடனடுத்து அன்றைய தினமே பி.ப. 1.30 மணிக்கு விலைமனுக்கள் திறக்கப்படும். விலைமனுதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் பின்வரும் முகவரியில் இந்த நிகழ்வில் கலந்துகொள்ளலாம். மேற்கூறிய சேவைக்காக நிறுவனமொன்றைத் தெரிவு செய்யும் இறுதித் தீர்மானத்தை இந்த சபை தன்னகத்தே கொண்டுள்ளது.

**தலைவர்,**
**இலங்கை கைப்பணிச் சபை - லக்சல,**
**இல. 215, பௌத்தாலோக்க மாவத்தை, கொழும்பு 07.**
**தொலைபேசி இலக்கம்: 0112557132**

**கைத்தொழில் அமைச்சு**
**(சிறிய மற்றும் மத்திம அளவிலான தொழில்முயற்சி அபிவிருத்திப் பிரிவு)**
**இலங்கை கைப்பணிச் சபை**
**"லக்சல"**

LAKSALA All of Sri Lanka

## பொருட்கள், வேலைகள் மற்றும் சேவைகளை வழங்குவதற்காக வழங்குநர்கள் / ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல் – 2025

இலங்கை கைப்பணிச் சபைக்கு 2025ஆம் வருடத்தில் பின்வரும் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்காக வழங்குநர்கள், ஒப்பந்தக்காரர்கள் மற்றும் குறித்த துறையில் நிபுணத்துவம் வாய்ந்த தொழில்சார்ந்தோரை பதிவு செய்து கொள்வதற்காக அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. வகுதி (A) - காகிதாதிகள்
2. வகுதி (B) - பொருட்களை கொள்வனவு செய்தல்
3. வகுதி (C) - சேவைகளைப் பெற்றுக்கொள்ளல்
4. வகுதி (D) - சிவில் நிர்மாணங்கள் / உள்ளக அலங்கார வேலைகள்

2024-10-09ஆம் திகதி முதல் 2024-12-01ஆம் திகதி வரையான வாரத்தின் வேலை நாட்களில் (திங்கள் முதல் வெள்ளி வரை) மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 4.00 மணி வரையில் இல. 215, பௌத்தாலோக்க மாவத்தை, தும்முல்ல, கொழும்பு-07 எனுமிடத்தில் அமைந்துள்ள இலங்கை கைப்பணிச் சபையின் நிர்வாகப் பிரிவிற்கும் (A), (B), (C), (D) வகுதிகளிலுள் ஒவ்வொரு உருப்படிக்காகவும் 1000.00 ரூபா வீதம் பதிவுக் கட்டணம் செலுத்தி விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பப் படிவத்தை முறையாகப் பூர்த்தி செய்து 2024-12-10ஆம் திகதிக்கு முன்னர் பதிவுத் தபாலில் பின்வரும் முகவரிக்கு அனுப்பலாம் அல்லது நேரில் கொண்டு வந்து ஒப்படைக்கலாம் என்பதுடன், விண்ணப்பப் படிவங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **''வழங்குநர்கள், ஒப்பந்தக்காரர்கள் மற்றும் சேவை வழங்குநர்களைப் பதிவு செய்தல் - 2025''** எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

**தலைவர்,**
**இலங்கை கைப்பணிச் சபை - லக்சல,**
**இல. 215, பௌத்தாலோக்க மாவத்தை,**
**கொழும்பு 07.**
**தொலைபேசி இல. 0112557132**

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

குரோதி வருடம் புரட்டாதி மாதம் 23ஆம் நாள் புதன்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1446 ரபீஉனில் ஆகிர் பிறை 05

### குறள் தரும் சிந்தனை



அருள்வெஃகி ஆற்றின்கண் நின்றான் பொருள்வெஃகிப்
பொல்லாத சூழக் கெடும்

அருளை விரும்பி அதனை அடைவதற்கான வழியில் செல்பவன் தவறிப்போய்ப் பிறர் பொருளை விரும்பிப் பொல்லாத செயலில் ஈடுபட்டால் கெட்டொழிய நேரிடும்

## தூய அரசியலைப் பேணுவதற்கு முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள்

பாராளுமன்றத் தேர்தலுக்கு வேட்புமனுக்களை ஏற்பதற்கான காலம் நிறைவடைவதற்கு இன்னும் இரண்டு நாட்கள் உள்ளன. அதாவது நாளைமறுதினம் 11 ஆம் திகதி நண்பகல் வரையும் வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

அதனால் இற்றைவரை நூற்றுக்கும் மேற்பட்ட சுயேச்சைக் குழுக்கள் இத்தேர்தலில் போட்டியிடவென கட்டுப்பணம் செலுத்தியுள்ளன. அரசியல் கட்சிகளும் இத்தேர்தலில் போட்டியிடுவதற்கான ஏற்பாடுகளில் தீவிரமாக ஈடுபட்டுள்ளன.

குறிப்பாக இத்தேர்தலில் போட்டியிடக்கூடிய அபேட்சகர்களை தெரிவு செய்வதற்கான நடவடிக்கைகளை அரசியல் கட்சிகளும் சுயேச்சைக் குழுக்களும் முன்னெடுத்துள்ளன. அதனடிப்படையில் சில கட்சிகளும் சுயேச்சைக் குழுக்களும் வேட்பாளர்களைத் தெரிவு செய்வதற்கான இறுதிக்கட்ட நேர்முகப் பரீட்சைகளை நடத்தி வருகின்றன. ஒரு சில கட்சிகளும் சுயேச்சைக் குழுக்களும் வேட்பாளர் பட்டியல்களை இறுதி செய்து இருக்கின்றன.

சில அரசியல் கட்சிகள் இத்தேர்தலில் போட்டியிடுவதற்காக கூட்டணி அமைத்துக் கொள்வதற்கான இறுதிக்கட்ட முயற்சிகளையும் முன்னெடுத்துள்ளன.

இவ்வாறான சூழலில் தூய்மையான அரசியலை பேணுமாறு வலியுறுத்திவரும் 'மார்ச் 12 அமைப்பு' இந்தப் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் அரசியல் கட்சிகளிடமும் சுயேச்சைக் குழுக்களிடமும் முக்கிய கோரிக்கையை முன்வைத்து இருக்கிறது.

அந்தக் கோரிக்கையில், குற்றவியல் தவறுகள் அற்றவர்களையும், இலஞ்ச ஊழல் மோசடிகளில் சம்பந்தப்படாதவர்களையும், போதைப்பொருள் விற்பனை உள்ளிட்ட குற்றச் செயல்களில் ஈடுபடாதவர்களையும் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்கான அபேட்சகர்களாகத் தெரிவு செய்யுமாறு வலியுறுத்தப்பட்டுள்ளது. இந்தக் கோரிக்கையை பல தரப்பினரும் வரவேற்றுள்ளனர்.

ஜனநாயக விழுமியங்கள் செழித்தோங்கவும் பலமடையவும் இத்தகைய செயற்பாடுகள் முற்றாகத் தவிர்க்கப்பட வேண்டும். அதேநேரம் கடந்த காலங்களை விடவும் இம்முறை, கற்றறிந்தவர்களுக்கு பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட வாய்ப்பளிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை மக்கள் மத்தியில் பரவலாக எழுந்துள்ளது. அத்தோடு அரசியல் அதிகாரத் துஷ்பிரயோகத்திலும் ஊழல் மோசடிகளிலும், போதைப்பொருள் விற்பனை உள்ளிட்ட குற்றங்களிலும் சம்பந்தப்பட்டவர்களுக்கும் இத்தேர்தலில் போட்டியிட வாய்ப்பளிக்கப்படலாகாது என்ற எதிர்பார்ப்பும் மக்களிடம் காணப்படுகிறது.

ஏனெனில் சுதந்திரத்தின் பின்னர் இற்றைவரை இந்நாடு கடந்து வந்த பாதையே மக்கள் மத்தியில் இத்தகைய எதிர்பார்ப்பை ஏற்படுத்தி இருக்கிறது.

இரு வருடங்களுக்கு முன்னர் இந்நாடு பாரிய பொருளாதார வீழ்ச்சிக்கு உள்ளானது. அதன் காரணத்தினால் மக்கள் பலவிதமான நெருக்கடிகளுக்கும் அசௌகரியங்களுக்கும் முகம்கொடுத்தார்கள். நாட்டில் வரிசை யுகம் தோற்றம் பெற்றது. இந்நாட்டின் அண்மைக்கால வரலாற்றில் இத்தகைய நெருக்கடிகளுக்கும் அசௌகரியங்களுக்கும் இந்நாடும் மக்களும் முன்னொருபோதும் முகம்கொடுக்கவில்லை.

இவ்வாறான துர்ப்பாக்கிய நிலைக்கு இந்நாடு உள்ளாக கடந்த காலங்களில் நாட்டில் அதிகரித்துக் காணப்பட்ட ஊழல் மோசடிகளும், அதிகார துஷ்பிரயோகமும், வீண்விரயங்களும்தான் காரணங்களாகும். இது பரவலாக ஏற்றுக் கொள்ளப்பட்ட உண்மை. அதனால் இவற்றை ஒழித்துக்கட்டுவதில் மக்கள் உறுதியாக உள்ளனர். குறிப்பாக கடந்த காலங்களில் இத்தகைய செயற்பாடுகளில் ஈடுபட்டவர்கள் மீண்டும் அத்தகைய செயற்பாடுகளில் ஈடுபட இடமளிப்பதில்லை என்ற கருத்தையும் கொண்டுள்ளனர்.

ஏனெனில் ஊழல் மோசடி, பொதுச்சொத்துக்கள் வீண்விரயம், அதிகார துஷ்பிரயோகம் என்பவற்றுக்கு வாய்ப்பளிக்கும் போது மக்கள்தான் நெருக்கடிகளுக்கும் பாதிப்புகளுக்கும் முகம்கொடுப்பர். மாறாக அவற்றில் ஈடுபட்டவர்கள் அல்லர். அதுவே கடந்த நெருக்கடியின் போதும் ஏற்பட்டது.

அதனால் நாட்டில் மீண்டும் பொருளாதார வீழ்ச்சி ஏற்பட்டு விடக்கூடாது என்பதில் மக்கள் உறுதியாக உள்ளனர். அதேநேரம் பொருளாதார மறுமலர்ச்சியும் சுபீட்சமும் ஏற்பட வேண்டும். தொடர்ந்தும் பின்னடைவுக்கு உள்ளான நாடாக இருக்க முடியாது என்ற எதிர்பார்ப்பும் மக்களிடம் காணப்படவே செய்கிறது. அதனால் ஊழல் மோசடி, அதிகார துஷ்பிரயோகம், வீண்விரயம் என்பவற்றை ஒழிப்பது இன்றியமையாததாகும். அது நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கு பக்கத்துணையாக அமையும்.

அத்தோடு ஜனநாயகம் வலுப்பெறுவதற்கும் முன்னேற்றமடையவும் ஊழல் மோசடி, அதிகார துஷ்பிரயோகம், வீண்விரயம் என்பன தடைக்கற்களாக விளங்குகின்றன. இவை ஜனநாயகத்தின் வீழ்ச்சிக்கு பங்களிக்கக்கூடியவை.

இந்நிலையில், பாராளுமன்றத் தேர்தலுக்கான அபேட்சகர்கள் தெரிவு செய்யப்படும் தற்போதைய சூழலில் மார்ச் 12 இயக்கம், அரசியல் கட்சிகளிடமும் சுயேச்சைக் குழுக்களிடமும் முன்வைத்துள்ள கோரிக்கை முக்கியத்துவம் பெற்றதாக விளங்குகிறது. அதனால் இக்கோரிக்கை தொடர்பில் அரசியல் கட்சிகளும் சுயேச்சைக் குழுக்களும் கவனம் செலுத்தி செயற்பட முன்வர வேண்டும். அது காலத்திற்கு அவசியமான கோரிக்கையாக உள்ளது.

editor.tkn@lakehouse.lk



# பொதுத்தேர்தலை எதிர்கொள்வதற்கு தயாராகிறோம்!

## முன்னாள் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க பேட்டி

'பொதுத்தேர்தலுக்கு எவ்வாறு முகம்கொடுப்பது என்பது குறித்து தற்போது ஆலோசித்து வருகிறோம். விரைவில் இறுதி முடிவு எடுக்கப்படும். கூட்டணியொன்று அமையும் என்று எதிர்பார்க்கிறோம். இந்த நாட்டில் வலுவான எதிர்க்கட்சியை உருவாக்க வேண்டும். அப்போதுதான் ஜனநாயகத்தைக் காப்பாற்ற முடியும். அப்போது அரசு செய்யும் நல்ல காரியங்களுக்கு ஆதரவு தெரிவிக்கலாம், பிழையானதை எதிர்க்கலாம்'. இவ்வாறு பொதுஜன பெரமுனவின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், முன்னாள் அமைச்சருமான பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார். எமக்கு வழங்கிய பேட்டியின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். "மொட்டு கட்சியின் வாக்குகள் திசைக்காட்டிக்குச் சென்றது முன்னாள் ஆதரவாளர்களின் விரக்தியினாலாகும்" என்றும் அவர் குறிப்பிட்டார்.

***கேள்வி:* அன்று 69 இலட்சம் வாக்காளர்களைக் கொண்ட கட்சியிலிருந்து பிரிந்து சென்று நீங்களும் சிலரும் முன்னாள் ஜனாதிபதிக்கு ஆதரவளித்தீர்கள். ஆனால் எதிர்பார்த்த அளவு வாக்குகள் கிடைக்கவில்லையல்லவா?**

**பதில்:** ஜனாதிபதித் தேர்தலில் இரண்டு குழுக்களே தமது வாக்காளர் எண்ணிக்கையை அதிகரித்துள்ளன. தேசிய மக்கள் சக்தியும், ரணில் விக்கிரமசிங்கவுக்கு வாக்களித்த மொட்டு குழுவுமே வாக்காளர் எண்ணிக்கையை அதிகரிக்கக் காரணமாகியுள்ளன. இம்முறை தேசிய மக்கள் சக்தி தனது வாக்காளர் எண்ணிக்கையை 3% இல் இருந்து 42% ஆக அதிகரித்துள்ளது. ஆனால் பதிவான வாக்குகளில் 33 வீதத்தையே பெற்றுள்ளனர். ரணில் விக்கிரமசிங்க கடந்த பொதுத்தேர்தலில் பெற்ற 2 இலட்சம் வாக்குகளில் இருந்து இம்முறை 23 இலட்சம் வாக்குகளைப் பெற்றுள்ளார். அப்படி இருந்தும் கடந்த முறை பெரும்பான்மையைப் பெற்ற மொட்டு தரப்பின் வாக்கு எண்ணிக்கை இம்முறை 2.5% ஆகக் குறைந்துள்ளதுடன் ஐக்கிய மக்கள் சக்தியின் வாக்குகளும் குறைந்துள்ளன.

**கேள்வி: அமைச்சர்களும் பாராளுமன்ற உறுப்பினர்களும் கட்சியை விட்டு வெளியேறி இரண்டு பிரதான கட்சிகளுடன் இணைந்தாலும், எதிர்பார்த்த பெரும்பான்மை வாக்குகள் கிடைக்கவில்லை என்பது உறுதியல்லவா?**

**பதில்:** முன்னாள் ஜனாதிபதியின் வாக்குகள் எண்ணிக்கை மொட்டுக்கட்சியின் வாக்குகளாலேயே அதிகரித்தன. இந்தக் குழு இல்லாமல் என்னால் நாட்டை மீட்க முடியாது என அவர் மேடையில் கூறினார். இதனாலேயே எஞ்சிய காலத்திற்கும் நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டுமாயின் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்க வேண்டும் என நம்பினோம். அரசாங்கத்திற்கு ஆதரவளித்த எமது பாராளுமன்ற உறுப்பினர்கள் நாட்டை மீளக்கட்டியெழுப்புவதற்கு ஒன்றிணைந்து செயற்படுவது எமக்கு உண்மையிலேயே மகிழ்ச்சியளிக்கிறது.

**கேள்வி: இம்முறை தேசிய மக்கள் சக்தியின் வாக்காளர் எண்ணிக்கை அதிகரிப்பதற்கு மொட்டுக்கட்சியின் பிளவடைந்த வாக்குகளே காரணம் என பலரும் கூறுகின்றனரே?**

### கூட்டணியொன்று உருவாகும்

**பதில்:** மொட்டு கட்சியின் பல வாக்குகள் திசைகாட்டிக்குச் சென்றன. அதற்கு முன்னாள் கட்சி ஆதரவாளர்களின் விரக்தியே காரணம். மிதக்கும் வாக்குகள் காரணமாக தேசிய மக்கள் சக்தியின் அடிப்படை வாக்காளர் தளம் 3% இலிருந்து 42% ஆக அதிகரித்துள்ளது. அதே அலைதான் வேறு வழியில் செல்கிறது. நாட்டு மக்களின் நடத்தை தொடர்பான முன்னுதாரணங்கள் எங்களிடம் உள்ளன. போராட்டத்தால் மக்கள் மத்தியில் விரக்தி ஏற்பட்டது. அந்தப் போராட்டத்தை அதிகபட்சமாக பயன்படுத்திக் கொண்டது தேசிய மக்கள் சக்தி.

**கேள்வி: முன்னாள் ஜனாதிபதிக்கு உரிய நன்றியை தெரிவிக்கவில்லை என்ற குற்றச்சாட்டு உள்ளதல்லவா?**

**பதில்:** இன்று திசைகாட்டியின் தலைவர்கள் கூட ரணில் விக்கிரமசிங்க ஆற்றிய பங்கை பாராட்டுகின்றனர். அறிவார்ந்த மக்கள் தேர்தலில் நன்றி தெரிவித்தனர். பொருளாதாரம் பற்றி தெரியாதவர்கள் வேறு வழியின்றி மற்றைய பக்கத்திற்கு வாக்களித்தனர். முன்னாள் ஜனாதிபதியின் பணிகளில் நாங்கள் அங்கம் வகித்ததில் மகிழ்ச்சி அடைகிறோம்.

**கேள்வி: இரு தரப்பும் ஒன்று சேர்ந்து தேர்தலில் போட்டியிட்டிருந்தால் வெற்றி கிடைத்திருக்காதா?**

**பதில்:** போராட்டத்துக்குப் பிறகு ஏற்பட்ட சூழ்நிலையில், மொட்டு கட்சியின் மீது மக்களிடையே வெறுப்பு ஏற்பட்டது. ஜனாதிபதித் தேர்தலில் தாம் விரும்பிய கட்சிக்கு ஆதரவளிக்க விரும்புவோரை அனுமதித்து மொட்டுக்கட்சி அமைதி காத்திருக்க முடியும். 2022 இல் அன்றைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சொன்னதை செய்யாமல் இருந்திருந்தால் மாற்றுவழிக்கு சென்றிருக்க முடியும். ஆனால் அவர் சொன்னதை செய்து காட்டினார்.

**கேள்வி: எதிர்காலத்தில் பொதுத்தேர்தலை சந்திக்க கூட்டணி சேர்வீர்களா? முன்னாள் ஜனாதிபதி ரணில் தலைமையில் அது நடக்குமா?**

**பதில்:** பொதுத்தேர்தலுக்கு எப்படி முகம்கொடுப்பது என்பது குறித்து தற்போது ஆலோசித்து வருகிறோம். விரைவில் இறுதி முடிவு எடுக்கப்படும். கூட்டணி அமையும் என எதிர்பார்க்கிறோம். இந்த நாட்டில் வலுவான எதிர்க்கட்சியை உருவாக்க வேண்டும். அப்போதுதான் ஜனநாயகத்தை காப்பாற்ற முடியும். அப்போது அரசு செய்யும் நல்ல காரியங்களுக்கு ஆதரவு தெரிவிக்கலாம், பிழையானதை எதிர்க்கலாம்.

**கேள்வி: பொதுஜன பெரமுனவில் இருந்து விலகியவர்களை மீண்டும் இணைத்துக்கொள்ள மாட்டோம் என்று அக்கட்சியின் பொதுச்செயலாளர் தெரிவித்துள்ளார். இதில் உங்கள் கருத்து என்ன?**

**பதில்:** இந்த நேரத்தில் மொட்டு கட்சிக்கு செல்ல வேண்டிய அவசியம் இல்லை. மொட்டு கட்சியின் 2.5% வாக்குப்பதிவு குறையுமே தவிர அதிகரிக்காது. அதைவிட நமது எம்.பிக்கள் பலரும் நட்சத்திரத்துடன் இணைந்துள்ளனர். நட்சத்திரம் புதிய கட்சி மற்றும் புதிய கொள்கையுடன் செல்லும் கட்சி என்பதால் அங்கு செல்ல விரும்புகிறார்கள்.

**கேள்வி: நீங்கள் திலித் ஜயவீரவின் கட்சியுடன் கூட்டணி சேருவது பற்றிக் கூறுகிறீர்களா?**

**பதில்:** மொட்டு கட்சியின் மீது எங்களுக்கு நம்பிக்கை இல்லை. அவர்கள் நியமிப்பவர்களுக்கு அங்கீகாரம் இல்லை. மொட்டு கட்சி பெற்றுள்ள வாக்குகளின் அடிப்படையில் தேசியப் பட்டியலிலிருந்து எந்தவொரு பாராளுமன்ற உறுப்பினரும் நியமிக்கப்பட வாய்ப்பில்லை. நாம் கிண்ணம் என்னும் கட்சியை அமைத்துள்ளோம். கட்சியாக தனித்து போட்டியிட்டால் கட்சி பலத்தை இழக்கும். அதனால்தான் நாம் ஒன்றுபட வேண்டும். அதற்கு, பொதுவான சின்னத்தின் மூலம் போட்டியிட வேண்டும். நாம் அனைவரும் போட்டியிடக் கூடிய ஒரு தளம் தயாரிக்கப்பட வேண்டும்.

**சுபாஷினி ஜயரத்ன...**
தமிழில்: வீ.ஆர்.வயலட்

# நாட்டை ஒருசில நாட்களுக்குள் தூய்மையாக்கிவிட முடியாது!

## தேசிய மக்கள் சக்தியின் மட்டக்களப்பு மாவட்ட செயற்பாட்டாளர் எம்.யு. கரீம் ரகுமான்



'முழுமையாக குட்டையில் ஊறியுள்ள நாட்டை ஒருசில நாட்களில் தூய்மையாக்கிவிட முடியுமென நினைக்கக் கூடாது. மக்கள் சற்று பொறுமையாக இருந்து கவனிக்க வேண்டும்'. இவ்வாறு கூறுகிறார் தேசிய மக்கள் சக்தியின் மட்டக்களப்பு மாவட்ட செயற்பாட்டாளரான ஏறாவூரைச் சேர்ந்த புஹாரி முஹமட் என்றழைக்கப்படும் எம். யு. கரீம் ரகுமான். 'இனவாதமற்ற போக்கு, சமத்துவ சிந்தனை போன்ற ஜே.வி.பியின் கொள்கைகளால் கவரப்பட்டதன் காரணமாகவே கடந்த சுமார் இருபது வருட காலமாக கட்சியின் தொண்டனாகச் செயற்பட்டு வருகின்றேன். ஜே.வி.பியின் கொள்கைகளை முழுமையாக ஏற்றுச் செயற்பட்டு வருகின்றேன்' எனவும் எம். யு. கரீம் ரகுமான் தெரிவித்தார். அவர் தனது அரசியல் செயற்பாடுகள் குறித்து தினகரனுடன் கருத்துகளைப் பகிர்ந்து கொண்டார். "கடந்த 2004 ஆம் ஆண்டு முதல் ஜே.வி.பியின் தொண்டனாக இருந்து வருகின்றேன். வருடந்தோறும் மேதினக் கூட்டத்தில் தவறாது பங்கேற்பேன். அக்கட்சி மீதான கொள்கைப் பிடிப்பே இதற்கான காரணம்" என்றும் அவர் தெரிவித்தார்.

**கேள்வி: உங்களது அரசியல் தொடர்பை எவ்வாறு ஆரம்பித்தீர்கள்?**

**பதில்:** மேதினக் கூட்டத்தில் பங்கேற்பதனால் கட்சித் தொண்டர்களின் நட்பையும்

நன்மதிப்பையும் பெற்றுக் காண்டேன். 2018 இல் உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் போட்டியிட் டேன். அதன்மூலம் நேரடி அரசியலில் அறிமுகமானேன். பின்னர் 2 019 ஆம் ஆண்டில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் அனுர குமார திசாநாயக்கவுக்கு ஆதரவாக பிரசார ப் பணியில் ஈடுபட்டேன். அதே ஆண்டில் பொதுத்தேர்தலில் நானும் போட்டியிட்டேன். நாங்கள் சிறிய குழுவாகவே இருந்தோம். அப்போது மட்டக்களப்பு மாவட்டத்தில் எமது கட்சி சுமார் 1350 வாக்குகளைப் பெற்றது. அதையடுத்து 2023 இல் மீண்டும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் செய்தோம்.

**கேள்வி: கிழக்கு மாகாணத்தில் பரிச்சயமில்லாத ஜே.வி.பியை புதிதாக அறிமுகம் செய்யும் போது மக்களின் உணர்வுகள் எவ்வாறு காணப்பட்டன?**

**பதில்:** நாம் பிரசாரப்பணிக்காக வீடுவீடாகச் சென்றோம். அப்போது அனைவரும் எம்மை ஓரக்கண்ணால் பார்த்தார்கள். பரிகாசம் செய்தார்கள். நாங்கள் அவற்றைப் பொருட்படுத்தவில்லை. இடைவிடாது எமது பணியைத் தொடர்ந்தோம். தேர்தல் தோல்வியில் நாங்கள் துவண்டு விடவில்லை.

**கேள்வி: பிரதேசத்திலே பெரும்பான்மையான மக்கள் வெவ்வேறு கட்சிகளுக்குப் பின்னால் நின்ற வேளையில் நீங்களும் உங்களது குழுவினரும் அறிமுகமில்லாத கட்சியுடன் இருந்ததற்கான காரணம் என்ன?**

**பதில்:** நாட்டில் மாறிமாறி எந்த ஆட்சிவந்தாலும் அதிகமான அரசியல்வாதிகள் கட்சி தாவினார்கள். நாங்கள் அதனை விரும்பவில் லை. அவர்களது அரசியல் கொந்துறாத்து, கொமிஷன் மற்றும் ஏமாற்றும் விடயங்களையே அடிப்படையாகக் கொண்டிருந்தது. இவற்றை நாம் முற்றாக வெறுத்திருந்தோம். ஊழலற்ற, சமத்துவ, சிந்தனை கொண்ட இனவாதம் இல்லாத கொள்கை தேசிய மக்கள் சக்திக்கு இருப்பதனால் அதில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம்.

**கேள்வி: பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் ஆசை உங்களுக்கு உள்ளதா? உங்களது கட்சிக்கு பெரும்பான்மை ஆசனம் கிடைக்கும் என்ற நம்பிக்கை இருக்கிறதா?**

**பதில்:** இந்தத் தேர்தலில் போட்டியிட எனக்கு எள்ளளவும் ஆசை கிடையாது. யார் போட்டியிட வேண்டும் என்பதைக் கட்சியே தீர்மானிக்கும். இம்முறை பொதுத்தேர்தலில் தேசிய மக்கள் சக்திக்கே பெரும்பான்மை ஆசனம் கிடைக்கும். இந்தத் தேர்தலில் எமது கட்சியில் போட்டியிடுவதற்கு பலர் போட்டி போட்டுக் கொண்டு முன்வருகிறார்கள். ஏனைய கட்சிகள் வேட்பாளர்களைத் தேடி அலையும் நிலையைப் பார்க்கின்றோம். எமது வேட்பாளர்களை கட்சி அடையாளப்படுத்தும் என்ற நம்பிக்கை எமக்குண்டு.

**கேள்வி: நாட்டு மக்களுக்காக பொதுவாக எதுவும் சொல்ல விரும்புகிறீர்களா?**

**பதில்:** சுமார் எழுபத்தைந்து ஆண்டு காலமாக எமது நாட்டில் மாறிமாறி ஆட்சிசெய்த அரசாங்கங்கள் ஊழலையும் மோசடிகளையும் மலினப்படுத்தியுள்ளன. இந்த நிலைமை மாற்றப்பட வேண்டுமென புதிய தலைமுறையினர் உள்ளடங்கலாக அனைவரும் இப்போது ஒருமித்த முடிவுக்கு வந்துள்ளனர். இது சுபசகுனமாகும். எனவே, அரசாங்கத்துக்கு ஒத்துழைப்பு வழங்கும் மனோபக்குவத்துடன் அனைவரும் செயற்பட வேண்டும். முழுமையாக குட்டையில் ஊறியுள்ள நாட்டை ஒருசில நாட்களில் தூய்மையாக்கிவிட முடியுமென நினைக்கக் கூடாது. மக்கள் சற்று பொறுமையாக இருந்து கவனிக்க வேண்டும்.

### 'மக்கள் சற்றுப் பொறுமை காக்க வேண்டும்'

**நாஸர்...**
(ஏறாவூர் நிருபர்)



# அமைச்சரவை முடிவுகள்

**01. இலங்கை மற்றும் ரஷ்யாவுக்கும் இடையிலான சுங்க நடவடிக்கைகள் தொடர்பான ஒத்துழைப்பு மற்றும் பரஸ்பர நிர்வாக உதவிகளைப் பெற்றுக் கொள்கின்ற ஒப்பந்தம்**

இலங்கை அரசுக்கும் ரஷ்ய அரசுக்கும் இடையில் இடம்பெற்ற இருதரப்புப் பேச்சுவார்த்தைத் தொடரின் பின்னர் வெளிப்படையானதும் ஊகிக்கக் கூடிய சுங்க நடவடிக்கையின் மூலம் சட்ட ரீதியான வர்த்தக நடவடிக்கைகளுக்காக வசதிகளை வழங்குவதற்காக இருதரப்பு ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்கு 2021.11.15 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டிருப்பினும், குறித்த ஒப்பந்தத்தில் இதுவரை கையொப்பமிடப்படவில்லை. இருநாடுகளுக்கிடையில் காணப்படும் வர்த்தகத் தொடர்புகள் மூலம் உரித்தாகின்ற நன்மைகள் மற்றும் இருதரப்பு சுங்க ஒத்துழைப்புக்களில் மேலெழுந்து வரும் போக்குகளைக் கருத்தில் கொண்டு, குறித்த ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்காக நிதி, பொருளாதார அபிவிருத்தி, கொள்கை வகுப்பு, திட்டமிடல் மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சரான ஜனாதிபதி சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**02. காலநிலை மாற்றங்களால் அதிகரிக்கும் விளைவுகள் மூலம் இடர்களுக்கு ஆளாகக்கூடிய இலங்கை மற்றும் இந்திய சமூகங்களின் தாங்கு திறனை பலப்படுத்துவதற்கான பிராந்திய கருத்திட்டம்**

சுற்றாடல், வனசீவராசிகள், வனவளங்கள், நீர் வளங்கள், பெருந்தோட்டம் மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சு, ஐக்கிய நாடுகள் சபையின் உலக உணவுத் திட்டத்துடன் இணைந்து காலநிலை மாற்றங்களின் அதிகரிக்கின்ற விளைவுகள் மூலம் இடர்களுக்கு ஆளாகக்கூடிய இலங்கை மற்றும் இந்திய சமூகங்களின் தாங்குதிறனை பலப்படுத்துவதற்கான கருத்திட்டத்திற்கான முன்மொழிவு இசைவாக்கமடைதல் நிதியத்தின் அங்கீகாரம் கிடைத்துள்ளது. குறித்த கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தை இலங்கை மற்றும் உலக உணவுத் திட்டத்திற்கும் இடையில் கையொப்பமிடுவதற்கு சுற்றாடல், வனசீவராசிகள், வனவளங்கள், நீர் வளங்கள், பெருந்தோட்டம் மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.




**03. மார்ச்சன்ட் பாங்க் ஒஃப் ஸ்ரீலங்கா அன்ட் பினான்ஸ் பீஎல்சீ (MBSL) கம்பனிக்கான அடிப்படை வங்கித் தீர்வுகள் (Core Banking Solution) வழங்கல், தாபித்தல், ஒப்படைத்தல் மற்றும் பேணிச் செல்வதற்கான பெறுகையை வழங்கல்**

மார்ச்சன்ட் பாங்க் ஒஃப் ஸ்ரீலங்கா அன்ட் பினான்ஸ் பீஎல்சீ (MBSL) கம்பனிக்கான அடிப்படை வங்கித் தீர்வுகள் (Core Banking Solution) வழங்கல், தாபித்தல், ஒப்படைத்தல் மற்றும் பேணிச் செல்வதற்கான பெறுகைக்கான தேசிய போட்டி விலைமனுக்கோரல் முறைமையைக் கடைப்பிடித்து விலைமுறி கோரப்பட்டுள்ளது.

அதற்கிணங்க, குறித்த பெறுகையை வழங்குவதற்காக நிதி, பொருளாதார அபிவிருத்தி, கொள்கை வகுப்பு, திட்டமிடல் மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சரான ஜனாதிபதி சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**04. இத்தாலியின் மிலானோவில் 2024.10.09 தொடக்கம் 11 ஆம் திகதி வரை இடம்பெறும் TTG — 2024 சுற்றுலாக் கண்காட்சி வளாகத்தில் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கண்காட்சிக் கூடத்தை அமைத்தல்**

2024.10.09 தொடக்கம் 11 ஆம் திகதி வரை இத்தாலியின் மிலானோவில் இடம்பெறும் TTG–2024 சுற்றுலாக் கண்காட்சியில் சுற்றுலாத்துறையில் பங்கெடுக்கும் சுற்றுலாத்துறை முகவர்கள் மற்றும் ஹோட்டல் உரிமையாளர்கள் 25 பேர் பங்குபற்றுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

அதற்கமைய, நிலவுகின்ற மட்டுப்படுத்தப்பட்ட காலப்பகுதியைக் கருத்தில் கொண்டு, வைபவத்தின் ஏற்பாட்டுக் குழுவின் உத்தியோகபூர்வ கம்பனியான Prostand S.r.l இற்கு குறித்த சேவைகளை விநியோகிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளமையைக் குறிப்பிட்டு நிதி, பொருளாதார அபிவிருத்தி, கொள்கை வகுப்பு, திட்டமிடல் மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சரான ஜனாதிபதி சமர்ப்பித்துள்ள விடயங்களுக்கு அமைச்சரவை உடன்பாடு வழங்குவதற்குத் தீர்மானித்துள்ளது.

**06. ஜப்பான் கடன் வசதியின் கீழ் அமுல்படுத்தப்படவுள்ள இலங்கையின் நிலப்பரப்புசார் தொலைக்காட்சி மின்னணு ஒளிபரப்பு திட்டம் (Digital Terrestrial television Broadcasting)**

உலக போக்குக்கு ஏற்புடையதாக இலங்கை தொலைக்காட்சி ஒளிபரப்புகளை தற்போதுள்ள அனலொக் (Anolog) தொழில்நுட்பத்துக்குப் மாற்றீடாக மின்னணு (Digital) தொழில்நுட்பத்துடனான ஒளிபரப்புகளாக மாற்றம் செய்வதற்காக 2009 ஆண்டு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அதற்கமைய இலங்கைப் பிரஜைகளுக்கு மேலும் நன்மைகள் கிடைக்கும் வகையில் நிலப்பரப்புசார் தொலைக்காட்சி எண்மியப்படுத்தல் திட்ட அமுலாக்கலை உறுதி செய்வதற்காக தற்போதைய தேவைப்பாடுகள் மற்றும் தொழில்நுட்ப விடயங்களை ஆய்வுசெய்து அவதானிப்பு மற்றும் விதந்துரைகளுடனான அறிக்கையை அமைச்சரவைக்கு சமர்ப்பிப்பதற்காக ஊடகத்துறைக்கு பொறுப்பான அமைச்சு செயலாளரின் தலைமையிலும், பிற தொடர்புடைய நிறுவன பிரதிநிதிகளையும் உள்ளடக்கிய விசேட குழுவை நியமிப்பதற்காக புத்தசாசன, மத மற்றும் கலாசார விவகார, தேசிய ஒருமைப்பாட்டு, சமூகப் பாதுகாப்பு மற்றும் ஊடகத்துறை அமைச்சரால் சமர்ப்பிக்கப்பட்ட யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது.

**08. சிவில் பாதுகாப்பு திணைக்கள பணிப்பாளர் நாயகத்தின் சேவையை நீடித்தல்.**

2023.09.14 திகதியிலிருந்து சிவில் பாதுகாப்பு திணைக்கள பணிப்பாளர் நாயகம் பதவிக்கு எயார்வைஸ் மார்ஷல் ஆர்.எஸ். பியன்விலவை நியமிப்பதற்கான அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. குறித்த நியமன காலப்பகுதி 20240913 திகதியில் முடிவடைந்துள்ளது.

எனவே, மேற்குறித்த நபரை 2024.12.31 திகதி வரை சிவில் பாதுகாப்பு திணைக்கள பணிப்பாளர் நாயகம் பதவியில் தொடர்ந்தும் சேவையில் ஈடுபடுத்துவதற்காக பாதுகாப்பு அமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது.

**09. ஆட்பதிவு ஆணையாளர் நாயகம் பதவியில் கடமையாற்றுவதற்காக நியமனம் செய்தல்**

2024.09.24 திகதியிலிருந்து ஆட்பதிவு திணைக்கள ஆணையாளர் நாயகம் பதவி வெற்றிடமாக உள்ளது. அதற்கமைய தற்போது பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் மேலதிக செயலாளராக கடமையாற்றும் இலங்கை நிர்வாக சேவையின் விசேடதர அலுவலரான திருமதி எம்.எஸ்.பீ.சூரியப்பெருமவை உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் ஆட்பதிவு ஆணையாளர் நாயகம் பதவியில் கடமைகளை மேற்கொள்வதற்காக நியமிப்பதற்கான பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரால் சமர்ப்பிக்கப்பட்ட யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது.

**10. இலங்கை மதுவரித் திணைக்களத்தின் மதுவரி ஆணையாளர் நாயகம் பதவிக்கான நியமனம்**

இலங்கை மதுவரித் திணைக்களம் அரசின் பிரதான வருமான சேகரிப்பு நிறுவனமாகும். மேற்குறித்த நிறுவனத்தின் வினைத்திறன் மற்றும் நல்லாளுகை அரச வருமானத்தில் நேரடியாக தாக்கம் செலுத்துகிறது.

அதற்கமைய, தற்போது மதுவரி ஆணையாளர் நாயகம் பதவியில் ஒப்பந்த அடிப்படையில் சேவையாற்றும் திரு. ஜே.எம். குணசிறி அவர்களது சேவையை உடனடியாக அமுலாகும் வகையில் இரத்து செய்வதற்கும், ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதியின் மேலதிக செயலாளராக (நிறுவன ஒருங்கிணைப்பு II) சேவையாற்றும் உள்நாட்டு இறைவரி சேவையின் விசேடதர அலுவலர் திரு. யு.டி.என். ஜயவீர அவர்களை உடனடியாக அமுலாகும் வகையில் மதுவரி ஆணையாளர் நாயகம் பதவி கடமைகளை நிறைவேற்றுவதற்காக நியமிப்பதற்கும் நிதி, பொருளாதார அபிவிருத்தி, கொள்கை வகுப்பு, திட்டமிடல் மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது.

'ஒரு வழக்கறிஞரின் இலக்கிய யாத்திரை'

## வரலாற்று ஆவணமாக்கப்பட வேண்டிய தமிழறிஞர் செல்லத்தம்பி சிறீக்கந்தராசா

லண்டனின் இலக்கிய மேடைகளில் ஆழ்ந்த தமிழ்ப் புலமையோடும் ஆற்றொழுக்கான நடையோடும் பேசவல்லவராக வழக்கறிஞர் செல்லத்தம்பி சிறீக்கந்தராசா அவர்களை நான் பார்த்திருக்கிறேன். 'ஆங்கிலம் பிறந்த கதையும் வளர்ந்த கதையும்' என்ற நூல் அவரது ஆழ்ந்த வாசிப்பையும் பரந்த தேடலையும் கொண்ட நூலாகும்.


ஆவணப்படத் தயாரிப்பாளர் சிவ ஸ்ரீதரனுக்கு பொன்னாடை சூட்டப்பட்ட போது...

அண்மையில் அவரது 85ஆவது பிறந்தநாள் ஆவணத் தொகுப்பை பார்வையிட்டபோது நான் வியந்தேன். தமிழர் மத்தியில் வரலாற்று ஆவணமாக்கப்பட வேண்டியவர்களில் சிறீக்கந்தராசா மிக முக்கியமானவர் என்பதனை என்னால் உணர முடிந்தது. இவ்வேளை எனது தந்தை அகஸ்தியர் பாரீசில் வாழ்ந்தவேளை இற்றைக்கு இருபத்தொன்பது வருடங்களுக்கு முன்னர் அவர் குறித்த ஆவணப் பதிவொன்றை விமர்சகர் மு.நித்தியானந்தன் அவர்கள் கலைச்செல்வனுடன் இணைந்து ஆவணப்படுத்தியிருந்தார்.

நூலகங்களில் பார்த்த ஓலைச்சுவட்டை இந்தப் பெரியவர் வீட்டில் பாதுகாத்து வைத்திருக்கிறார் என்பது புதுமையானது. 250 வருடங்களுக்கு முன்னரான இத்தகைய ஏட்டோலையை தனது ஒன்பது வயதிலேயே வாசிப்பதில் திறமை கொண்டிருந்தவர் அவர்.

பருத்தித்துறை புலோலி கிழக்கில் வழக்கறிஞர் மாணிக்கம் செல்லத்தம்பிக்கும் காந்திமதி செல்லத்தம்பிக்கும் மகனாகப் பிறந்தவர் வழக்கறிஞர் செல்லத்தம்பி சிறீக்கந்தராசா. ஆரம்பத்தில் புலோலி தெற்கிலுள்ள வேலாயுதம் பள்ளியில் தனது ஆரம்பக் கல்வியை மேற்கொண்டிருந்தார். அப்பள்ளியில் இவர் காத்திகேசு வாத்தியார், முத்துக்குமார் வாத்தியார், வைரமுத்து வாத்தியார் போன்ற தலைசிறந்த தமிழ் ஆசிரியர்களிடம் பயின்று மிகச்சிறந்த மாணவனாகத் திகழ்ந்திருக்கிறார்.

பின்னர் இந்தியாவில் சென். ஜோசஃப் கல்லூரியில் கல்வியை மேற்கொண்டபோது அருட்திரு. சிக்குவாரா என்ற மிகச் சிறந்த ஆங்கில விரிவுரையாளரின் கீழ் தனது ஆங்கிலத்தை மேன்மைப்படுத்தியதாகக் கூறுகின்றார் வழக்கறிஞர் சிறீக்கந்தராசா. பின்னர் விஞ்ஞானப் பட்டதாரியாகப் பட்டம் பெற்று இலங்கைக்குத் திரும்பினார்.

லண்டனிலே சட்டத்துறையில் பட்டம் பெற்று சட்டத்தரணியாகப் பணிபுரிந்தார். சட்டத்தரணியாக மட்டுமன்றி சிறந்ததொரு பேச்சாளர், சிறந்ததொரு எழுத்தாளர், சிறந்ததொரு மொழிபெயர்ப்பாளர். இத்தகைய பெரும் அறிஞரின் ஆவணப்படத்தை அவருடன் நெருக்கமான இலக்கிய உறவைக் பேணிவரும் மு.நித்தியானந்தன் மிக முக்கியமான தகவல்களோடு அதனை மிக அற்புதமாக நெறிப்படுத்தியிருப்பது தமிழ் மக்கள் அனைவராலும் பாராட்டப்பட வேண்டியதொன்றாகும்.

இலங்கை அரசியல் யாப்பை, இலங்கைக் குடியரசின் சட்ட அமைப்பை, ஜே.ஆர். ஜெயவர்த்தனாவின் புதிய அரசியல் அமைப்பை மொழிபெயர்த்துத் தந்துள்ளார். சட்டம் மாத்திரமன்றி தமிழ் இலக்கியம், அறிவியல், ஆங்கில மொழிபெயர்ப்பு என்று இருபதுக்கும் மேற்பட்ட நூல்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ள பெரிய அறிஞர் அவர். தமிழ் மக்கள் எல்லோரும் பெருமைப்பட வேண்டிய விடயம் அது.

அவரின் ஆளுமை நிறைந்த தோற்றம் நெருங்குவதற்குச் சற்று அறிவுப்பயத்தை ஏற்படுத்தினாலும் பழகுவதற்கு மிக எளிமையானவர் என அறியமுடிந்தது. இத்தகைய ஆளுமைமிக்க அறிஞரை தமிழ் மக்கள் அனைவர் சார்பிலும் பாராட்டிப் பெருமை கொள்கின்றேன். இன்னும் பல்லாண்டு நிறைந்த சுகத்தோடு அவர் சேவை விசாலிக்க வேண்டி இதயம் வாழ்த்துகிறது.

இந்த ஆவணப்படத்தைத் தயாரித்த சிறீதரன் தேர்ந்த ஒளிபரப்பாளராகத் தீபம் தொலைக்காட்சியில் திகழ்ந்தவர். 'நித்தி என்ற பேராசான்' என்ற ஆவணப்படத்தைத் விமர்சகர் மு. நித்தியானந்தனின் பவளவிழாவின் போது தயாரித்து பாராட்டுப் பெற்றவர். அதே சிறீதரன் வழக்கறிஞர், தமிழறிஞர் சிறீக்கந்தராசாவின் இந்த ஆவணப்படத்தையும் அற்புதமாக தனது கைவண்ணத்தால் அமைத்துத் தந்தமைக்கு தமிழ் உலகம் அனைவருமே இவரைப் பாராட்ட வேண்டும்.



**நவஜோதி ஜோகரட்னம்...**
**லண்டன்**

## அம்பாறை மாவட்டத்தில் தமிழ்க் கட்சிகளை ஒருங்கிணைக்கும் தொடர் முயற்சி தோல்வி!

### தமிழரசுக் கட்சி தனிவழி; சங்கு ஓரணியில்!

பாராளுமன்றத் தேர்தலில் இலங்கை தமிழரசுக் கட்சி தனிவழி செல்லும் தீர்மானத்தை எடுத்துள்ளதால், அம்பாறை மாவட்டத்தில் சிவில் அமைப்பினால் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட முயற்சி தோல்வியில் முடிவடைந்தது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் பொதுக் கட்டமைப்பாக செயற்பட்ட அமைப்புக்களில் ஒன்றான சிவில் அமைப்பு அம்பாறை மாவட்டத்தில் இந்த முயற்சியை தொடர்ச்சியாக முன்னெடுத்திருந்தது.

சிவில் அமைப்பினர் தமிழரசுக் கட்சி, ஈரோஸ் ஜனநாயக முன்னணி, ரெலோ, புளொட், ஈ பி ஆர் எல். எப், ஜனநாயக போராளிகள் கட்சி, தமிழ் தேசிய மக்கள் முன்னணி ஆகிய கட்சிகளுடன் தொடர்ச்சியாக பேசி வந்தனர்.



இக்கட்சிகளில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியானது சேர்ந்து பயணிக்க முடியாதெனவும், தமது கட்சியின் சின்னத்தை விட்டு கொடுக்க முடியாது எனவும் ஆரம்பத்தில் தெரிவித்திருந்தது.

தொடர்ச்சியாக ஏனைய ஆறு கட்சிகளுடன் இணக்கப்பாட்டை ஏற்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன.

கட்சிகளை ஒருங்கிணைக்கும் முயற்சிகளை பொதுக்கட்டமைப்பின் மத்திய குழு உறுப்பினரும் குடிசார் அமைப்பு, தமிழ் மக்கள் பொதுச்சபை ஆகியவற்றின் அம்பாறை மாவட்ட இணைப்பாளருமான இ.விக்னேஸ்வரன், அம்பாறை மாவட்ட சிவில் அமைப்பு தலைவரான கண. வரதராஜன் ஆகியோர் முன்னெடுத்து வந்திருந்தனர்.

இந்த தொடர் முயற்சியின் இறுதிக்கட்ட சந்திப்பு நேற்றுமுன்தினம் (07) மாலை காரைதீவு பொதுநூலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இதில் பங்குபற்றிய ஆறு கட்சிகளும் தமது நிலைப்பாட்டை இறுதியாக தெரிவித்திருந்தன.

குடிசார் அமைப்பின் அம்பாறை இணைப்பாளர் இ.விக்னேஸ்வரன் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில், "அம்பாறை மாவட்டத்தில் தமிழ் கட்சிகள் பிரிந்து போட்டியிடுவதால் தமிழ் ஆசனம் இழக்கப்படும் அபாயத்தை கருத்தில் கொண்டு மக்களின் எதிர்பார்ப்புக்கு ஏற்ப முதற்கட்டமாக தமிழ் தேசிய கட்சிகளை ஒருங்கிணைக்கும் முயற்சிகளை தொடர்ச்சியாக முன்னெடுத்திருந்தோம்.

கட்சிகளின் தலைமை மற்றும் அம்பாறை, திருகோணமலை மாவட்டங்களின் கட்சி பிரமுகர்களுடன் பேசியதன் அடிப்படையில் திருகோணமலை மாவட்டத்தில் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டமைப்பும் தமிழரசுக்கட்சியும் வீட்டு சின்னத்தில் போட்டியிட இணங்கியுள்ளதாக தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதே வேளை அம்பாறை மாவட்டத்தில் தமிழரசுக் கட்சியையும் இணைத்து சங்கு சின்னத்தில் போட்டியிட ஜனநாயக தமிழ் தேசிய கூட்டமைப்பு கோரிக்கை விடுத்திருந்தது. இதில் 07.10.2024 அன்று இடம்பெற்ற கலந்துரையாடலிலும் இணக்கம் ஏற்படவில்லை. அன்றைய கூட்டத்தில் பங்குபற்றிய ஆறு தமிழ் கட்சிகளும் எங்களுக்கும் ஊடகங்களுக்கும் முன்னிலையில் தமது இறுதி நிலைப்பாட்டை தெரிவித்தன.

இருக்கும் ஒருசில நாட்களுக்குள் அம்பாறை மாவட்ட தமிழ் மக்களின் நிலைமையை கருத்தில் கொண்டு முடிவுகளில் மாற்றம் வந்தால் நல்லதாக அமையும். பொது அமைப்பாக முடிந்தவரை முயற்சி செய்துள்ளோம்" என்றார்.

இலங்கை தமிழரசுக் கட்சியின் அம்பாறை பிரதிநிதிகளான க.ஜெயசிறில், அ.நிதான்சன் ஆகியோர் அங்கு கருத்துக் கூறுகையில், "தமிழரசுக்கட்சி வீட்டுச் சின்னத்தில் அம்பாறையில் போட்டியிட வேண்டுமென்பது எங்களின் முடிவு. இந்தச் சின்னத்தின் கீழ் ஏனைய தமிழ்த் தேசிய கட்சிகளை இணைத்து போட்டியிட தயார். ஆனால் எமது கட்சி சின்னத்தை விட்டுக் கொடுக்க முடியாது" என்றனர்.

ஏனைய ஐந்து கட்சிகளின் பிரதிநிதிகளான ரெலோ ஹென்றி மகேந்திரன், ஈரோஸ் இராஜேந்திரா, புளட் சங்கரி, ஈ.பி.ஆர்.எல்.எவ் புண்ணியநாதன், ஜனநாயக போராளிகள் சுமி ஆகியோர் கருத்துக் கூறுகையில், "நாங்கள் முடிந்தவரை விட்டுக்கொடுப்பை செய்துள்ளோம். அம்பாறை, திருகோணமலை மாவட்டங்களில் தமிழ்ப் பிரதிநிதித்துவத்தை இழக்கக் கூடாது என்பதற்காக விட்டுக்கொடுப்புடன் பொறுமையாக செயற்பட்டுள்ளோம். திருகோணமலையில் வீடு சின்னத்தில் போட்டியிட இணங்கினோம். அம்பாறையில் சங்கு சின்னத்தில் போட்டியிட நாங்கள் ஐந்து கட்சிகள் தயார். தமிழரசுக் கட்சியை அழைத்திருந்தோம் இன்றுவரை (07) நல்ல முடிவுக்காகக் காத்திருந்தோம். தமிழ் அரசுக் கட்சி தமது வீட்டுச் சின்னத்தில்தான் அம்பாறையில் போட்டியிட வேண்டும் என்று எங்களை அழைத்தார்கள். இதை ஏற்றுக்கொள்ள முடியாது .



நாங்கள் விட்டுக்கொடுப்புடன் செயற்பட்டும் அவர்கள் விட்டுக்கொடுப்புடன் செயற்பட வில்லை. நாங்கள் ஐந்து கட்சிகள் ஒன்றிணைந்துள்ளோம். ஆகவே இனி நாங்கள் எங்கள் நிலைப்பாட்டை எடுத்துள்ளோம். சங்கு சின்னத்தில் போட்டியிடவுள்ளோம்" என்றனர்.

**வி.ரி. சகாதேவராஜா...**
**(காரைதீவு குறூப் நிருபர்)**

# டிஸ்கோ ராஜா பௌண்டேஷன் வழங்கும் விஜயதசமி மகாபூஜை

டிஸ்கோ ராஜா பௌண்டேஷன் வழங்கும் விஜயதசமி மகாபூஜை நிகழ்வுடன் கலைஞர் டிஸ்கோ ராஜாவின் நாற்பதாண்டு கால கலைச் சேவையின் முன்னோட்ட நிகழ்வு எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 12ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிமுதல் பகல் 12மணிவரை கொழும்பு பொரளை ருகுணுகலா மண்டபத்தில் வெகு சிறப்பாக நடைபெற உள்ளது. இது சிரேஷ்ட கலைஞர்கள், வளர்ந்து வரும் அத்தனை கலைஞர்களுக்குமான திறந்த அழைப்பிதழ் என குறிப்பிட்டுள்ள ஏற்பாட்டாளர்கள், அனைவரைருக்கும் அழைப்பு விடுத்துள்ளனர். இந்நிகழ்வில் டிஸ்கோ ராஜாவின் புதிய திரைப்பட பூஜை மற்றும் புதிய நடன வகுப்புகளுக்கான ஆரம்பமும் இடம்பெறும்.

## ரஷ்யாவின் எண்ணெய் முனையம்...

முனையத்தின் மீது, அந்நாட்டின் ஏவுகணைப் படைகள் ஒரே இரவில் தாக்குதல் நடத்தியதாக கியூவிலுள்ள உக்ரேனிய அதிகாரிகள் தெரிவித்தனர்.

தாக்குதலில் உயிர்ச் சேதம் ஏதுவும் ஏற்படவில்லை.

தீயினால் ஃபியோடோசியாவிலிருந்து 300 பேர் வெளியேற்றப்பட்டுள்ளதாக, ரஷ்ய அரசு நடத்தும்Tass செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதற்கிடையில், மொஸ்கோவில் உள்ள ரஷ்ய பாதுகாப்பு அமைச்சகம், உக்ரேனினால் ஏவப்பட்ட 21 ஆளில்லா விமானங்களில் 12 விமானங்களை ஒரே இரவில் தீபகற்பத்தில் சுட்டு வீழ்த்தியதாக கூறியுள்ளது.

## பயணிகள் பஸ்கள் மீது...

சொகுசு பஸ் மீதும், பதுளையிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் சென்ற பஸ் மீது, கிளிநொச்சியில் வைத்தும் கற்களை வீசி தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. அதேவேளை, இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பதுளை யாழ்ப்பாணம் பஸ் மீது பரந்தன் பகுதியில் வைத்து தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. தாக்குதல்களுக்கான காரணம் தொடர்பில் இதுவரை தெரியவில்லையென பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் விரிவான விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக கிளிநொச்சி, பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## வன்னி, யாழ். மாவட்டங்களில்...

தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். இதுபற்றித் தெரிவித்த அவர்: "ஈ.பி.டி.பிக்கு மக்கள் மத்தியில் அமோக வரவேற்பிருக்கிறது. எமக்கு தொலைபேசியிலும் நேரிலும் மக்கள் வாழ்த்துக்களை தெரிவித்து வருகின்றனர்.

நாம், பல அபிவிருத்தி திட்டங்களை இப்பிரதேசங்களில் மேற்கொண்டுள்ளோம். அதன் பிரதிபலிப்பாக எமக்கு இரண்டு ஆசனங்கள் இம்முறை வன்னி தேர்தல் தொகுதியில் கிடைக்கும்.

அதேபோல், யாழ்.தேர்தல் தொகுதியில் மூன்று ஆசனங்களை நாங்கள் கைப்பற்றுவோம். இதன் மூலமாக மக்களுக்கான அபிவிருத்தியை முன்னெடுப்போம்" என்றார்.

ஈ.பி.டி.பி கட்சியின் வன்னி தேர்தல் மாவட்டத்தில் முதன்மை வேட்பாளராக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் குலசிங்கம் திலீபன் நியமிக்கப்பட்டுள்ளார்.

அத்துடன், ஈழ மக்கள் ஜனநாயகக்கட்சி ஒன்பது மாவட்டங்களில் போட்டியிடவுள்ளதாக கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா அறிவித்துள்ளார்.

## பெரும்போக நெற் செய்கைக்கான...

விஜித ஹேரத் தெரிவித்துள்ளார். முதற்கட்டமாக அம்பாறை மாவட்டத்தில் இந்த உர மானியம் வழங்கும் செயற்திட்டம் ஆரம்பிக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

அதனையடுத்து பொலனறுவை மாவட்டம், அனுராதபுரம் மாவட்டம், மஹியங்கனை மற்றும் மகாவலி பிரதேசங்களில் உள்ள விவசாயிகளுக்கு இந்த உர மானியத்தை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று தகவல் திணைக்களத்தில் இடம்பெற்றது.

இதன் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார்.

பெரும்போக நெற் பயிர்ச் செய்கை ஆரம்பமாகவுள்ள நிலையில், விரைவாக இந்த உர மானியத்தை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## இ.தொ.காங்கிரஸிலிருந்து...

செய்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் தங்களது சுயநல அரசியலுக்காக கண்டி மக்களை அடகு வைத்த உறுப்பினர்களோடு இணைந்து, போட்டியிட தாம், தயார் இல்லை எனவும் அவர் அறிவித்துள்ளார்.

கட்சியின் தீர்மானத்துக்கமைவாக மக்களின் எதிர்பார்ப்புக்கு அப்பால் தன்னால் செயல்பட இயலாது என்பதால், இந்த முடிவை எடுத்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

தனக்கு வழங்கப்பட்ட பொறுப்பைச் சரிவரச் செய்து கடந்த தேர்தலில் இ.தொ.கா சார்பாக வெறும் மூன்று வாரங்களில் சுமார் 25 ஆயிரம் வாக்குகளை பெற்று மக்களின் நம்பிக்கையை வென்றேன்.

இம்மாவட்ட மக்களின் நலனுக்காக அரசாங்கத்தின் ஊடாகவும், அரச சார்பற்ற நிறுவனங்களின் ஊடாகவும் பல வேலைத்திட்டங்களை முன்னெடுத்துள்ளேன்.

மக்கள் தன் மீது வைத்துள்ள நம்பிக்கையை ஒரு போதும் இலங்கை தொழிலாளர் காங்கிரசுடனும், அதன் தலைமையை விமர்சித்த தலைமைகளோடும் சேர்ந்து தேர்தல் கேட்க தயார் இல்லை எனவும் தெரிவித்தே இப்பதவி விலகல் கடிதத்தை அவர் அனுப்பி வைத்துள்ளார்.

மக்களின் நலனுக்காகவே கட்சி தீர்மானங்களை மேற்கொள்ள வேண்டுமே தவிர, சில தனி நபர்களின் வளர்ச்சிக்காக மாத்திரமே கட்சி முடிவுகளை எடுக்க கூடாது என்பதையும் அவர் கடிதத்தில் சுட்டிக்காட்டி உள்ளார்.

தமக்கு வழங்கப்பட்ட பொறுப்புகளை செவ்வனே நிறைவேற்றியுள்ளதுடன், கட்சியின் இளைஞர் அணி உருவாக்கம் மற்றும் கட்சியினுடைய சர்வதேச தொடர்புகள், கண்டியில் இ.தொ.காவின் வளர்ச்சிக்கு அளப்பெரிய பங்களிப்பை வழங்கியுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின்...

இலங்கை ஏற்றுக்கொள்ளவில்லையென அவர் தெரிவித்துள்ளார்.

அமைச்சரவையின் தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டிலேயே அமைச்சர் விஜித ஹேரத் இதனை தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் தற்போதைய அமர்வில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தீர்மானத்தின் நகல்வடிவை நிராகரிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

எனினும் உள்நாட்டு பொறிமுறை மூலம் நல்லிணக்கம் உட்பட மனித உரிமை பிரச்சினைகளுக்கு தீர்வை காண்பது குறித்து அரசாங்கம் அர்ப்பணிப்புடனுள்ளதென அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை மனித உரிமை பேரவையுடனும், வழமையான மனித உரிமை பொறிமுறையுடனும், தொடர்ந்தும் ஒத்துழைப்பு அர்த்தபூர்வமான பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

இப்போது புதிய ஜனாதிபதி தெரிவு செய்யப்பட்டுள்ளார், தேர்தலின் பின்னர் புதிய அரசாங்கம் தெரிவு செய்யப்படுமென தெரிவித்துள்ள வெளிவிவகார அமைச்சரும் அமைச்சரவை பேச்சாளருமான விஜித ஹேரத், நாங்கள் எங்கள் நிலைப்பாட்டை ஜெனீவாவுக்கு தெரியப்படுத்துவோமென குறிப்பிட்டார்.

இந்த தீர்மானத்திலுள்ள பல விடயங்களை எங்களால் ஏற்றுக்கொள்ள முடியாது,மனித உரிமைகளை பாதுகாப்பதற்கு இலங்கை அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும்.

எனினும் இதற்கு காலம் தேவை, இன்று ஜெனீவாவில் இந்த நிலைப்பாட்டை தெரியப்படுத்துவோமென அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

## பொதுத்தேர்தல் நிறைவுடன்...

உள்ளூராட்சி சபைத் தேர்தலை விரைவாக நடத்துமாறு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளதையடுத்தே, அவர் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

# மனோவுடன் இணைந்தார் பரத் அருள்சாமி; கண்டியில் களமிறங்குவதாக அறிவிப்பு



இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உப தலைவர் பரத் அருள்சாமி, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தலைமையிலான தமிழ் முற்போக்கு கூட்டணியில் இணைந்தார். கொழும்பில் தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசனிடமிருந்து ஜனநாயக மக்கள் முன்னணியின் அங்கத்துவத்தை பெற்றுகொண்ட பரத் அருள்சாமி கண்டி மாவட்ட ஐக்கிய மக்கள் கூட்டணி வேட்பாளராக போட்டியிடுவாரென முன்னணியின் பொதுச் செயலாளர் முருகேசு பரணிதரன் கொழும்பில் அறிவித்தார்

# தபால் மூல வாக்களிப்பு; விண்ணப்பங்கள் ஏற்கும் திகதி 10 நள்ளிரவு வரை நீடிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

பாராளுமன்றத் தேர்தலில் தபால் மூலம் வாக்களிப்பதற்கான விண்ணப்பங்களை பொறுப்பேற்கும் திகதி நாளை 10) நள்ளிரவு வரை நீடிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பங்களை பொறுப்பேற்கும் செயற்பாடுகள் நேற்று (08) நள்ளிரவு 12 மணியுடன் நிறைவு பெறவிருந்த நிலையில், அதற்கான காலம் நாளை (10) வியாழக்கிழமை நள்ளிரவு 12 மணி வரை நீடிக்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்னாயக்க தெரிவித்தார். தபாலில் ஏற்படக்கூடிய தாமதங்கள் மற்றும் தேர்தல் ஆணைக் குழுவுக்கு கிடைத்துள்ள கோரிக்கைகளையும் கவனத்திற் கொண்டு,கால நீடிப்பு மேற்கொள்ளப்பட்ட தாக தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் தெரிவித்தார்.

## ஈஸ்டர் தாக்குதலின்...

தாக்குதல், மத்திய வங்கி பிணைமுறி மோசடி உள்ளிட்ட முக்கிய ஊழல்கள் அம்பலத்துக்கு கொண்டுவரப்படுமென தேசிய மக்கள் சக்தி அறிவித்திருந்தது. இதற்கமையவே, இந்நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ அரச புலனாய்வுப் பிரிவின் முன்னாள் பணிப்பாளர் நிலந்த ஜவர்தன

## 2023, 2024 வருமான வரி ...

தவறுபவர்களது வங்கிக் கணக்குகளை முடக்கவும், சொத்துக்களை பறிமுதல் செய்யவும் அதிகாரம் உள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

இறைவரித் திணைக்கள பிரதி ஆணையாளர் நாயகம் என். எம். என். எஸ். பி. திஸாநாயக்க இது தொடர்பில் ஊடகங்களுக்கு தெரிவிக்கையில்;

நிலுவையாக உள்ள வரியை வசூலிப்பதற்கான நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளன. அவ்வாறு நிலுவை வரியை செலுத்த வேண்டியவர்கள் இந்த ஆண்டு இறுதிக்குள், அதனை செலுத்த வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

அதேவேளை,வரியை வசூலிக்க வரும் அதிகாரிகளின் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும், நிலுவைத் தொகையை காசோலையாகவோ, பணமாகவோ வழங்க வேண்டாம் என்றும் அவர் பொதுமக்களளை அறிவுறுத்தியுள்ளார்.

## இலங்கையில் அதிகரிக்கும்...

தயார்நிலைக் குழுவின் பொறியியலாளர் சாருக தமுனுபொல இது தொடர்பில் தெரிவித்ததாவது:

2024 ஆம் ஆண்டின் ஆகஸ்ட் மாதம் 01 ஆம் திகதியிலிருந்து செப்டெம்பர் மாதம் 30 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் இவ்வகையான குற்றங்கள் பதிவாகியுள்ளன. இவற்றில்,80 வீதமான முறைப்பாடுகள் சமூக ஊடகங்களுடன் தொடர்புடையவவை. இவற்றில் இணையவழி மோசடி தொடர்பில் 1,400 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

85 முறைப்பாடுகள் சிறுவர்கள் மீதான இணைய அச்சுறுத்தல்களுடன் தொடர்புடையவை.நாற்பது முறைப்பாடுகள் பாலியல் துஷ்பிரயோகங்களுடன் தொடர்புடையவை.

இணையவழி ஊடாக பாதிக்கப்படும் மக்களைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகள் மற்றும் விழிப்புணர்வுகளை அதிகரிக்க வேண்டடியதன் அவசியத்தை இந்த அறிக்கை சுட்டிக்காட்டுவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## பிரதிப் பொலிஸ் மாஅதிபரின்...

14 நாட்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருக்குமாயின், அதற்கு அரசியலமைப்பு பேரவையின் அங்கீகாரம் பெறப்பட வேண்டும்.

கடந்த செப்டம்பர் (27) இல்,சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரிய, பதில் பொலிஸ் மா அதிபராக நியமிக்கப்பட்டார். ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக குமாநாயக்க இந்நியமனத்தை வழங்கினார். அரசியலமைப்பிற்கு அமைவாக ஜனாதிபதிக்குள்ள அதிகாரங்களுக்கு உட்பட்ட வகையில், இந்நியமனம் வழங்கப்பட்டது.

பொலிஸ் கான்ஸ்டபிளாக சேவையில் இணைந்து கொண்ட இவர், பிரதி பொலிஸ் மா அதிபராக நியமிக்கப்பட்ட ஒரே அதிகாரியாவார். 158 வருடகால இலங்கை பொலிஸ் வரலாற்றில் இது முக்கிய நிகழ்வாகும். கொழும்பு பல்கலைக் கழக சட்டப் பட்டதாரியான இவர், இலங்கை சட்டக் கல்லூரியில் சட்டத்தரணியாகப் பதவிப் பிரமாணம் செய்துகொண்ட பின்னர், உதவிப் பொலிஸ் அத்தியட்சகராகப் பதவி உயர்வு பெற்றமை குறிப்பிடத்தக்கது.

## தமிழரசுக் கட்சி பெண் வேட்பாளர்...

பல்வேறு குற்றச்சாட்டுகளையும் சுமத்தி, கேள்விகளையும் எழுப்பியுள்ளனர். தமிழரசுக் கட்சியின் மகளிர் அணியின் யாழ்ப்பாணம் மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் ஒன்றிணைந்து யாழ். ஊடக அமையத்தில் ஊடக சந்திப்பை நடத்தினர்.

இதன்போது கட்சியின் யாழ். மாவட்ட மகளிர் அணித் தலைவி மதனி நெல்சன் தெரிவிக்கையில்,

பாராளுமன்றத் தேர்தலில் தமிழரசுக் கட்சியின் சார்பில் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் பிரேரிக்கப்பட்டுள்ள பெண் வேட்பாளர் தெரிவில், கட்சியின் மகளிர் அணிக்குக் கடும் அதிருப்தி ஏற்பட்டுள்ளது.

உண்மையில் எதற்காக இவ்வாறான தெரிவுகளைச் செய்தனர் என்ற சந்தேகமும் கேள்வியும் இருக்கிறது. இந்தப் பெண் வேட்பாளர் தெரிவு, சர்வாதிகாரமான முறையிலே நடந்திருக்கிறது. இதனால் கட்சியில் உள்ள பெண்கள் அவமானப்படுத்தப்பட்டுள்ளனர்.

தேர்தலில், யாழில் போட்டியிடுவதற்காக மகளிர் அணியில் உள்ள ஐந்து பேர், இரண்டு கிழமைக்கு முன்னதாகவே விண்ணப்பித்திந்தனர்.

ஆனால், வவுனியாவில் நடைபெற்ற ஊடக சந்திப்பொன்றில் கருத்து வெளியிட்ட சுமந்திரன் பெண்கள் விண்ணப்பிக்கவில்லை என்றும், காடுகள், மலைகள், மேடுகள், பள்ளங்கள் எனப் பல இடங்களிலும் பெண்களைத் தேடுவதாகவும் தனது பாணியில் கிண்டலாகச் சொல்லியிருந்தார்.

பெண்கள் விண்ணப்பிக்கவில்லை என்று 05 ஆம் திகதி கூறியவர், மறுநாள் (06) விண்ணப்பித்த இரண்டு பெண்களை தெரிவு செய்துள்ளதாகக் கூறுகிறார். உண்மையில் ஒரிரு வாரங்களுக்கு முன்னர் விண்ணப்பித்தவர்களை மறைத்து யாரும் விண்ணப்பிக்கவில்லை எனச் சொன்னவர் திடீரென இருவர் விண்ணப்பித்துள்ளதாகவும், அவர்களைத் தெரிவு செய்துள்ளதாகவும் கூறுகின்றார்.

ஆகவே, எதற்காக அவர் உண்மையைச் சொல்லாமல் பொய் சொல்லுகின்றார். இவ்வாறாக அவரின் பொய்களைக் கேட்கவோ, சர்வாதிகாரத்துடன் அவர் செயற்பட்டு வருவதையோ அனுமதிக்க நாங்கள் தயாராக இல்லை.தனக்குத் துதி பாடுபவர்களுக்கு வாய்ப்பு வழங்கிவிட்டு ஆளுமை மிக்க பெண்கள் என அவரே புருடா விடுகிறார்.

எங்கள் யாருக்கும் தெரியாமல் திருட்டுத்தனமாக இந்த இருவரையும் சுமந்திரன் நியமித்துள்ளார்.

தமிழரசுக் கட்சியின் மகளிர் அணிச் செயலாளர் ரஜனி ஜெகப்பிரகாஷ், தமிழரசுக் கட்சியின் மகளிர் அணியைச் சேர்ந்த முன்னாள் பிரதேச சபை தவிசாளர் நாகரஞ்சினி ஐங்கரன், தமிழரசுக் கட்சியின் மகளிர் அணியைச் சேர்ந்த விமலேஸ்வரி ஆகியோரும் பெண் வேட்பாளர் நியமனத்துக்கு எதிராகக் கருத்து வெளியிட்டனர்.

## மாணவர்களின் மதிய உணவு...

அடுத்த வருடம் வரை, இவ்வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான ஏற்பாடுகள் உள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

அரசாங்க பாடசாலைகளில் தரம் 01 முதல் தரம் 05 வரையிலான மாணவர்களுக்கு மதிய உணவு வழங்கும் திட்டம் கடந்த மார்ச் மாதம் முதல் ஆரம்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# இன்றைய பலன்கள் (09.10.2024)

**கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா (ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)**





**மேஷம்:**
சொத்துக்களை வாங்கவோ விற்கவோ அவசரம் வேண்டாம். உத்யோகத்திற்கு பொறுமையுடனும் கவனத்துடனும் பணிகள் ஈடுபடுவது அவசியம்.

**ரிஷபம் :**
வேலைப்பளு காரணமாக உடலில் சோர்வு உற்சாகமின்மை ஏற்படும். பணவரவு இருந்தாலும் செலவுகளும் அதிகரிக்கும்.

**மிதுனம்:**
மற்றவர்களால் செய்ய முடியாத காரியம் ஒன்றை சிறந்த முறையில் செய்து முடிப்பீர்கள். உத்தியோகத்தர்கள் நிர்வாகத்தில் முன்வைத்து கோரிக்கைகள் நிறைவேறும்.

**கடகம்:**
தன்னம்பிக்கையும் தைரியமும் அதிகரிக்கும் நேரம் இது. சகோதரர்கள் மீதான பாசம் அதிகரிக்கும்.

**சிம்மம்:**
கடன் விஷயங்களில் அவசரப்பட வேண்டாம். பண உதவிகளை பெற மேற்கொண்ட முயற்சிகளில் நல்ல பலன் கிடைக்கும்.

**கன்னி:**
வசதி வாய்ப்புகள் அதிகரிக்கும் முயற்சி எடுப்பீர்கள். எதிர்பார்த்து காத்திருந்த பணம் கைக்கு வந்து சேரும்.

**துலாம்:**
பொருளாதார நிலை படிப்படியாக முன்னுறுவீர்கள். தேக ஆரோக்கியம் மேம்படும். நண்பர்கள் இடையே இருந்த மன வேறுபாடுகள் அகலும்.

**விருச்சிகம்:**
பிறரை நம்பி ஒப்படைத்த பணிகளை நீங்களே செய்ய வேண்டிய நிர்பந்தம் உருவாகும்.

**தனுசு:**
கொடுத்த வாக்குறுதியை காப்பாற்ற தீவிரமாக முயற்சிகளை மேற்கொள்வீர்கள். உத்தியோகத்தர்கள் பண பொறுப்பில் உள்ளவர்கள் கவனமாக இருக்க வேண்டும்.

**மகரம்:**
நீண்ட கால பிரச்சனை ஒன்று நல்லபடி யாக தீர்வுக்கு வரும். எதிர்கால நலனில் அக்கறை செலுத்தி வருமானம் வரும் வழிகளைக் கண்டறிவீர்கள்.

**கும்பம்:**
உங்களிடம் கோபம் கொண்ட சிலரையும் கனிவாக பேசி சமாதானம் செய்வீர்கள். சில காரியங்களை அவசரமாக முடிக்க வேண்டிய நிலை ஏற்படும்.

**மீனம்:**
நண்பர்கள் ஒத்துழைப்பு தருவர். என்றாலும் முக்கியமான காரியங்களை யோசித்து செய்யுங்கள்.

## இலங்கையின்.... (03ஆம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கு சர்வதேசநாணய நிதியம், ஐக்கிய அமெரிக்க அபிவிருத்தி முகவர் நிலையத்தின்(USAID) ஊடாக நிதி உதவிகளை வழங்கத் தயாரெனவும் தூதுவர் இதன்போது தெரிவித்தார். ஊழல் மோசடிகளை மட்டுப்படுத்துவதற்காக ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க முன்னெடுக்கும் வேலைத்திட்டத்திற்கு, தொழில்நுட்ப உதவிகளை அமெரிக்கா வழங்குமெனவும் அவர் உறுதியளித்தார்.

பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு, தேவையான சந்தர்ப்பத்தில் அதற்கான உதவிகளை வழங்கவும் அவர் இணக்கம் தெரிவித்தார்.

மீள் புதுப்பிக்கத்தக்க வலுசக்தி, ஏற்றுமதி விவசாயத்தை உருவாக்குதல் மற்றும் கிராமங்களின் வறுமையை ஒழிப்பதற்காக புதிய ஜனாதிபதியால் முன்னெடுத்துச் செல்லப்படும் வேலைத்திட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவதாகவும் அமெரிக்க தூதுவர் உறுதியளித்தார். தற்போது செயற்படுத்தப்படும் கிராமிய பாடசாலைகளின் பகல் உணவு வேலைத்திட்டத்தை நகர பாடசாலைகளுக்கு வழங்கவும் அமெரிக்கா உதவவுள்ளது.

## கிரிக்கெட் தெரிவுக் குழு... (03ஆம் பக்கத் தொடர்ச்சி)

நீதிமன்றத்திற்கு அறிவிக்காமல் உபுல் தரங்க வெளிநாடு சென்றதால், விமான நிலையத்தில் வைத்து அவரைக் கைது செய்வதற்கு பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தற்போது வெளிநாட்டில் உள்ள அவர், நாடு திரும்பிய பின்னர் நீதிமன்றத்தில் ஆஜராவதாக சீராக்கல் மனு ஊடாக நீதிமன்றத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## தமிழரசு கட்சியின் தலைமையை...

நான், இதுவரை இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைமைப் பொறுப்பிலிருந்து செயற்பட்டு வந்திருக்கிறேன்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் 17ஆவது தேசிய மாநாடு 2024 ஜனவரி 21ஆம் திகதி நடைபெற்றது. பொதுக்குழுவில் தாங்கள் கட்சியின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டிருந்தீர்கள்.இருந்தபோதும், தமிழரசுக் கட்சியின் தலைவர் பொறுப்பை தாங்கள் இன்னும் ஏற்கவில்லை.

இதனால், தொடர்ந்தும் கட்சியின் தலைவராக நானே செயலாற்றி வந்துள்ளேன். அந்தப் பொறுப்பை உடனடியாக ஏற்றுத் தலைவராகச் செயற்படுமாறு அன்றிலிருந்து பல தடவைகள் வற்புறுத்தி வந்துள்ளேன். அத்துடன் கடந்த 07ஆம் திகதியிலிருந்து இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் பொறுப்பிலிருந்து விலகியிருக்கத் தீர்மானித்துள்ளேன் என்பதனை இந்தக் கடிதம் மூலம் அறியத் தருகின்றேன்.

எனவே, இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் பொறுப்பை உடனடியாக ஏற்று நிறைவேற்றிச் செயற்படுமாறு வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்." – என்றும் அந்த கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இக்கடிதத்தின் பிரதி இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பதில் பொதுச் செயலாளர் வைத்தியர் ப.சத்தியலிங்கத்துக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

## ஜனாதிபதி அநுர குமாரவுக்கு...

அடிப்படைகளான அமைதி, சுதந்திரம் மற்றும் நியாயம்

என்பவற்றையும் வெளிக்காட்டியுள்ளதுடன்,

இலங்கை மக்களின் அர்ப்பணிப்பையும் எடுத்துக்காட்டு வதாகவும் ஜோ பைடன் தனது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

சுபீட்சம் மற்றும் முன்னேற்றத்தை அடைவதற்கு அமெரிக்காவிற்கும் இலங்கைக்கும் இடையில் ஒத்துழைப்பை வளர்ப்பதன் முக்கியத்துவத்தையும் ஜனாதிபதி ஜோ பைடன் வலியுறுத்தியுள்ளார்.

பொருளாதார வளர்ச்சி, பிராந்திய பாதுகாப்பு மற்றும் ஜனநாயக ஆளுகை ஆகிய பல துறைகளின் ஊடாக இரு நாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பை மேம்படுத்திக் கொள்வதற்காக ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுடன் இணைந்து செயற்பட எதிர்பார்ப்பதாகவும் ஜோ பைடன் அனுப்பியுள்ள வாழ்த்துச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## எம்.பிக்களுக்கு வழங்கப்பட்ட...

தபால் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதனால், பயன்படுத்தப்படாத முத்திரைகளை பாராளுமன்ற தபால் அலுவலகத்தில் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்குமாறு, தபால் மாஅதிபர் அறிவித்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு வருடாந்தம் 05 இலட்சம் ரூபா பெறுமதியான முத்திரைகள், இலவசமாக வழங்கப்படுகிறது.இந்நிலையில், பாராளுமன்றம் கலைக்கப்பட்டதைத் தொடர்ந்து பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் அனைத்து வசதிகளும் இல்லாமலாக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இரத்தினக்கல் அகழ்வால் குருகங்கை நீர் மாசடைவு

## பொதுமக்கள் கவலை

**இரத்தினபுரி சுழற்சி நிருபர்**

இரத்தினபுரியின் குருவிட்ட நகருக்கு அண்மித்து ஓடும் குருகங்கையானது இரத்தினக்கல் அகழ்வு காரணமாக மிகவும் மோசமாக மாசடைந்து காணப்படுவதாக, குருவிட்ட நகர் மக்கள் தெரிவிக்கின்றனர்.

குடிநீர் தேவைக்காக இந்த கங்கை நீரை சிலர் பயன்படுத்தி வந்ததாகவும் தற்போது இந்த கங்கை நீரை தேவைக்கு கூட பயன்படுத்த முடியாத நிலைமைக்கு தாம் தள்ளப்பட்டுள்ளதாகவும், அவர்கள் கூறினர். இந்த கங்கை நீரானது பிராணிகளுக்கு கூட அருந்த முடியாதளவுக்கு அசுத்தம் அடைந்துள்ளதாகவும், அம்மக்கள் மேலும் தெரிவிக்கின்றனர்.

குருவிட்ட பிரதேசத்தில் மேற்கொள்ளப்படும் இரத்தினக்கல் அகழ்வின் பின்னர் அசுத்த நீர் இந்த கங்கைக்கு திருப்பி விடப்படுவதாலேயே இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும், குருவிட்ட நகர் மக்கள் தெரிவிக்கின்றனர்.



# வெல்லவாய – மொனராகலை வீதி விபத்தில் இருவர் படுகாயம்

**ஊவா சுழற்சி நிருபர்**

வெல்லவாய மொனராகலை வீதியில் வருணகம் பிரதேசத்தில் இராணுவ முகாமை அண்டிய இடத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை இடம்பெற்ற வீதி விபத்தில் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

கப் ரக வாகனமொன்றும் மணல் ஏற்றிய டிப்பர் ரக லொறியும் நேருக்கு நேர் மோதி இந்த விபத்து சம்பவித்துள்ளது.

கப் ரக வாகனத்தில் பயணித்த இருவரே விபத்தில் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். இந்நிலையில் டிப்பர் ரக லொறி சாரதியை கைது செய்துள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் படுகாயமடைந்தவர்கள் உடனடியாக வெல்லவாய பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். இதன் பின்னர் மேலதிக சிகிச்சைக்காக அவர்கள் மொனராகலை சிறிகல தள வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு அங்கு அவசர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வருவதாகவும், பொலிஸார் தெரிவித்தனர்.

## குளவி கொட்டியதால் 6 தொழிலாளர் பாதிப்பு



**மஸ்கெலியா நிருபர்**

மஸ்கெலியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹப்புகஸ்தனை தோட்டத்தில் 6 பேர் நேற்று வியாழக்கிழமை முற்பகல் குளவி கொட்டுக்கு இலக்காகி உள்ளனர்.

தேயிலை கொழுந்து பறித்துக் கொண்டிருந்த தொழிலாளர்களே குளவி கொட்டுக்கு இலக்காகி உள்ளதாகவும் இவர்கள் மஸ்கெலியா மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும், அவ்வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஐந்து பெண்களும் ஆண் ஒருவருமே குளவி கொட்டுக்கு இலக்காகி உள்ளனர்.

இவர்களில் மூன்று பேர் சிகிச்சை பெற்று வெளியேறி உள்ளதாகவும், அவ்வைத்தியசாலை தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன.

## கண்டி மாவட்டத்தில்

# இ.தொ.கா. வின் புதிய அமைப்பாளர் நியமனம்



கண்டி மாவட்டத்துக்கான இ.தொ.கா.வின் அரசியல் மற்றும் தொழிற்சங்கத்துக்கான புதிய அமைப்பாளராக பாலகிருஷ்ணன் பிரசாத்குமார் நேற்று நியமிக்கப்பட்டுள்ளார்.

இ.தொ.கா. தலைமையகமான சௌமியபவனில் கூடிய கட்சி உயர்பீட உறுப்பினர்களுடனான கலந்துரையாடலின் பின்னர் இந்த நியமனம் வழங்கி வைக்கப்பட்டது. இ.தொ.கா. தலைவர் செந்தில் தொண்டமான், இ.தொ.கா. பொதுச் செயலாளர் ஜீவன் தொண்டமான், இ.தொ.கா. தவிசாளர் மருதபாண்டி ரமேஸ்வரன் ஆகியோர் இந்த நியமனத்தை வழங்கி வைத்தனர். கண்டி மாவட்டத்தில் நிலவிய மேற்படி அமைப்பாளர் பதவி வெற்றிடத்தை நிரப்பும் வகையிலேயே இந்த நியமனம் வழங்கப்பட்டது. இளம் தலைமுறையை சார்ந்தவரான பாலகிருஷ்ணன் பிரசாத்குமார், கடந்த காலத்தில் கண்டி மாவட்டத்துக்காக இ.தொ.கா. இளைஞர் அணியின் சிரேஷ்ட அமைப்பாளராகவும் தனது கடமையை சிறப்பாக செய்து வந்தமை குறிப்பிடத்தக்கது.

## 20 ஓவர்கள் நிர்ணயிக்கப்பட்ட

# கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் விக்டோரியா அணி வெற்றி



**நானுஓயா நிருபர்**

நுவரெலியா விக்டோரியா மற்றும் மார்காஸ் தோட்ட பிளக்கெட் அணிகளுக்கு இடையிலான 20 ஓவர்கள் நிர்ணயிக்கப்பட்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டி நுவரெலியா மாநகர சபையின் சினிசிட்டா மைதானத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்றது. இதில் கந்தப்பளை அருளானந்தம் பிரகாஷ் தலைமையில் விளையாடிய நுவரெலியா விக்டோரியா அணி 3 க்கு 0 என்ற கணக்கில் பிளக்கெட் அணியை வீழ்த்தி வெற்றியை தனதாக்கிக் கொண்டது.

துடுப்பாட்டத்தில் அந்த அணி சார்பில் ப.பிரதீப் மூன்று போட்டிகளில் இரண்டு அரை சதங்களை பெற்றுக் கொடுத்ததோடு, முதல் போட்டியில் 30 பந்துகளுக்கு 72 ஓட்டங்களும் இரண்டாவது போட்டியில் 48 பந்துகளுக்கு 85 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்து சிறந்த ஆட்டநாயகன் விருதையும் தட்டி சென்றனர்.

அத்துடன் பந்து வீச்சில் அணி சார்பில் முகமட் பஸ்மி இரண்டு போட்டிகளில் 7 ஓவர்களில் பந்து வீசி 6 விக்கெட்டுகளை வீழ்த்தி சிறந்த பந்து வீச்சாளர் மற்றும் இரு அணிகளின் சிறந்த வீரருக்கான விருதையும் பெற்றுக் கொண்டார். மூன்று போட்டிகளிலும் 4 சிறந்த பிடியெடுப்பை பெற்ற ரா.பிரஷாந்த் சிறந்த பிடியெடுப்பாளருக்கான விருதை பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# 'இனியாவது நமக்காக நாம்' சுயேச்சை குழுவாக கட்டுப்பணம் செலுத்தியது

**நானுஓயா நிருபர்**




பாராளுமன்ற தேர்தலில் நுவரெலியா மாவட்டத்தில் போட்டியிடுவதற்காக 'இனியாவது நமக்காக நாம்' என்ற அமைப்பினூடாக புதிய சுயேச்சை குழு நேற்று செவ்வாய்க்கிழமை கட்டுப்பணம் செலுத்தியது.

எதிர்வரும் நவம்பர் மாதம் 14ஆம் திகதி நடைபெறவுள்ள பாராளுமன்ற தேர்தலில் போட்டியிடுவதற்காக சுயேச்சையாக நுவரெலியாவில் களம் காண்பதற்காக இளைஞர்கள் ஒன்றிணைந்து புதிய அரசியல் மாற்றத்துக்காக நுவரெலியா தேர்தல் அலுவலகத்தில் கட்டுப்பணத்தை செலுத்தினர்.

அவர்கள் கட்டுப்பணம் செலுத்திய பின்னர் ஊடகவியலாளர்களை சந்தித்து கருத்து தெரிவித்த போது,

"நாட்டை வளப்படுத்துவதற்கு பல ஆண்டுகளின் பின்னர் ஓர் அதிசயம் நடந்தது போல் ஓர் இடதுசாரி கொள்கையிலுள்ள ஒருவர் தேர்தல் மூலம் ஜனாதிபதியாக தேர்வு செய்யப்பட்டுள்ளார். அதேபோல் மலையகத்தின் அனைத்து பகுதிகளிலும் வெவ்வேறு மாற்றம் நிகழ வேண்டுமென்றால் பாராளுமன்ற தேர்தலில் சிந்தித்து செயல்பட வேண்டும். அதற்காகவே பழைய கட்சிகளை புறக்கணித்து இளைஞர்கள் ஒன்றிணைந்து சுயேச்சையாக களம் இறங்கி உள்ளோம்" எனத் தெரிவித்தனர்.

# சின்னம் சூட்டும் நிகழ்வு





**மாத்தளை சுழற்சி நிருபர்**

கலேவல கல்வி வலயத்துக்குட்பட்ட எலமல் பொத்த முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் மாணவ தலைவர்களுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வு நேற்று முன்தினம் அவ்வித்தியாலய அதிபர் எம்.இர்பான் தலைமையில் வித்தியாலய கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.


ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
திங்கள் 2024.10.07
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk
NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 5618
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 32,363,092.00
ஆங்கில எழுத்து T
வெற்றி இலக்கங்கள் 3 8 0 2 6 0

அத சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 193
ஆங்கில எழுத்து T
வெற்றி இலக்கங்கள் 0 2 6 0

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3860
சீட்டிழுப்பு திகதி 2024.10.07
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 61,341,636.80
ஆங்கில எழுத்து E
வெற்றி இலக்கங்கள் 14 29 44 65
விசேட எழுத்து E
இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 79884

Mega POWER
சீட்டிழுப்பு இலக்கம் 1966
2024.10.07
81671
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 448,709,834.00
ஆங்கில எழுத்து B
சுப்பர் இலக்கம் 06
வெற்றி இலக்கங்கள் 12 30 51 60
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

VIP
திகதி 2024.10.07
சீட்டிழுப்பு இலக்கம் 444
ஆங்கில எழுத்து P
வெற்றி இலக்கங்கள் 7 7 0 2 8 0
L7 எழுத்து P
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 20,826,788.96

ராசி சுப பலன்
திகதி 2024.10.07
சீட்டிழுப்பு இலக்கம் 927
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 3,515,741.20
வெற்றி இலக்கினம் விருச்சிகம்
வெற்றி இலக்கங்கள் 18 25 29 48
தனயோக இலக்கம் 39332
நாளுக்கான விதி எண் 22

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் 1648
2024.10.07
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 82,601,774.88
ஆங்கில எழுத்து N
வெற்றி இலக்கங்கள் 05 44 76 78
விசேட எழுத்து N
இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 49707



# கேள்விக்கான அழைப்பு

LAKSALA

**கைத்தொழில் அமைச்சு**

**(சிறிய மற்றும் நடுத்தர அளவான தொழில்முயற்சி அபிவிருத்தி பிரிவு)**

**இலங்கை கைப்பணிச் சபை "லக்சல"**

**'கணனி மற்றும் அது சார்ந்த துணைப்பாகங்களை வழங்குதல் விநியோகித்தல் மற்றும் நிறுவுவதற்கான கேள்வி கோரல்'**

01. இலங்கை கைப்பணிச் சபையின் பெறுகைக் குழுத் தலைவரால் கீழ்க்காணும் மாதிரிகளைக் கொண்ட கணனி மற்றும் அது சார்ந்த துணைப்பாகங்களை வழங்குதல், விநியோகித்தல் மற்றும் நிறுவுவதற்காக தகைமையுள்ள கேள்விதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விகள் கொரப்படுகின்றன.

| Description | Specification | Qty |
|---|---|---|
| POS Terminals | CPU-Core i5<br>RAM-8GB<br>Hard-128GB (SSD)<br>OS-Windows 10 pro<br>Screen-15" Touch | 18 |
| POS Printer | Direct thermal Printing<br>Printing With-80mm<br>Printing speed-150mm/s<br>Auto cutter | 18 |
| Cash Drawers | POS Compatible | 18 |
| Barcode scanner | 1D, 2D, QR Barcode Reader (USB/wireless) | 18 |
| UPS | UPS-650VA/390W | 18 |
| Wi-Fi Routers | 802.11a/b/g/n/oc<br>Dual band<br>2.4G 2x2MIMO<br>5G 2x2MIMO<br>Throughput 1200Mbps<br>Per user QOS | AS per requirement |

**Bid - 01**

| | | |
|---|---|---|
| | Wall/celling Mounting and Configure the devices | |
| Finger Print machines | Commodity network (without VPN) | 11 |
| Virus Guard | With centralized Management | As Per requirement |

**Bid - 02**

| | | |
|---|---|---|
| Laptop with virus Guard centralized management | CPU-Core i7 13th Generation or Latest Generation<br>Hard-512GB (SSD)<br>RAM-8GB<br>OS/Windows 10/11pro, 64 bit | 08 |
| Laptop with virus Guard centralized management | CPU-Core i5 13th Generation or Latest Generation<br>Hard-512GB (SSD)<br>RAM-8GB<br>OS/Windows 10/11pro, 64 bit | 38 |
| Photo copy machine | All in one network printer Wi-Fi support | 01 |
| Printers | Laser Jet color network printer Wi-Fi support-all in one | 05 |
| Thin Client | Windows 10 or Latest CPU 1.8 GHZ or Better RAM 8 GB<br>SSD 128 GB<br>Inbuilt Wi-Fi Bluetooth HDMI Output Vesa Mounting Kit UPS 650 V A<br>Screen-<br>32 Inches Touch Screen<br><br>32 Inches Normal Screen | <br><br><br><br>01<br><br>01 |
| Printers | Dot Metrics | 03 |

**Bid - 03**

Network Devices Monitoring Management Solutions

01. கேள்வி கோரல் 'தேசிய போட்டி கேளவி கோரல் முறைமை' ஊடாக நடத்தப்படும்.

02. கேள்விதாரர்கள் இலங்கையில் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த உருப்படிகளை வழங்குதல் மற்றும் நிறுவுதல் பற்றிய சிறந்த அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

03. **2024.10.16 மு.ப. 11.00** இற்கு கீழேயுள்ள முகவரியில் குறிப்பிடப்படும் லக்சல தலைவர் பணிமனையில் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ள கேள்விக்கு முன்னரான கூட்டம் (pre-bid Meeting) இற்கு சமுகமளிப்பதன் மூலம் இது பற்றிய மேலதிக விபரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

04. மேற்படி Bid-01, Bid -02 மற்றும் Bid -03 என வேறுவேறாக பொறியிடப்பட்ட உங்களது விலைமனுக்கள் **2024.10.30 பி.ப. 2.30** இற்கு அல்லது அதற்கு முன்பு தலைவர் (பெறுகைக்குழு) இலங்கை கைப்பணிச் சபை, லக்சல, இல. 215, பௌத்தாலோக்க மாவத்தை, கொழும்பு-07 என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது அம் முகவரியில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிட முடியும். அத்துடன் விலைமனுக்கள் உள்ளடக்கப்பட்ட உறையின் முன்பக்க மேல் மூலையில் 'கணனி மற்றும் அது சார்ந்த துணைப்பாகங்களுக்கான விலைமனுக்கள் 2024 Bid 01, Bid 02, அல்லது Bid 03, என குறிப்பிடுதல் வேண்டும்.

05. **2024.10.30 பி.ப. 2.30** இற்கு கேள்வி பத்திரங்கள் திறக்கப்படுவதுடன் அதற்காக விண்ணப்பதாரிகளுக்கு அல்லது அவர்களது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கு சமுகமளிக்கலாம்.

06. கேள்விகள் வழங்கப்பட்டு குறைந்தபட்சம் 03 நாட்களுக்குள் பொருட்களை வழங்க வேண்டியதுடன் அதன் உத்தரவாத காலத்தையும் குறிப்பிடுதல் வேண்டும்.

07. மேலும் மேற்படி Desktop Computer, Laptop, Printers மற்றும் Finger Printer Machine இற்காக ஒரு வருடத்திற்குள் (மாதாந்த தவணைகள் 12 மூலம்) கொடுப்பனவு அடிப்படையில் வழங்குவதற்கு இணங்குதல் வேண்டும். எந்த விலைமனுக் கோரலையும் ஏற்றுக் கொள்ளும் அல்லது நிராகரிக்கும் முழுமையான உரிமை இலங்கை கைப்பணிச் சபைக்கு (லக்சல) உரியது.

**தலைவர் (பெறுகை),**
**இலங்கை கைப்பணிச் சபை 'லக்சல',**
**இல. 215, பௌத்தாலோக்க மாவத்தை,**
**கொழும்பு-07.**

# கிழக்கின் குரல்



## கிழக்கு மாகாண பட்டதாரிகளுக்கு விரைவில் தொழில் வாய்ப்புகள்

### ஆளுநர் ஜயந்த லால் ரத்னசேகர உறுதி

(கிண்ணியா மத்திய நிருபர்)



கிழக்கு மாகாணத்தில் வேலையற்ற பட்டதாரிகளுக்கு விரைவில் தொழில் வாய்ப்புகளை வழங்குவதற்கு விசேட வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுமென கிழக்கு மாகாண ஆளுநர் ஜயந்த லால் ரத்னசேகர தெரிவித்தார்.

திருகோணமலை மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் ஒன்றியத்தினர், நேற்று ஆளுநரை அவரது அலுவலகத்தில் சந்தித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் தொடர்ந்து கருத்துதெரிவிக்கையில்,

எதிர்வரும் பொதுத்தேர்தலின் பின்னர், கிழக்கு மாகாண வேலையற்ற பட்டதாரிகளுக்கு தொழில் வாய்ப்புகளை வழங்குவதற்காக விசேட வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படும் என தெரிவித்தார்.

பட்டதாரிகளின் பட்டங்களுக்கு ஏற்ப, அரசதுறையில் வெற்றிடங்களை நிரப்புவதற்கும், அரச நிர்வாக துறையை வினைத்திறனாக மாற்றுவதற்கு தேவையான வெற்றிடங்கள் உருவாக்கப்பட்டு, அதற்கு பொருத்தமான துறைசார் பட்டதாரிகளை உள்ளீர்ப்புச் செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் உறுதியளித்தார்.

இதன்போது பட்டதாரிகள் புதிதாக கடமையை ஏற்றுக் கொண்ட ஆளுநருக்கு வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொண்டனர்.

## மாற்றுத்திறனாளிகளுக்கு புதிய தொழில்வாய்ப்புகள்



(கிண்ணியா மத்திய, தம்பலகாமம் குறூப் நிருபர்கள்)

மாற்றுத்திறனாளிகளுக்கு தொழில் வாய்ப்புகளை வழங்குவது தொடர்பில் திருகோணமலை மாவட்ட முன்னேற்ற மீளாய்வு கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டது.

திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் சாமிந்த ஹெட்டியாரச்சி தலைமையில் மாவட்ட செயலகத்தில் இக்கலந்துரையாடல் நடைபெற்றது.

இந்நிகழ்வில் JICA திட்டத்தின் பணிப்பாளர், திருகோணமலை மாவட்டத்தின் முன்னேற்றம் தொடர்பாக பாராட்டுக்களை தெரிவித்தார். மேலும் இத்திட்டத்திலுள்ள சவால்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டதுடன் எதிர்காலத்தில் மாற்றுத்திறனாளிகளை தொழில் வாய்ப்புக்கு உள்வாங்கும் போது பெண்களையும் விகிதாசார அடிப்படையில் சேர்க்க வேண்டுமெனவும் ஆலோசனை முன்வைக்கப்பட்டது.

இதன்போது மாவட்ட இணைப்பாளர் சமூக சேவை உத்தியோகத்தர், மாவட்ட இணைப்பாளர் மனித வள அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் சமூக சேவை திணைக்களத்தின் சமூக சேவை உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.

## பெண்களுக்கான எல்லே சுற்றுப் போட்டி; காயன்குடா கண்ணகி வித்தியாலயம் முதலிடம்

(கல்குடா தினகரன் நிருபர்)

பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்ட விளையாட்டுப் போட்டியில் பெண்களுக்கான எல்லே சுற்றுப் போட்டியில் மட்டக்களப்பு காயன்குடா கண்ணகி வித்தியாலயம் முதலிடத்தைப் பெற்று தங்கப்பதக்கத்தை சுவீகரித்துள்ளது.

பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்ட விளையாட்டுப் போட்டியில் பெண்களுக்கான எல்லே சுற்றுப் போட்டி திருகோணமலையில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

மாகாணத்திற்கு மூன்று பாடசாலை அணிகள் என 27 பாடசாலை அணிகள் பங்குபற்றிய பெண்களுக்கான எல்லே சுற்றுப்போட்டியின் இறுதிப் போட்டி மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்துக்குட்பட்ட காயன்குடா கண்ணகி வித்தியாலயம் மற்றும் இரத்தினபுரி மொறக்கட்டிய மகா வித்தியாலய அணிகளுக்கிடையில் நடைபெற்றது. இப்போட்டியில் காயன்குடா கண்ணகி வித்தியாலயம் வெற்றி பெற்று முதலாமிடத்தைப் பெற்றுக்கொண்டது.

## இடி, மின்னல் தாக்கத்தினால் நான்கு மாடுகள் பரிதாப மரணம்

(பாசிக்குடா நிருபர்)



மட்டக்களப்பு வாகரை பிரதேசத்தில் சின்னத்தட்டுமுனையில் இடி, மின்னல் தாக்கத்தினால் கால்நடைகள் உயிரிழந்துள்ளதாக வாகரை பொலிஸார் தெரிவித்தனர்.

சின்னத் தட்டுமுனை கால்நடை பண்ணையாளரின் மாடுகள் ஆற்றை அண்மித்த பகுதியில் மேய்ச்சலுக்காக கட்டப்படுவது வழக்கமாகும். எனினும் இரவு வேளைகளில் திடீரென ஏற்பட்ட மின்னல் தாக்கத்தினால் நான்கு மாடுகள் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளன. அத்துடன் வாழைச்சேனையில் பல வீடுகளில் மின்னல் தாக்கத்தினால் மின்சாரப் பொருட்கள் சேதமடைந்துள்ளன.

கிழக்கில் தற்போது பருவபெயர்ச்சி மழை காலம் ஆரம்பித்துள்ளது. இதனால் மாலை வேளைகளில் இடியுடன் கூடிய மழை பெய்யும் வாய்ப்புகள் அதிகமாக காணப்படுவதால் பொதுமக்கள் எச்சரிக்கையுடன் இருக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.



தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியினர், நேற்று (8) பாராளுமன்ற தேர்தலில் போட்டியிடுவதற்கான வேட்பு மனுவை திருகோணமலை மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலரிடம் கையளித்தனர். கட்சியின் தலைவர் சிவனேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்), பொதுச்செயலாளர் பூபாலபிள்ளை பிரசாந்தன் மற்றும் மாவட்டத்தின் முதன்மை வேட்பாளர் குமாரசாமி நளின்காந்தன் ஆகியோர் வேட்பு மனுவை கையளித்தனர்.

(படம்: திருகோணமலை தினகரன் நிருபர்)

## பெரியநீலாவணை தொடர்மாடி குடியிருப்பு மக்களின் நீண்டகால பிரச்சினைக்கு தீர்வு

### கழிவு அகற்றும் நடவடிக்கைகள் ஆரம்பம்

(மணல்சேனை நிருபர்)



கல்முனை மாநகரசபைக்குட்பட்ட பெரியநீலாவணைத் தொடர்மாடிகளில் சுமார் இரண்டு வருடங்களுக்கு மேலாக பாரிய சுகாதாரசீர்கேடுகள் இடம்பெற்றுவந்தன.

இதனையடுத்து முன்னாள் கல்முனை மாநகரசபை உறுப்பினர் சந்திரசேகரன் ராஜனின் முயற்சியினால் கழிவு அகற்றும் நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன.

சுனாமிப் பேரலையினால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக பெரியநீலாவணை கிராமசேவகர் பிரிவில் பின்லாந்து அரசாங்கத்தினால் பெரியநீலாவணைத் தொடர்மாடி குடியிருப்பு அமைக்கப்பட்டது. இதில் தற்சமயம் 625 குடும்பங்கள் வசித்து வருகின்றனர். எனினும் முறையான கழிவு முகாமைத்துவம் பேணப்படாமையால் கழிவுநீர் மற்றும் மலசலகூடக் கழிவுகள் என்பன மலசலகூடக் குழிகளிலிருந்து வெளியேறி வீதிகளிலும் தொடர்மாடிக் கீழ்பகுதிகளிலும் தேங்கிக்கிடப்பதால் மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வந்தனர்.

இதனை யாரும் கவனிக்காத நிலையில் துர்நாற்றம் வீசியது.

இதனால் பாடசாலை மாணவர்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கினர். இதனையடுத்து கல்முனை மாநகரசபையின் ஒத்துழைப்புடன் அப்பிரதேசத்தை தூய்மைப்படுத்தும் நடவடிக்கைள் ஆரம்பிக்கப்பட்டன.

## சடலம் மீட்பு

(கிண்ணியா மத்திய நிருபர்)

திருகோணமலை மாவட்ட, உப்புவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட, 4 ஆம் மைக்கல் சந்தியில் நேற்று காலை ஆணொருவரின் சடலம் பொதுமக்களால் இனங்காணப்பட்டுள்ளது.

திருகோணமலையைச் சேர்ந்த 45 வயதான அமரசிங்க ஆராச்சிலாகே சுமித் என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் குறித்து கண்டறிவதற்காக மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

## காத்தான்குடியில் டெங்கு நோய் அதிகரிப்பு: மூன்று நோயாளர்கள் அடையாளம்

(மட்டக்களப்பு குறூப், புதிய காத்தான்குடி நிருபர்கள்)



காத்தான்குடி பிரதேசத்தில் கடும் மழை காரணமாக டெங்கு நுளம்பு பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இதுவரை மூன்று டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதாக காத்தான்குடி பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி யு. எல் நசூருதீன் தெரிவித்தார்.

காத்தான்குடி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட புதிய காத்தான்குடி பதுரியா பிரதேசத்தில் பாரியளவில் டெங்கு பரவும் இடங்கள் அடையாளம் காணப்பட்டதையடுத்து சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் எஸ்.முரளீஸ்வரனின் பணிப்புரையின் கீழ் காத்தான்குடி பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் யூ.எல்.நஸீர்தீனின் தலைமையில் மாவட்டத்திலுள்ள 14 சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளிலும் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் 40 பேர் அழைக்கப்பட்டு 20 பிரிவுகளாக பிரிக்கப்பட்டு பிரதேசத்திலுள்ள தொண்டர் நிறுவனங்கள், நகரசபை மற்றும் பொது நிறுவனங்களில் உதவியுடன் பாரிய பரிசோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

நேற்று காலை முதல் பிரதேசத்திலுள்ள பல வீடுகளில் சோதனை நடவடிக்கைகள் நடைபெற்று அதிகளவான வீடுகளில் டெங்கு குடம்பிகள் கண்டுபிடிக்கப்பட்டதுடன் சிவப்பு எச்சரிக்கை பிரசுரங்களும் ஒட்டப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## சிறந்த தொழில் முயற்சியாளர்களுக்கு விசேட விருது

(அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்)

இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் ஏற்பாட்டில் சிறந்த தொழில் முயற்சியாளர்களுக்கான விசேட விருது வழங்கும் நிகழ்வு அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ். ஜெகராஜன் தலைமையில் அம்பாறையில் நடைபெற்றது. அம்பாறை மாவட்ட கைத்தொழில் அபிவிருத்தி சபையினால் ஏற்பாடு செய்யப்பட்ட விருது மற்றும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் அம்பாறை மாவட்டத்தின் பல்வேறு துறைகளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் பல நிறுவனங்கள் விருதுகளை பெற்றன.

இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபையின் கிழக்கு மாகாண பணிப்பாளர் எஸ்.டபிள்யூ.எஸ். ஜி. திஸாநாயக்க, மட்டக்களப்பு பிரதிப் பணிப்பாளர் ஏ.ஏ. திஸாநாயக்க, அம்பாறை பிரதிப் பணிப்பாளர் கே.எல்.ஏ. ஆரியகீர்த்தி மற்றும் தேசிய அபிவிருத்தி அதிகார சபை மற்றும் விதாதா நிறுவனத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் மாவட்ட ஒருங்கிணைப்பாளர்களும் இதில் கலந்து சிறப்பித்தனர்.

## இலக்கியப் போட்டிகளில் ஒலுவில் அல்–மதீனா வித்தியாலய மாணவர்கள் வெற்றி

(அட்டாளைச்சேனை மத்திய நிருபர்)

அட்டாளைச்சேனை பிரதேச செயலகம் நடாத்திய பிரதேச மற்றும் மாவட்ட மட்ட இலக்கியப் போட்டிகளில் ஒலுவில் அல்மதீனா வித்தியாலய மாணவர்கள் 07 வெற்றி நிலைகளைப் பெற்று சாதனை நிலை நாட்டியுள்ளதாக அதிபர் கே.எல்.அமீர் தெரிவித்தார்.

01. எம்.என்.ஹப்ஸா ஹனூன் முதலாமிடம் எறும்பும் பட்டாம் பூச்சியும்.

02. மு.ஹ.முஹம்மத் ஹம்தி இரண்டாமிடம் ஆமையும் முயலும்.

03. ஆ.ஜெ.மர்யம் ஸீபா மூன்றாமிடம் மானும் காகமும்.

04. மு.பை.முஸர்ரப் அதனி –முதலாமிடம் மீனவர் பாடல்.

05. மு.சா.ஆயிஷா – முதலாமிடம் கையெழுத்துப் போட்டி.

06. ஆ.மி.முனிஸா பலக் இரண்டாமிடம் பாலர் பிரிவு கதை கூறல்.

07. மு.பா.ஷஸான் பாஹிர் மூன்றாமிடம் ஆமையும் முயலும். என்றவாறு வெற்றிப் பெற்றுள்ளனர்.

## கல்முனை கார்மேல் பற்றிமாவில் முப்பெருவிழா




கிழக்கில் புகழ்பெற்ற கல்முனை கார்மேல் பற்றிமா கல்லூரியில் நேற்று நடைபெற்ற சிறுவர் தின கொண்டாட்டங்களின் போது எடுக்கப்பட்ட படம்.

(படங்கள்: காரைதீவு குறூப் நிருபர்)

## விவசாய சம்மேளனம் ஏற்பாட்டில் ஏர்பூட்டு விழா

(தம்பலகாமம் குறூப் நிருபர்)

திருகோணமலை, தம்பலகாமம் பிரதேச செயலக பகுதியிலுள்ள கல்மெடியாவ வடக்கு கிராம சேவகர் புளியூத்து குள விவசாய பகுதியில் ஏர்பூட்டு விழா நேற்று நடைபெற்றது. விவசாய சம்மேளனம் ஏற்பாடு செய்த இந்நிகழ்வில் பிரதம அதிதியாக தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ. ஸ்ரீபதி கலந்து சிறப்பித்தார்.

பெரும்போக நெற்செய்கைக்கான வயல் விதைப்பு நடைபெறவுள்ள நிலையில் இயந்திரம் மூலமான ஏர்பூட்டு நிகழ்வு நடைபெற்றது.

இதில் தம்பலகாமம் பிரதேச கமநல சேவை திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் என பலரும் கலந்து கொண்டனர்.

அம்பாறை மாவட்டத்தில்

## நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தை மீறிய 60 பேருக்கு எதிராக நடவடிக்கை

(ஒலுவில் விசேட நிருபர்)

அம்பாறை மாவட்டத்தில் கடந்த செப்டெம்பர் மாதம் நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தை மீறி வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்த 60 வர்த்தகர்களுக்கு நீதிமன்றங்களினால் 01 இலட்சத்தி 93 ஆயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

அக்கரைப்பற்று, கல்முனை, சம்மாந்துறை, பொத்துவில், அம்பாறை, தெஹியத்தக்கண்டி ஆகிய நீதிமன்றங்களின் நியாயாதிக்கத்திற்குட்பட்ட பிரதேசங்களில் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் புலனாய்வு உத்தியோகத்தர்கள் மேற்கொண்ட சுற்றிவளைப்புகளில் நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தை மீறி வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்ட 98 வர்த்தகர்கள் கண்டுபிடிக்கப்பட்டு இதில் 60 வர்த்தகர்களுக்கு எதிராக நீதிமன்றங்களில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு இவ் வர்த்தகர்களுக்கு 01 இலட்சத்தி 93 ஆயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டுள்ளதாக, பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் அம்பாறை மாவட்ட பொறுப்பதிகாரி எஸ்.என். எம். சாலிய பண்டார தெரிவித்தார்.

ஏனைய வர்த்தகர்களுக்கு நீதி மன்றிங்களில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

கட்டுப்பாட்டு விலையை மீறி கூடுதலான விலைக்கு பொருட்கள் விற்பனை செய்யப்படுவதாக நுகர்வோர்கள் செய்த முறைப்பாட்டையடுத்து மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக அபேவிக்கிரமவின் அலோசனைக்கமைய பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் புலனாய்வு உத்தியோகத்தர்கள் சுற்றி வளைப்புகளை மேற்கொண்டதாக தெரிவித்தார்.

அத்தியவசியப் பொருட்களுக்கு அரசாங்கத்தினால் நிர்ணயிக்கப்பட்ட விலையை விட கூடுதலான விலைக்கு பொருட்களை விற்பனை செய்தமை, நுகர்வோர் நலன் கருதி வர்த்தக நிலையங்களில் விலைப்பட்டியலை காட்சிப்படுத்தாமை, நுகர்வுக்குப் பொருத்தமில்லாத பொருட்களை காட்சிப்படுத்தியமை, காலவதியான பொருட்கள் மற்றும் தரமற்ற பொருட்களை விற்பனை செய்து நுகர்வோரை ஏமாற்றுதல், மின் உபகரணங்களுக்கான கட்டுறுதிக் காலத்தை வழங்காமை போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்ட வர்த்தகர்களுக்கெதிராகவும் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்ததாகவும் கூறினார்.

அத்தியாவசிய பொருட்களை கூடுதலான விற்பனை செய்யும் வர்த்தகர்கள் தொடர்பாக பொது மக்கள் 1977ஆம் இலக்கத்திற்கு அல்லது மாவட்ட நுகர்வோர் அதிகார சபையின் 0632222355 எனும் இலக்க தொலைபேசி இலக்கத்திற்கு தகவல்களை வழங்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

# இரண்டாயிரம் பேருக்கு கண்புரை சத்திர சிகிச்சை மேற்கொள்ள ஏற்பாடு

**யாழ் . விசேட நிருபர்**

வடமாகாணத்தில் காத்திருப்பு பட்டியலின்றி கண்புரை சத்திர சிகிச்சை மேற்கொள்ளவுள்ளதாகவும் 10 நாட்களுக்குள் 2 ஆயிரம் பேருக்கு கண்புரை சத்திர சிகிச்சை மேற்கொள்ளவுள்ளதாகவும், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் கண் சிகிச்சை வைத்திய நிபுணர் எம்.மலரவன் தெரிவித்தார்.

உலக விழிப்புணர்வு தினத்தை முன்னிட்டு யாழ். போதனா வைத்தியசாலையின் கண்ணியல் பிரிவில் இச்சத்திர சிகிச்சையை மேற்கொள்ளவுள்ளதாக தெரிவித்த அவர், இம்முறை யாழ். போதனா வைத்தியசாலையின் கண்ணியல் பிரிவானது வடமாகாணத்திலுள்ள ஏனைய கண்ணியல் பிரிவுகளுடன் இணைந்து கண்புரை சத்திர சிகிச்சையை மேற்கொள்ளவுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் யாழ். போதனா வைத்தியசாலையில் மாத்திரம் 9 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கண்புரை சத்திர சிகிச்சைகளை மேற்கொண்டுள்ளதுடன், கிளிநொச்சி மற்றும் வவுனியாவில் 5 ஆயிரம் பேருக்கு கண்புரை சத்திர சிகிச்சை மேற்கொண்டுள்ளதாகவும், அவர் கூறினார்.



இந்நிலையில் வடமாகாணத்தில் இந்த வருடத்தில் 15 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கண்புரை சத்திர சிகிச்சைகளை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ள போதும், 20 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்களுக்கு கண்புரை சத்திர சிகிச்சை மேற்கொள்ள முடியுமென்று தாம் நம்புவதாகவும், அவர் குறிப்பிட்டார்.

யாழ். போதனா வைத்தியசாலையில் குறுகிய காலத்தில் கண்புரை சத்திர சிகிச்சை முகாம் நடத்துவது இது மூன்றாவது தடவையாகும். வடமாகாணத்தில் இது நான்காவது தடவையாகும். முதல் தடவையில் தாம் 1,200 கண்புரை சத்திர சிகிச்சைகளை மேற்கொண்டதாகவும், கடந்த வருடத்திலும் உலக விழிப்புணர்வு தினத்தையிட்டு இரத்தினபுரி வைத்தியசாலை நட்புறவு மன்றத்தின் ஏற்பாட்டில் 1,200 பேருக்கு கண்புரை சத்திர சிகிச்சைகளை மேற்கொண்டதாகவும், அவர் கூறினார்.

கடந்த 2021ஆம் ஆண்டு முதல் தனியார் அரசாங்க நட்புறவு உதவிகளுடன் ALAKA FOUNDATION, ANANDA FOUNDATION, Assist RR நிறுவனம் ஆகியவற்றின் உதவியுடன் கண்புரை சத்திர சிகிச்சையை மேற்கொண்டு வருவதாகவும், அவர் கூறினார்.

யாழ்ப்பாணத்தில் கடந்த 10 வருடங்களுக்கு முன்னர் கண்புரை சத்திர சிகிச்சைக்கான காத்திருப்புக் காலம் 2 வருடங்களுக்கு மேலாக இருந்தது. அதாவது சத்திர சிகிச்சைக்கு பதிந்தால் 2 வருடங்களின் பின்னரே சத்திர சிகிச்சை மேற்கொள்ள முடியும். சில வேளைகளில் 4 வருடங்களுக்கு பின்னர் கூட சிலருக்கு கண்புரை சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது

இந்நிலையில் தற்போது வடமாகாணத்தில் காத்திருப்புக் காலம் இல்லாது பதிந்தால் உடனடியாக சத்திர சிகிச்சையை மேற்கொள்ள கூடியவாறு இருக்கும். இது தொடர்பாக எதிர்வரும் 25ஆம் திகதி முதல் செயற்படவுள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

மேலும் அனைத்து ஆரம்ப சுகாதாரப் பிரிவுகளிலும் வடமாகாண ஆளுநரின் பணிப்புரைக்கமைய சுகாதார திணைக்களத்தால் காத்திருப்புக் காலம் இல்லாது உடனுக்குடன் கண்புரை சத்திர சிகிச்சையை மேற்கொள்வதற்கானவசதியைஏற்படுத்திக் கொடுக்கவுள்ளதாகவும், அவர் குறிப்பிட்டார்.

எனவே வடமாகாணத்தில் வசிப்பவர்கள் அனைவரும் தமக்கு கண்புரை நோய் அல்லது பார்வை குறைபாடு இருப்பதாக உணர்ந்தால் அருகிலுள்ள ஆரம்ப சுகாதார வைத்திய நிலையத்திலோ அல்லது தள வைத்தியசாலையிலோ அல்லது மாவட்ட வைத்தியசாலையிலோ கண் பரிசோதனை மேற்கொண்டு, கண்புரை சத்திர சிகிச்சை மேற்கொள்ள வேண்டுமெனில் காத்திருப்புக் காலமின்றி மேற்கொள்ள கூடியதாக இருக்குமெனவும், அவர் மேலும் தெரிவித்தார்.

# வடக்கின் உதயம்

## சிலாவத்தையில் கடை தீக்கிரை



**ஓமந்தை விசேட நிருபர்**

முல்லைத்தீவின் சிலாவத்தை பிரதேச சந்தைக்கு முன்பாக அமைந்துள்ள பலசரக்குக் கடையொன்றும் அக்கடையுடன் அமைந்துள்ள களஞ்சியசாலையும் நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலை தீக்கிரையாகின. இந்நிலையில் அக்கடையிலிருந்த பல இலட்சம் ரூபா பெறுமதியான பொருட்களும் தீயில் எரிந்து நாசமாகின. சிலாவத்தை வீதி வழியாகச் சென்ற அரசாங்க பேருந்து சாரதியும் நடத்துநரும் கடை தீப்பிடித்ததை அவதானித்து, அயல் வீட்டவர்களின் உதவியுடன் தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

இந்த தீ பரவல் திட்டமிட்ட செயற்பாடா அல்லது மின்னொழுக்கால் தீ பரவியதா எனும் கோணத்தில் முல்லைத்தீவு பொலிஸார் விசாரணையை முன்னெடுத்துள்ளனர்.

இந்த தீ பரவல் தொடர்பாக மின்சார சபையினர், தடயவியல் பொலிஸார் இணைந்து மேலதிக சோதனை நடவடிக்கையை முன்னெடுக்கவுள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

# மக்கள் ஆணை பெற்று பேரம் பேசும் சக்தியாக வருவோம்

## முன்னாள் எம்.பி. திலீபன்

**வவுனியா விசேட நிருபர்**



"மக்கள் ஆணையை பெற்று பேரம் பேசும் சக்தியாக வருவோம்" என, ஈ.பி.டி.பி. கட்சியின் வன்னி மாவட்ட வேட்பாளரும் பாராளுமன்ற முன்னாள் உறுப்பினருமான கு.திலீபன் தெரிவித்தார்.

வவுனியா மாவட்ட செயலகத்திலுள்ள தேர்தல் பணிமனையில் வேட்புமனு தாக்கல் செய்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

"பாராளுமன்ற தேர்தலுக்கான எமது வேட்புமனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இதனை அறிந்து மக்கள் வாழ்த்து தெரிவித்து வருகின்றனர். வன்னி மட்டுமன்றி யாழ்ப்பாணம், கிழக்கு மாகாணம், கொழும்பு ஆகிய இடங்களிலும் போட்டியிட்டு மக்களின் ஆணையை பெற்று தோழர் டக்ளஸ் தேவானந்தாவின் தலைமையிலான எமது கட்சி பேரம் பேசும் சக்தியாக வருவோம்.

வன்னியில் இரண்டு ஆசனங்களையும், யாழில் மூன்று ஆசனங்களையும் பெறக்கூடிய நிலை இருக்கின்றது" எனத் தெரிவித்தார்.

# இணுவில் இந்து கல்லூரியில் இலவச யோகா கலை வகுப்பு

**கோப்பாய் குறூப் நிருபர்**

உலக சமாதான ஆலயத்தின் அனுசரணையுடன் இலவச யோகா கலை பயிற்சி வகுப்பு எதிர்வரும் சனிக்கிழமை மாலை 5.00 மணிக்கு யாழ். இணுவில் இந்துக் கல்லூரியில் ஆரம்பமாகவுள்ளது. இந்த வகுப்பு பிரதி சனி, ஞாயிறுக்கிழமை தோறும் மாலை 5.00 மணி முதல் 6.00 மணிவரை நடைபெறவுள்ளது.

இவ்வகுப்பில் யோகா கலை தொடர்பான விளக்கம், நோய் குணமாக எவ்வகையான யோகாசனம் மேற்கொள்ள வேண்டுமென்பது தொடர்பான விளக்கம், யோகா கலையுடன் தியான பயிற்சியை மேற்கொள்வது தொடர்பான விளக்கமும் வழங்கப்படும். யோகா பயிற்சியை கலாநிதி பா.சு தாகரன் வழங்கவுள்ளார். இந்த வகுப்பில் பங்குபற்றுபவர்களுக்கு மூன்று மாத பயிற்சி நிறைவில் சான்றிதழ் வழங்கப்படுமென்பதுடன், சிறியவர் முதல் பெரியவர் வரை ஆண், பெண் இருபாலரும் இதில் கலந்து கொள்ளலாம். வகுப்பில் பங்குபற்ற விருப்பமுடையவர்கள் 0779603001, 0760233301 எனும் கையடக்கத் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு, மேலதிக தகவல்களை பெற்றுக் கொள்ளலாம். முன்பதிவும் செய்துகொள்ள முடியுமெனவும், ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

# புதையல் தோண்டிய 4 பேருக்கு சரீர பிணை

**ஓமந்தை விசேட நிருபர்**

புதுக்குடியிருப்பு, புதுமாத்தளன் சாலை கடற்கரை பகுதியில் புதையல் தோண்டிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட 4 பேரும் முறையே 2 இலட்சம் ரூபா பெறுமதியான சரீரப் பிணையில் முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பாக இராணுவத்தினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் அப்பகுதிக்குச் சென்ற பொலிஸாரால் இச்சந்தேக நபர்கள் நால்வரும் சம்பவ இடத்தில் கடந்த சனிக்கிழமை கைது செய்யப்பட்டனர். அத்துடன் இவர்களிடமிருந்து புதையல் தோண்டும் ஆயுதங்கள், ஜே.சி.பி. இயந்திரமும் கைப்பற்றப்பட்டுள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

மாத்தளை, அநுராதபுரம், காலி, கண்டி மாவட்டங்களை இச்சந்தேக நபர்கள் சேர்ந்தவர்களென்பதுடன், இவர்கள் 24, 42, 45, 47 வயதுடையவர்களெனவும் விசாரணையில் தெரியவந்துள்ளதாகவும், பொலிஸார் கூறினர்.

# வகுப்புக்கு சென்று திரும்பிய மாணவியின் தங்க சங்கிலி அறுப்பு

**ஓமந்தை விசேட நிருபர்**

முள்ளியவளை நகரில் மாணவி ஒருவரின் தங்கச்சங்கிலி நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை திருட்டு போனதாக, பொலிஸார் தெரிவித்தனர். முல்லைத்தீவு, வட்டுவாகல் பிரதேசத்திலிருந்து முள்ளியவளை நகருக்கு வகுப்புக்காக சென்ற உயர்தர மாணவியான இவர் தனது வகுப்பை முடித்து விட்டு பேருந்து நிலையம் நோக்கி நடந்து சென்ற போதே இந்த அசம்பாவிதத்தை எதிர்நோக்கினார்.

முள்ளியவளை பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்துக்கு முன்பாக மோட்டார் சைக்கிளில் வந்த இரு இளைஞர்கள் இம்மாணவியின் தங்கச் சங்கிலியை அறுத்துக்கொண்டு தப்பிச் சென்றதாகவும், பொலிஸார் கூறினர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக பாதிக்கப்பட்ட மாணவி, முள்ளியவளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததை தொடர்ந்து முள்ளியவளை பொலிஸார் மேலதிக விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர்.

# கடற்றொழிலாளருக்கு வாழ்வாதார உதவி

**கோப்பாய் குறூப் நிருபர்**



கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் பாஷையூரிலுள்ள ஐம்பது குடும்பங்களுக்கு கடற்றொழில் உபகரணங்கள் நேற்று முன்தினம் திங்கட்கிழமை வழங்கி வைக்கப்பட்டன.

தமிழீழ விடுதலை இயக்கத்தின் ஏற்பாட்டில் இந்த உபகரணங்கள் கடற்றொழிலாளர்களுக்கு வழங்கி வைக்கப்பட்டன.

பாஷையூர் சனசமூக நிலையத்தில் இதற்கான நிகழ்வு நடைபெற்றதுடன், இந்நிகழ்வில் பிரதம அதிதியாக தமிழீழ விடுதலை இயக்கத்தின் ஊடக பேச்சாளர் குருசாமி சுரேந்திரன் கலந்துகொண்டு கடற்றொழில் உபகரணங்களை கடற்றொழிலாளர்களுக்கு வழங்கி வைத்தார்.

இந்நிகழ்வில் முன்னாள் மாநகர பிரதி மேயர் துரைராஜா ஈசன், முன்னாள் மாநகர வட்டார உறுப்பினர்கள், பாஷையூர் சனசமூக நிலைய உறுப்பினர்கள், கடற்றொழிலாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# கிளிநொச்சியில் டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் முன்னெடுப்பு

**பரந்தன் குறூப் நிருபர்**

கிளிநொச்சி மாவட்டத்தில் டெங்கு நோய் பரவுவதை கட்டுப்படுத்தும் வகையில் டெங்கு ஒழிப்பு திட்டம் நேற்று செவ்வாய்க்கிழமை முதல் முன்னெடுக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட A9 பிரதான வீதியை மையமாக கொண்ட இடங்களை டெங்கு அற்ற சூழலாக மாற்றுவதற்கான சிரமதான வேலைத்திட்டமாக இது முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதன்போது பல திணைக்களங்கள் இணைந்து கிளிநொச்சி நகரின் முக்கியமான நான்கு இடங்களில் டெங்கு ஒழிப்பு சிரமதான பணியை ஆரம்பித்தது.

கரடிப்போக்கு சந்தியிலிருந்து கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்கள அலுவலகம்வரையும் கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்கள அலுவலகத்திலிருந்து டிப்போ சந்திவரையும் டிப்போ சந்தியிலிருந்து கனகபுரம் சந்திவரையும் டிப்போ சந்தியிலிருந்து கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைவரையான இடங்களில் நேற்றைய தினம் டெங்கு ஒழிப்பு திட்டம் முன்னெடுக்கப்பட்டது.



பூநகரி, பச்சிலைப் பள்ளி, கண்டாவளை பிரதேச செயலகங்கள், கிளிநொச்சி மாவட்ட செயலகம், கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களம், கரைச்சி பிரதேச செயலகம், கரைச்சி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, பாதுகாப்பு துறை, கரைச்சி பிரதேச சபை, அரச சார்பற்ற நிறுவனங்கள், சமூக மட்ட அமைப்புகள், சமூக தொண்டர் அமைப்பு ஆகியவற்றை சேர்ந்த உத்தியோகத்தர்கள் டெங்கு ஒழிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர். இதன்போது டெங்கு நுளம்புகள் பெருகக்கூடிய இடங்களிலுள்ள குப்பைகள், பொலித்தீன் பைகள், வெற்றுப் போத்தல்கள் உள்ளிட்டவை அகற்றப்பட்டன.

# பதவி உயர்வு பெற்றார்

இலங்கை நிர்வாக சேவையின் விசேட தரத்துக்கு யாழ்ப்பாண மாவட்ட பதில் அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் பதவி உயர்த்தப்பட்டுள்ளார். பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சால் நடத்தப்பட்ட இலங்கை



நிர்வாக சேவையின் விசேட தரத்துக்கான நேர்முக தேர்வுக்கு தோற்றியிருந்தார். இந்நிலையில் பொதுச் சேவைகள் ஆணைக்குழுவால் இலங்கை நிர்வாக சேவையின் விசேட தரத்துக்கு இவர் பதவி உயர்த்தப்பட்டுள்ளார்.

# கட்டுமரம் கவிழ்ந்ததில் கடற்றொழிலாளர் பலி

**யாழ். விசேட நிருபர்**

யாழ்ப்பாணத்தில் கட்டுமரம் கடலில் கவிழ்ந்ததில் கடற்றொழிலாளர் ஒருவர் கடலில் மூழ்கி நேற்று முன்தினம் திங்கட்கிழமை உயிரிழந்துள்ளார்.

தும்பளை லூதர் மாத தேவாலயடியைச் சேர்ந்த 69 வயதுடைய திருச்செல்வம் ஞானப்பிரகாசம் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இந்தக் கடற்றொழிலாளர் தனது கட்டுமரத்தில் கடற்றொழிலில் ஈடுபட்ட வேளையிலேயே இந்த அசம்பாவிதத்தை எதிர்நோக்கியதாகவும் இவரது கட்டுமரம் திடீரென்று கடலில் கவிழ்ந்ததாகவும், சம்பவத்தை கண்டவர்கள் தெரிவித்தனர்.

இவரது சடலம் ஏனைய கடற்றொழிலாளர்களின் உதவியுடன் மீட்கப்பட்டு, பிரேத பரிசோதனைக்காக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

# தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் – யாழ்ப்பாண மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர் சந்திப்பு

**யாழ். விசேட, கோப்பாய் குறூப் நிருபர்கள்**

யாழ்ப்பாண மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர் ம.பிரதீபனை தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீரத்நாயக்க யாழ். மாவட்ட செயலகத்தில் சந்தித்து கலந்துரையாடினார்.



இந்தக் கலந்துரையாடலின் போது தற்போதைய வேட்புமனு கையேற்பு தொடர்பாகவும் எதிர்வரும் நவம்பர் மாதம் 14ஆம் திகதி நடைபெறவுள்ள பாராளுமன்ற தேர்தல் தொடர்பாகவும் பாராளுமன்ற தேர்தலுக்காக யாழ்ப்பாண மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னேற்பாடுகள் தொடர்பாகவும் அவர்கள் கலந்துரையாடினர். இந்தக் கலந்துரையாடலில் தேர்தல்கள் திணைக்களத்தின் பிரதி ஆணையாளர் எஸ்.அச்சுதனும் கலந்து கொண்டார்.

# பிரான்ஸுக்கு அனுப்புவதாக கூறி பண மோசடி செய்தவர் கைது

**யாழ் . விசேட நிருபர்**

பிரான்ஸுக்கு அனுப்பி வைப்பதாகக் கூறி யாழ்ப்பாணத்தை சேர்ந்த இளைஞர் ஒருவரிடம் 15 இலட்சம் ரூபாவை மோசடி செய்த குற்றச்சாட்டில் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

தன்னை பிரான்ஸுக்கு அனுப்பி வைப்பதாகக் கூறி முதற்கட்டமாக 15 இலட்சம் ரூபாவை பெற்ற பின்னர் வெளிநாட்டுக்கு அனுப்புவதற்கு எந்தவித நடவடிக்கையும் எடுக்காமல் தன்னை ஏமாற்றி விட்டதாக குற்றத்தடுப்பு பிரிவில் பாதிக்கப்பட்ட இளைஞர் முறைப்பாடு செய்துள்ளார்.

இம்முறைப்பட்டின் அடிப்படையில் விசாரணையை முன்னெடுத்த பொலிஸார், கடந்த ஞாயிற்றுக்கிழமை பருத்தித்துறையை சேர்ந்த இச்சந்தேக நபரை கைது செய்துள்ளனர்.

இந்நிலையில் இச்சந்தேக நபரை நேற்று முன்தினம் திங்கட்கிழமை யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தில் முற்படுத்திய போது, பாதிக்கப்பட்ட இளைஞரிடம் பெற்றுக் கொண்ட பணத்தில் ஒருதொகையை மீள கையளிப்பதாகவும் எஞ்சிய பணத்தை மிக விரைவில் கையளிப்பதாகவும் தெரிவித்துள்ளார். இதனை அடுத்து சந்தேக நபரை பிணையில் செல்ல நீதிமன்று அனுமதித்தது.

# வடமராட்சி வடக்கு பிரதேச செயலக மின்சார வடத்தில் தீ பரவல்

யாழ்ப்பாணம், வடமராட்சி வடக்கு பிரதேச செயலகத்தின் மின் இணைப்பில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை ஏற்பட்ட மின்னொழுக்கு காரணமாக மின்சார வடத்தில் தீ பரவல் ஏற்பட்டது. இந்நிலையில் ஊழியர்கள் துரிதமாக செயற்பட்டமையால் தீ பரவல் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டு பாரிய அனர்த்தம் தவிர்க்கப்பட்டதாக, சம்பவத்தை அவதானித்தவர்கள் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக இலங்கை மின்சார சபைக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து மின்சார சபை ஊழியர்கள் பிரதேச செயலகத்துக்கு விரைந்து சென்று மின் இணைப்பை சீர் செய்து நிலைமையை வழமைக்கு கொண்டு வந்தனர்.

# நடப்போம் சாயி உடன் வாருங்கள் எதிர்வரும் 13ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை

## பம்பலப்பிட்டியிலிருந்து கொட்டாஞ்சேனை வரை



இலகுவாக அணுகக்கூடிய குருவாக எழுந்தருளியுள்ள சீரடி சாய் பாபாவின் திருவருள் இலங்கை நாடெங்கும் பரவி வரும் இந்த நாட்களில், கொட்டாஞ்சேனை ஸ்ரீ வரதராஜ விநாயகர் ஆலயம் ஐங்கரன் மண்டபத்தில் அமைந்துள்ள சீரடி சாயி பாபாவின் ஐம்பொன்னால் ஆன அழகிய அருள்மிகு திருவுருவம், கொழும்பு மாநகரெங்கும், பக்தர் நடை பயணமாக புடைசூழ வீதி வலம் வர திருவருள் பாலித்துள்ளது.

எதிர்வரும் 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு ஆரம்பமாகும் இந்த நடைப்பயணம், பம்பலப்பிட்டி வஜிரா வீதி விநாயகர் ஆலயத்திலிருந்து ஆரம்பித்து காலி வீதி வழியாக, காலி முகத்திடல் தாண்டி கோட்டை, புறக்கோட்டை, பிரதான வீதி, செட்டித்தெரு, ஜிந்துப்பிட்டி, விவேகானந்தா வீதி வழியாக புதுச்செட்டித்தெரு, ஜம்பட்டா வீதி, ஜோர்ஜ் ஆர் டி சில்வா மாவத்தை, கொட்டாஞ்சேனை வீதி வழியாக பக்தர்களுக்கு அருள்பாலித்து சுமார் 11.30 மணியளவில் ஸ்ரீ வரதராஜ விநாயகர் ஆலய சாயி நாதனின் சரணாலயத்தை வந்து சேரும்.

பக்தர்கள் இந்த புனித நடை பயணத்தை மேற்கொள்வது ஆன்மீக, உடல், உள நலனுக்காக மட்டுமின்றி, அவிசாவளையில் மிகப் பிரமாண்டமான சீரடி சாயி பாபாவின் ஆலயம் மற்றும் ஆன்மீக சமூக சேவை மையம் உருவாகி வருவது பற்றி மக்களிடையே அறியச் செய்வதும் ஆகும்.

பக்தர்கள் அனைவரையும் இந்த ஆன்மீக அருட்பயணத்தில் பங்கு கொண்டு கண்கண்ட குருவாம் சீரடி சாயி நாதனின் திருமேனி கண்டு, திருநாமம் கேட்டு, திரு உரு சிந்தித்து தெளிவுபெற கொட்டாஞ்சேனை, அவிசாவளை சாய் சரணாலய அறங்காவலர்கள் அழைப்பு விடுத்திருக்கின்றார்கள். மேலதிக விபரங்களுக்கு – 076 163 0462, கொட்டாஞ்சேனையிலிருந்து பம்பலப்பிட்டி வரை இலவச பயண ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பாத யாத்திரையில் கலந்து கொள்ள விரும்புவோர் கொட்டாஞ்சேனை வரதராஜ விநாயகர் சாய் சரணாலயத்தில் தொடர்புகொள்ளவும்.

# சமூக நல்லிணக்கத்திற்காக அயராது பாடுபட்ட மாவனல்லை தாஹிர் ஹாஜி

## (அன்னார் மறைந்து இன்றுடன் இரண்டு வருடம் பூர்த்தி)



மாவனல்லையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சமூக சேவையாளர் தாஹீர் ஹாஜியார் கடந்த 09/10/2022 அன்று இறைவன் அழைப்பை ஏற்றுக் கொண்டு இரண்டு வருடங்கள் கடந்து விட்டன.

அப்துல் ஹமீத், மரியம் பீபீ தம்பதியினரின் புதல்வரான இவர், ஒரு சமூக சேவையாளரும் அகில இலங்கை சமாதான நீதவானாகவும் திகழ்ந்தார். இவர் தனது ஆரம்பக் கல்வியை மாவனல்லை கிருங்கதெனிய ஆண்கள் பாடசாலையில் ஆரம்பித்து, அரநாயக்க 'உஸ்ஸாப்பிடிய சென்றல்" கல்லூரியிலும் உயர் கல்வியை தர்காநகர் அழுத்கம அல் ஹம்ரா வித்தியாலயத்திலும் கற்றார்.

அன்பும் பாசமும் மனித நேயமும் சமூக சிந்தனையும் கொண்ட இவரது பணியை மாவனல்லை மக்களால் மறக்க முடியாது. மாவனல்லை ஆதார வைத்தியசாலையின் நிர்வாக குழு உறுப்பினராகவும் மாவனல்லை பொலிஸ் நிலைய பாதுகாப்பு நடவடிக்கை அங்கத்தவராகவும் வர்த்தக சங்க உறுப்பினராகவும் விவசாயச் சங்க உறுப்பினராகவும் இதர அமைப்புகளோடும் இருந்ததோடு, ஹிங்குல்லோய மஸ்ஜிதுல் ஹுதா, மஹவத்தை ஜும்ஆப் பள்ளி வாசல், நயாவலை நிர்வாக குழு அங்கத்தவராகவும் தலைவராகவும் பணி செய்துள்ளார்.

பள்ளி நிர்வாகங்களில் இருக்கும் போது நயாவலை பள்ளிவாசலின் இடப் பற்றாக்குறைக்காக காணி வழங்கியதோடு மாவனல்லை ஆயிஷா கலாபீட மேலதிக தேவைக்காக காணி வழங்கி உள்ளார். மற்றும் மாணவர் கல்வி மேன்பாட்டுக்காக இலவச வகுப்புகளை நடாத்த ஏற்பாடு செய்ததோடு ஏழை மாணவர்களுக்கும் உதவி புரிந்துள்ளார். எந்த அரசியல் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் அதனோடு இணைந்து சமூகத்துக்காக பாடுபட்டுள்ளார்.

சமூகத்தில் நிலவும் அநீதியை தட்டிக் கேட்கும் தைரியசாலியாக இருந்தார். இனம் மதம் பாராமல் அனைத்து மத அங்கத்தவர்களோடும் தோல் கொடுத்து இணங்கி செயற்பட்டார். மாவனல்லை கலவரத்தின் போதும் முன்னின்று சேவை புரிந்தார். நாட்டில் நடந்த அனர்த்தங்களின் போது சக தோழர்களை இணைத்துக் கொண்டு தேவையான பொருட்களை எடுத்துக் கொண்டு உடன் விரையக்கூடியவர். சமூக நல்லிணக்கத்துக்காக பாடுபட்ட இவர் வைத்தியசாலையில் மரணிக்கும் ஜனாஸாக்களை வரையறைக்கேட்ப தாமதம் இன்றி பெற்றுக் கொடுக்க ஏற்பாடு செய்வார்.ஏழை நோயாளிகளுக்காக உதவியதோடு , மாவனல்லை வைத்தியசாலையில் கடமையாற்றிய மகப்பேற்று வைத்தியர் நவாஸ் ஜிப்ரியோடு சேர்ந்து "மம் பௌண்டேஷன்" எனும் நிர்வாக குழுவை அமைத்து மகப்பேற்று நிலையத்தை விஸ்தரிக்க பாடுபட்டார். வைத்திய சாலையில் மரணிக்கும் அநாதரவான ஜனாஸாக்களை பொறுப்பேற்று, தன் செலவில் நல்லடக்கம் செய்ய ஏற்பாடு செய்தார். இச் சந்தர்ப்பத்தில் ஒரு முறை ஒரு ஜனாஸாவை நல்லடக்கத்திற்காக அருகில் உள்ள பள்ளி வாசலுக்கு எடுத்து சென்ற போது, அதற்காக பணம் அறவிட்ட காரணத்தை சவாலாக எடுத்து, ஹமீதியா ஜும்ஆப் பள்ளி வாசலுக்கு தனவந்தர்கள் மூலம் ஒரு காணியைப் பெற்று மையவாடியை அமைக்கக் காரணமாக இருந்தார்.

ஊர் பற்றிய புத்தகமொன்றையும் வெளியிட காரண கருத்தாவாக இருந்துள்ளார். சிறுவர்களோடும் பெரியவர்களோடும் உறவுகளோடும் உறவைப் பேணி வந்த இவர், எவ்வேளையிலும் தன்னலம் கருதாமல் பிறர்நலன் கருதி பணி செய்தார். குறித்த தினம் மஃரிப் தொழுகையை எம்மோடு சேர்ந்து தொழுது விட்டு, பள்ளி நிர்வாக கூட்டத்தில் இணைந்திருந்தவாறு பள்ளிவாசல் மேல் மாடி கட்டிடத்திற்கான மாதிரி வடிவத்தை நிர்வாகத்திடம் ஒப்படைத்த நிலையில் அவரது இறுதி முடிவு சிறப்பாக அமைந்துவிட்டது. அன்னாரின் சேவைகளை இறைவன் பொருந்திக் கொண்டு ஜென்னதுல் பிர்தௌவ்ஸ் எனும் சுவனத்தை பரிசளிப்பானாக!

**டி.ஆர். எம். ஏ. ஸகரிய்யா**
(ஓய்வு பெற்ற அதிபர்,ஓய்வு பெற்ற திடீர் மரண விசாரணை அதிகாரி)

## அநுராதபுரத்தில் சுத்தமான குடிநீரை வழங்கும்

# துருவில நீர் சுத்திகரிப்பு நிலையத்துக்கு மாவட்ட செயலாளர் குழு நேரடி விஜயம்

**திறப்பனை தினகரன் நிருபர்**





அநுராதபுரம் நகரின் பெரும்பாலான பகுதிகளுக்கு சுத்தமான குடிநீரை வழங்கும் துருவில நீர் சுத்திகரிப்பு நிலையத்தை அநுராதபுரம் மாவட்ட செயலாளர் அண்மையில் நேரில் சென்று பார்வையிட்டார்.

துருவில நீர் சுத்திகரிப்பு நிலையமானது அநுராதபுரம் மாவட்டத்தின் நாச்சியாதுவ பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட துருவில கிராமத்தில் அமைந்துள்ளது.

துருவில நீர் சுத்திகரிப்பு நிலையம் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையினால் 2004 ஆம் ஆண்டு துருவில நீர்த்தேக்கம் நிறுவப்பட்டது.

கலாவெவ நீர்த்தேக்கத்திலிருந்து துருவில நீர் தேக்கத்திற்கு நீர் வழங்கும் முக்கிய நீர்த்தேக்கமாகும். மஹாவலி கங்கையில் இருந்து ஜயகங்க ஊடாக துருவில ஏரிக்கு நீர் வழங்கும் கலாவெவைக்கு நீர் எடுத்துச் செல்லப்பட்டு கலாவெவையிலிருந்து துருவில வரை அமைக்கப்பட்டுள்ள நீர்ப்பாசன கால்வாய் மூலம் துருவில நீர்த்தேக்கத்திற்கு நீர் விநியோகம் செய்யப்படுகிறது.

துருவில நீர் சுத்திகரிப்பு நிலையத்தின் சுத்திகரிப்பு செயல்முறை நவீன சுத்திகரிப்பு கட்டுப்பாட்டு முறைகளை உள்ளடக்கியுள்ளது. முழு சுத்திகரிப்பு நிலையமும் SCADE அமைப்பால் இயக்கப்படுகிறது. சுத்திகரிப்பு நிலையத்தின் அதிகபட்ச கொள்ளளவு ஒரு நாளைக்கு 21,000 கன மீட்டர் ஆகும். இது மூன்று முக்கிய சேவை நீர் கோபுரங்களுக்கு நீர் விநியோகிக்கிறது. பிரதான நீர் கோபுரங்கள் அநுராதபுரம் கிழக்கு (விஜயபுரம்), அநுராதபுரம் தெற்கு (தலாவ) மற்றும் நாச்சாதுவ நீர் வழங்கல் என வகைப் படுத்தப்பட்டுள்ளது. இதன் ஊடாக 110,000 பேருக்கு நீர் சேவைகளை வழங்குவதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நீர் சுத்திகரிப்பு நிலையத்தின் முக்கிய நோக்கம் விவசாயத்தை பிரதான வாழ்வாதாரமாக கொண்ட மக்கள் மற்றும் நகர மக்கள் அனைவருக்கும் சுத்தமான குடிநீரை வழங்குவதாகும்.

இந்நிகழ்வில் அநுராதபுரம் மேலதிக மாவட்ட செயலாளர் (காணி) சந்தியா என்.ஜி.அபேசேகர உள்ளிட்ட அரச அதிகாரிகளும் இதில் கலந்துகொண்டனர்.

# தேசிய தமிழ்த்தின போட்டியில் 2ஆம் இடம்பெற்று சாதனை

**கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்**



புத்தளம், மதுரங்குளி கணமூலை முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் 10ஆம் தரத்தில் கல்வி பயிலும் முபீன் முபா என்ற மாணவி தேசிய மட்ட தமிழ்த் தினப் போட்டியில் பங்குபற்றி இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளார்.கடந்த வியாழக்கிழமை (05) கொழும்பு விவேகானந்தா கல்லூரியில் இடம்பெற்ற தேசிய மட்ட தமிழ்த் தின போட்டியில் பிரிவு 4 பாவோதல் போட்டி நிகழ்ச்சியில் இவர் பங்குபற்றி தனது திறமையை வெளிப்படுத்தி இரண்டாம் இடத்தைப் பெற்று பாடசாலைக்கும், ஊருக்கும் பெருமை சேர்த்துள்ளார்.

இவ்வாறு பெருமை சேர்த்த மாணவிக்கு பாடசாலையின் அதிபர் பி.எம்.முஸ்னி உட்பட ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்தி சங்கம், பழைய மாணவர் சங்கம் உட்பட பெற்றோர்கள், கணமூலை கிராம மக்கள் தமது வாழ்த்துக்களையும் தெரிவித்துள்ளனர்.

# தேர்தல் பிரசார செலவுகள் அறிக்கை 38 பேரில் 4 பேர் மட்டுமே கையளிப்பு

## இறுதி திகதிக்குப் பின்னர் கையளிப்போருக்கு தண்டனை தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவிப்பு



**(லோரன்ஸ் செல்வநாயகம்)**

நடந்து முடிந்துள்ள ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளர்களாக போட்டியிட்டவர்களின் பிரசார செலவுகள் தொடர்பான அறிக்கையை தேர்தல்கள் ஆணைக்குழு கோரியிருந்த போதும் இதுவரை நான்கு பேர் மாத்திரமே அதனை கையளித்துள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அதற்கிணங்க இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் 38 வேட்பாளர்கள் போட்டியிட்டுள்ள நிலையில், அவர்களில் நால்வர் மாத்திரமே தமக்கான பிரசார செலவுகள் தொடர்பான அறிக்கையை தேர்தல் ஆணைக்குழுவுக்கு கையளித்துள்ளதாகவும் ஆணைக்குழுவின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

மேற்படி பிரசார செலவுகளை சமர்ப்பித்துள்ள வேட்பாளர்களின் தேசிய ஜனநாயக முன்னணியின் வேட்பாளர் கலாநிதி விஜேதாச ராஜபக்‌ஷ, ஸ்ரீலங்கா சமாஜவாதி கட்சியின் வேட்பாளர் மஹிந்த தேவகே, சுயாதீன வேட்பாளர் பிரேமஸ்ரீ மானகே, மற்றும் கே. ஆனந்த குலரத்ன ஆகியோரும் உள்ளடங்குவதாக ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தேர்தல் செலவுகளை மட்டுப்படுத்தும் சட்டத்திற்கு இணங்க எதிர்வரும் 13 ஆம் திகதி மேற்படி பிரசார செலவுகள் தொடர்பான அறிக்கையை கையளிக்கும் இறுதி தினமாகும். அதற்கு முன்னர் மேற்படி வேட்பாளர்கள் தமது தேர்தல் பிரசார செலவு அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டும் என கேட்டுக் கொண்டுள்ள தேர்தல்கள் ஆணைக்குழு, அதன் பின்னர் அதனை ஒப்படைக்கும் வேட்பாளர்கள் தொடர்பில் சட்டவிரோத நடவடிக்கை சட்டத்தின் கீழ் தண்டனை வழங்க முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# சிறுவர் தின நிகழ்வில் ஆளுநர் பங்கேற்பு



உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட சித்திரம் மற்றும் சுவரொட்டி போட்டிகளில் வெற்றிப் பெற்றவர்களுக்கு சான்றிதழ், பரிசில்கள் வழங்கும் நிகழ்வு அண்மையில் அநுராதபுரம் மத்திய வித்தியாலயத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் வடமத்திய மாகாண ஆளுநர் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கி கௌரவித்தார். இதன்போது எடுக்கப்பட்ட படத்தை இங்கு காணலாம்.

**(படம் : அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்)**

# Core Humanitarian Standard (CHS) சிங்கள கையேடு வெளியீடு





கலாசாரத்துக்கும் அபிவிருத்திக்குமான முஸ்லிம் நிறுவனத்தின் (MFCD) Core Humanitarian Standard (CHS) கையேட்டின் சிங்கள மொழி பெயர்ப்பு கொழும்பு பொது நூலகத்தில் வெளியிட்டு வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் வரவேற்பு உரையை MFCD நிறுவனத்தின் பிரதான நிறைவேற்று அதிகாரி HASREEM இஸ்மாயில் நிகழ்த்தியதுடன் (CHS) இன் முக்கியத்துவம் மற்றும் புத்தகத்தின் அறிமுகத்தையும் MFCD நிறுவனத்தின் தலைவர் HANAN HUSSAIN நிகழ்த்தினார். குறித்த நிகழ்வை இலங்கை களனி பல்கலைக்கழக விரிவுரையாளரும் சமூக செயற்பாட்டாளருமான சக்கீப் மொஹமட் சிங்களத்தில் வழங்கினார்.

இந்நிகழ்வில் கொலன்னாவை பிரதேச செயலகத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அதிகாரிகளும் கொலன்னாவை மற்றும் களுத்துறை பிரதேசங்களிலுள்ள பல சமூக செயற்பாட்டு அமைப்புகளின் பிரதிநிதிகளும் பங்கேற்றனர். நிகழ்வின் இறுதியில், பங்கேற்பாளர்கள் தங்கள் கருத்துக்களை பகிர்ந்து கொண்டனர்.

# மருதமுனை நூலகத்தில் 'வேரும் தளிரும்' சிறப்பு நிகழ்வு

**(கல்முனை விசேட நிருபர்)**



தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு மருதமுனை பொது நூலகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த "வேரும் தளிரும்" சிறப்பு நிகழ்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றது. நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையின் சுற்று நிரூபத்துக்கமைய "உலகை வென்றவர்கள் வாசித்த மக்களே" எனும் தொனிப்பொருளை மையமாகக் கொண்டு நூலகர் ஹரீஷா சமீம் தலைமையில் இந்நிகழ்வு நடைபெற்றது.

கல்முனை மாநகர சபையின் கணக்காளர் வை.ஹபீபுள்ளாஹ் பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்தார்.

# களைகட்டிய இரண்டாவது கர்நாடக இசைக்கச்சேரி

**(காரைதீவு குறூப் நிருபர்)**



இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களமும் காரைதீவு சுவாமி விபுலானந்த ஞாபகார்த்த பணி மன்றமும் இணைந்து முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளாரின் துறவற நூற்றாண்டு விழாவையொட்டி நடத்திய இரண்டாவது கர்நாடக இசைக்கச்சேரி காரைதீவு விபுலானந்த மணி மண்டபத்தில் நடைபெற்றது.இந்தியாவில் இசைத்துறையில் முதுமாணிப் பட்டம் பெற்ற அழகரெத்தினம் கல்யாண்சரண் (வாய்ப்பாட்டு), சுதாகரன் கோவிசரண்( மிருதங்கம்), பிரிசில்லா ஜோர்ஜ் (வயலின்) ஆகியோர் கர்நாடக இசைக்கச்சேரியை ஒருமணி நேரம் சிறப்பாக நடத்தினர்.இந்நிகழ்விற்கு பிரதம அதிதியாக காரைதீவு சுவாமி விபுலானந்த ஞாபகார்த்த பணி மன்றத்தின் போஷகர் வித்தகர் விபுலமாமணி வி.ரி. சகாதேவராஜா கலந்து சிறப்பித்தார்.

## திகாமடுல்ல மாவட்டத்தில்

# ஈ.பி.டி.பி தனித்து போட்டியிட தீர்மானம்



திகாமடுல்ல மாவட்டத்தில் ஈழ மக்கள் ஜனநாயக கட்சி தனித்து போட்டியிடவுள்ளதாக அக் கட்சியின் அம்பாறை மாவட்ட பிரதான அமைப்பாளர் முன்னாள் காரைதீவு பிரதேச சபையின் தவிசாளருமான செல்லையா இராசையா தெரிவித்தார்.

எதிர்வரும் பொதுத்தேர்தல் தொடர்பில் விசேட செய்தியாளர் சந்திப்பு அம்பாறை மாவட்ட ஊடக அமையத்தில் நேற்று நடைபெற்ற போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஈ.பி.டி.பி கட்சியின் முதன்மை வேட்பாளராக இம்முறை நடைபெறவுள்ள பொதுத்தேர்தலில் திகாமடுல்ல தேர்தல் தொகுதியில் போட்டியிடுகின்றேன்.

ஈழ மக்கள் ஜனநாயக கட்சி(EPDP) அம்பாறை மாவட்டத்தில் தனித்து போட்டியிடும்.

தற்போது மக்கள் மிகவும் சிரமத்திற்கு மத்தியில் வாழ்ந்து வருகின்றார்கள்.அவர்களுக்கான வாழ்வாதாரங்களை பெற்றுக்கொடுப்பது தான் எமது முதல் நோக்கமாகும்.இதை விட்டுவிட்டு வெறுமனே தேசியத்தை பேசி விட்டு காலத்தை கடத்துவது ஒரு உசிதமான விடயமல்ல.எமது மாவட்டத்திற்கு கடந்த கால தேர்தல்களில் பல கட்சியினர் வருகின்றார்கள். ஆனால் இங்கு நாங்கள் மாத்திரமே மக்களுக்காக உண்மையாக செயற்பட்டு வருகிறோம்.

இம்முறை தேசியத்தை விட்டு ஈபிடிபி கட்சியினை தேர்ந்தெடுப்பதற்கு காரணம் கடந்த 30 ஆண்டு காலமாக டக்ளஸ் தேவானந்தா எம்.பியாக வெற்றி பெற்று பல்வேறு அமைச்சுகளை பெற்று மக்கள் சேவை செய்து வருகின்றார்.

அவருக்கு நாங்கள் ஒத்துழைப்பு வழங்கினால் எம்மக்கள் நன்மை பெறுவார்கள்.

வடகிழக்கில் அவர் தனது சேவை காலத்தில் பல்வேறு அபிவிருத்தி வேலைத்திட்டங்களை செய்திருக்கின்றார்.

இதற்கு மக்கள் எம்மை ஆதரிக்க வேண்டும்.அந்த நம்பிக்கையில் தான் இன்று தேர்தலில் இறங்கியுள்ளோம்.

மக்கள் இவ்விடயங்களை தெளிவாக விளங்கிக் கொள்ள வேண்டும்.

எனவே 74 வருடங்களாக விடுதலை உரிமைகளை பேசிக் கொண்டு மக்களின் வாக்குகளை கொள்ளையிடுவதை விட்டு விட்டு நாங்கள் அபிவிருத்தி பாதையை நோக்கி செல்ல வேண்டுமென அவர் தெரிவித்தார்.

தினகரன்
THINAKARAN

# கேள்வி மற்றும் ஏனைய விளம்பரங்கள்

## ஸ்ரீ ஜெயவர்தனபுர கோட்டே மாநகர சபை

## 2025 ஆம் ஆண்டிற்கான வழங்கனர்களை பதிவு செய்தல்

2025 ஆம் ஆண்டிற்கான பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்கு அங்கீகாரம் பெற்ற வழங்குனர்கள், உற்பத்தியாளர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்களை பதிவு செய்துகொள்ளவதற்கான விண்ணப்பங்கள் **2024.10.09** ஆம் திகதி முதல் **2024.11.08** ஆம் திகதி வரை **(வார நாட்களில்) மு.ப.9.00 ஆம் மிகதி முதல் பி.ப.3.00** மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

விண்ணப்பப்படிவங்களை ஸ்ரீ ஜெயவர்தனபுர கோட்டே மாநகர சபையின் பாதுகாப்புப்பிரிவில் பெற்றுக்கொள்ளக்கூடியதுடன் ஒரு உருப்படிக்காக **ரூ.2,000/- + வட் 18% (ரூ.2,360)** கட்டணத்தை வைப்புச்செய்து குறித்த பற்றுச்சீட்டின் நகலுடன் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பத்தை **2024.11.08** ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும். பதிவுத்தபாலின் மூலம் அனுப்புவதாயின் விண்ணப்பத்தை அனுப்பும் தபாலுறையின் இடது பக்கமேல் மூலையில் **"2025 ஆம் ஆண்டிற்கான வழங்குனர்களை பதிவு செய்தல்"** எனக்குறிப்பிட்டு **"மாநகராட்சி ஆணையாளர், ஸ்ரீ ஜெயவர்தனபுர கோட்டே மாநகர சபை, இராஜகிரிய"** எனும் முகவரிக்கு அனுப்பவேண்டும்.

### வழங்கல்

**எழுதுபொருள் மற்றும் அலுவலக உபகரணங்கள்**

01. தட்டச்சு செய்யும் கடதாசி, கணினி கடதாசி, நகல் கடதாசி,இயந்திர சுருள்கள், கார்பன் கடதாசி, தபாலுறைகள், மை பட்டைகள், நீலம், கருப்பு, சிவப்பு கார்பன் போல்ட் பொயின்ட் பேனாக்கள் போன்ற அனைத்து எழுதுபொருள்களும்
02. டோனர் மற்றம் ரிப்பன்
03. கணினிகள், கணினி அச்சுப்பொறிகள், யு.பி.எஸ் மற்றும் உதிரிப்பாகங்கள், காற்றோட்ட உபகரணங்கள் மற்றும் இணைய உபகரணங்கள்
04. ரோனியோ இயந்திரங்கள், டூப்லோ நகல் இயந்திரங்கள், கைரேகை இயந்திரங்கள், நகல்களை பெரும் இயந்திரங்கள், கணிப்பான்கள், கணக்கிடும் இயந்திரங்கள், பணத்தை கணக்கிடும் இயந்திரங்கள் போன்றவை.
05. CCTV கெமரா உபகரணங்கள் மற்றும் அதற்கு தேவையான அனைத்துப்பொருட்களும்
06. காரியாலய உபகரணங்கள் (மரப்பலகை உற்பத்திகள்)
07. காரியாலய உபகரணங்கள் (பிளாஸ்டிக் உற்பத்திகள்)
08. காரியாலய உபகரணங்கள் (இரும்பு பொருட்கள்)

**கட்டுமான பொருட்கள்**

09. அனைத்து வகையான கட்டுமானப் பொருட்களும் (கல், செங்கல், மணல், சுண்ணாம்பு, ஓடு, எஸ்பெஸ்டோஸ் தாள் சீமெந்து, டயில் போன்றவை)
10. கால்வனேற்றப்பட்ட குழாய், இரும்பு, கால்வனேற்றப்பட்ட தாள், கம்பி ஆணிகள், ஆணிகள் மற்றும் போல்ட், மண்வெட்டி, நெம்புகோல், கதவு சாவிகள், தகடுகள், ஜி.ஐ குழாய், இரும்பு கம்பி, ஏங்கல் இரும்பு, வெல்டிங் தண்டுகள், உலோக பொருட்கள் மற்றும் வன்பொருள் உபகரணங்கள் மற்றும் பாகங்கள்.
11. ஹியூம் குழாய்கள், பிரீகாஸ்ட் கொங்கிரீட் உற்பத்தி தளம் மற்றும் சிமெண்ட் (தொகுதி) கல்
12. நிறப்பூச்சிகள்
13. வீதி பராமரிப்பு பொருட்கள் மற்றும் உபகரணங்கள்
14. ப்லைவுட் சீட், (மெல்லிய பலகைகள்) ப்லைவுட் கதவுகள், MDF போட், ஜிப்சம் பொடி மற்றும் அதனுடன் தொடர்புடைய உற்பத்திகள்
15. துண்டுகளாக்கப்பட்ட மரங்கள்
16. பிளம்பிங் சாதனங்கள், சுகாதார பொருட்கள் மற்றும் டயில்கள்
17. அலுமினிய பகிர்வு உபகரணங்கள் மற்றும் பாகங்கள்
18. வாயு பிரப்பாக்கிகள் மற்றும் உதிரி பாகங்கள்
19. மின்சார உபகரணங்கள் மற்றும் தெரு விளக்குகள், மின் விளக்குகள், LED மற்றும் CFL மின் விளக்குகள் கம்பிகள் போன்றவற்றுக்கு தேவையான அனைத்து உபகரணங்களும்.
20. தொழில்துறை உபகரணங்கள் மற்றும் இயந்திரங்கள்
21. கண்ணாடிகள்

**சுகாதார உபகரணங்கள்**

22. தும்புத்தடி, உச்சவரம்பு தும்புத்தடி, ஈக்கில், ஊசிகள், தூரிகைகள், முஸ்னா (துடைப்பான்) மூங்கில் கூடை, மற்றும் தரை விரிப்புகள் போன்றவை.
23. இரசாயன பொருட்கள் (ஹைட்ரேட் லைன், அலுமினியம் சல்பேட், குளோரின், டி.சி.எல் பவுடர் போன்றவை.
24. கிருமி நாசினிகள் மற்றும் பூச்சிக் கொள்ளிகள்
25. உர தொட்டிகள் (கொம்போஸ்ட்), கிரீன் தொட்டிகள்

**வாகன உதிரிப்பாகனங்கள்**

26. மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள், டிராக்டர் உதிரிப்பாகங்கள்
27. வாகன டயர்கள் / டியுப்கள் (டிராக்டர்கள், வண்டிகள், முச்சக்கர வண்டிகள், கம்பெக்டர்கள், லோடர், பெக்கோ இயந்திரங்கள்)
28. வாகன பெட்டரிகள்
29. கலி பவுசர், வெக்கும் பம்புகள்
30. மசகு எண்ணெய் வகைகள் (Lubricant Oil)

**வைத்திய உபகரணங்கள் மற்றும் மருந்துகள்**

31. மேற்கத்திய மருத்துவ மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்கள்
32. பல் மருந்துகள் மற்றும் பல் அறுவை சிகிச்சை உபகரணங்கள்
33. கால்நடை வைத்தியத்திற்கு தேவையான தடுப்பூசிகள் மற்றும் மருந்துகள்

**சீருடைகள்**

34. சீருடைக்கு தேவையான துணிகள்
35. ரெயின்கோட்கள், அலுவலக பாதணிகள், பாதுகாப்பு பாதணிகள் மற்றும் கம் பூட்ஸ் போன்றவை
36. கொடிகள், பதாகைள் (சிங்ஹ கொடி, பௌத்த கொடி, நிறுவன கொடி, பாலம் கொடி, டிஜிட்டல் பெயர் பலகை மற்றும் பதாதை வகை) போன்றவை

**விவசாய பொருட்கள்**

37. தாவரங்கள் மற்றும் மரங்கள்
38. புற்தரைகள், தேங்காய் நார், சாணத்திலான உரம் போன்றவை
39. பூச்சிக்கொல்லிகள், களைக்கொல்லிகள், கொசு விரட்டிகள் போன்றவை

**மற்றையவை**

40. நிகழ்வுக்கு தேவையான ஒலிபெருக்கிகள், மேடை மற்றும் நிகழ்வுக்கு தேவையான உபகரணங்கள் போன்றவை.
41. மின்பிரப்பாக்கிகள்
42. குப்பை வண்டிகள்
43. தீயணைப்பு கருவிகள் மற்றும் பிற பாதுகாப்பு உபகரணங்கள்
44. விளையாட்டு பொருட்கள் மற்றும் உடற்பயிற்சி உபகரணங்கள்
45. வாகன உரிமத் தகடுகள் மற்றும் மதிப்பீட்டு எண் தகடுகள்
46. ∴பைபர் பொருட்கள், பிளாஸ்டிக் பொருட்கள்
47. நினைவு தகடுகள்
48. முத்திரை மற்றும் பெயர் பலகை (நிறப்பூச்சு, முத்திரை வெட்டுதல், வாகனத்திற்கான பெயர் பலகை அமைத்தல் மேசையில் வைக்கும் பெயர் பலகைகள் போன்றவை)

### சேவைகள்

**காரியாலய சேவைகள்**

01. அச்சிடும் சேவைகள்
02. விளம்பரம் / பேனர் அச்சிடுதல் மற்றும் விளம்பர சேவைகள்
03. தட்டச்சுப்பொறிகள், சேகரிப்பான்கள் போன்றவற்றின் பழுதுபார்த்தல் மற்றும் சேவைகள்
04. இரும்பு அலமாரிகள், கதிரைகள் போன்றவற்றின் பழுதுபார்த்தல் மற்றும் சேவைகள்
05. அலுவலக அடையாள அட்டைகளை வழங்குதல்
06. கணினிகள் மற்றும் உதிரிப்பாகங்கள் பழுதுபார்த்தல் மற்றும் சேவைகள்
07. புகைப்படம் எடுத்தல் மற்றும் வீடியோ சேவைகள்
08. மொழிபெயர்ப்பாளர்கள் சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்
09. அலுமினிய இராக்கைகள் மற்றும் உள்ளக வடிவமைப்பு சேவைகள்

**கட்டுமான சேவைகள்**

10. கட்டிடம் கட்டுமானம் / வீதிகள் / வடிகால்கள் / கால்வாய்கள்
    01. ரூ.100,000.00 வரை மதிப்புள்ள கட்டுமானங்கள்
    02. ரூ.100,000.00 ற்கு மேல் மதிப்புள்ள கட்டுமானங்கள்
        (ICTAD பதிவு சான்றிதழ் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.)
11. சிறுவர் பூங்காக்கள் மற்றும் விளையாட்டு உபகரணங்கள் தயாரித்தல், புதுப்பித்தல் மற்றும் கிரீல் கதவுகள் தயாரித்தல்
12. நீர்பாசன சேவைகளை வழங்குதல்
13. வாயுப்பிரப்பாக்கி பராமரிப்பு மற்றும் சேவைகள்
14. நகர அலங்கார சேவைகள், இயற்கையை அழகுப்படுத்தும் சேவை வழங்கல், தோட்ட பராமரிப்பு மற்றும் மயான பூமியினை பராமரித்தல்
15. கால்வாய் வீதிகளை திருப்புதல் மற்றும் சுத்தம் செய்தல் நிர்மாணித்தல் மற்றும் அபிவிருத்தி செய்தல், வடிகால்களை சுத்தம் செய்வதற்கான இயந்திரங்களை வழங்குதல். (அகழ்வு இயந்திரங்கள், பேக்கோ லோடர், டிப்பர், லொரி, டிராக்டர், புல்டோசர், வீல் லோடர், ஸ்னோக்கள், பூம் டிரக் போன்றவை)
16. தகனசாலைகளின் கட்டுமானம், பழுதுபார்த்தல் மற்றும் சேவைகள்
17. மின் சேவைகளை வழங்குதல்
18. தொழிலாளர் சேவைகளை வழங்குதல்
19. அலுவலக கட்டிடங்களின் திரைச்சீலை மற்றும் உள்துறை அலங்காரம்

**போக்குவரத்து சேவைகள்**

20. அனைத்து மோட்டார் வாகன பழுதுபார்ப்பு (சீன வாகனங்கள் உட்பட) - வாகன டிங்கர் மற்றும் பூச்சிபூசுதல்)
21. மோட்டார் வாகன சர்விஸ் சேவை
22. டிராக்டர் சேவைகள் மற்றும் பழுதுபார்த்தல்
23. முச்சக்கர வண்டி சேவைகள் மற்றும் பழுதுபார்த்தல்
24. கம்பெக்டர் சேவை வழங்கல் மற்றும் புதுப்பித்தல்
25. வாகன பேட்டரிகளை சார்ஜ் செய்தல், தூண்களை அமைத்தல் மற்றும் பழுதுபார்த்தல்
26. டயர் நிரப்புதல், வெட்டப்பட்ட டயர்களை சரிசெய்தல் போன்றவை.
27. ஸ்டார்டர் மோட்டார் மின்மாற்றி பழுதுபார்த்தல் மற்றும் வாகனங்களின் மின் வேலைகள்
28. வாகன இலத்திரனியல் பழுதுபார்த்தல்
29. மெகா டொனிக் அமைப்பு பழுதுபார்த்தல்
30. வாகன ஹைட்ராலிக் அமைப்புகள் (நெகிழ்வான குழாய்கள் மற்றும் கடுமையான குழாய்கள்) தொடர்பான செயல்பாடுகள்
31. கலி பவுசர் வெக்கும் பம்பு சேவையினை பழுதுபார்த்தல்
32. வாகன கதவு விண்டர்கள், பிட்டிங்ஸ் மற்றும் துண்டு கண்ணாடி பிட்டிங்ஸ் மற்றும் கண்ணாடி நிறுவல்
33. வாகனங்களில் விண்ட்ஸ்கிரீன் சைட் கிளாஸ் பிடிங்ஸ் சைட் கண்ணாடிகள் போன்றவற்றை நிறுவுதல்
34. வாகன சக்கர சீரமைப்பு
35. வாகன உள்ளக அமைப்புகள் தொடர்பான நடவடிக்கைகள்
36. கார் இருக்கை கவர்கள் மற்றும் பிற குசன் வேலைகள்
37. வாகனங்களின் அனைத்து கேபிள்கள் மற்றும் அவுடர் சேவைகள்
38. இன்ஜெக்டர் பம்புகள் மற்றும் இன்ஜெக்டர்களை சரிசெய்தல்
39. வாகன வாயுப்பிரப்பாக்கிகள் மற்றும் குளிர்சாதன அளகுகளை சரிசெய்தல்
40. அனைத்து வகையான அமைப்பு வேலைகள்

**உபகரணங்கள் சேவைகள்**

41. மின்பிரப்பாக்கி சேவைகள் பழுதுபார்த்தல் மற்றும் வழங்கல்கள்
42. காற்று அமுக்கி சேவையின் பழுதுபார்த்தல் மற்றும் வழங்கல்கள் மற்றும் உதிரி பாகங்கள் வழங்கல்
43. கார் சலவை இயந்திர சேவையை சரிசெய்தல்
44. நீர் பம்ப் சேவைகள் பழுதுபார்த்தல்

**வேறு சேவைகள்**

45. ஸ்டிக்கர் அச்சிடும் பணி மற்றும் வாகனங்களில் ஒட்டுதல்
46. பின்னல் வேலைகள்
47. பண்டிகை பொருட்கள் மற்றும் சேவைகள்
48. கேட்டரிங் சேவைகள்
49. எலி, எறும்பு, கரப்பான் பூச்சிகளுக்கு பூச்சி கட்டுப்பாட்டு சேவைகள்
50. வாடகை அடிப்படையில் வாகன கொள்முதல் சேவைகள் (கார், வேன், மற்றும் முச்சக்கர வண்டி போன்றவை)
51. பழைய செய்தித்தாள்கள் மற்றும் வர்த்தமானி அறிவிப்புக்களை கொள்வனவு செய்தல் சேவைகள்
52. மரங்களை வெட்டுதல்
53. வழக்கறிஞர் சேவைகள்
54. அங்கீகரிக்கப்பட்ட கணக்கெடுப்பு சேவைகள்
55. கழிவு நீர் சுத்திகரிப்பு அமைப்பு நிறுவல் சேவைகள்
56. பாதுகாப்பு சேவைகள்
57. சுகாதார சேவைகள்

### விதிமுறைகள்

01. வணிக பதிவு சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள வழங்கல் அல்லது சேவைக்கு மட்டுமே பதிவு ஏற்றுக்கொள்ளப்படும்.
02. தேவைப்படும் சந்தர்ப்பத்தில் பதிவுசெய்யப்பட்ட வழங்குனர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களைத் தவிர வேறு வழங்குனர்களிடமிருந்து பொருட்கள் மற்றும் சேவைகளைப் பெறும் அதிகாரம் சபைக்கு உண்டு.
03. பதிவுசெய்யப்பட்ட வழங்குனர்கள் மனுக்களை சமர்ப்பிக்கவோ அல்லது சரியான நேரத்தில் ஆர்டர்களை வழங்கவோ அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்ட மாதிரிகளின்படி செயல்படவோ தவறியவர்களின் பெயர்கள் எந்தவொரு அறிவிப்பும் இன்றி பதிவேட்டில் இருந்து அகற்றப்படும்.
04. கடந்த ஆண்டுகளில் திருப்திகரமாக வழங்கல்களை வழங்கத் தவறிய அல்லது பட்டியலிலிருந்து பெயர் நீக்கப்பட்ட வழங்குனர்களின் கோரிக்கைகள் நிராகரிக்கப்படும்.
05. சபைக்கு பொருட்கள் அல்லது சேவைகளை வழங்குவதற்கு முற்பணம் கோருபவர்களின் பெயர்கள் பதிவு செய்யப்படாது.
06 குறைந்தது 60 நாட்களுக்கு சபைக்கு கடன் வசதிகள் வழங்கப்பட வேண்டும்.
07. பிற விதிமுறைகள் மா நகராட்சி மன்றத்தால் மா நகராட்சி மன்ற கட்டளை, நிதி ஒழுங்குமுறைகள் மற்றும் அரசாங்கத்தால் வழங்கப்பட்ட சுற்றறிக்கை வழிமுறைகளின் அடிப்படையில் தீர்மானிக்கப்படும்.

**ஆர். ஏ. ஷாலிக்கா எஸ் இரணவீர,**
**மாநகராட்சி ஆணையாளர்,**
**ஸ்ரீ ஜெயவர்தனபுர கோட்டே மாநகர சபை,**

SELACINE

# நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சு

## தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை

## விலைக்கோரல் அறிவித்தல் – 2024–10–09

பின்வரும் வேலைகள் / வழங்கல்களுக்காக பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடமிருந்து தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை சார்பில் பெறுகைக் குழு தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| இல. | ஒப்பந்தத்தின் பெயர் மற்றும் ஒப்பந்த இலக்கம் | மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபா) | தேவையான கேள்விப் பிணை | தேவையான தகைமை | VAT உட்பட மதிப்பீட்டுச் செலவு (ரூபா) | தொடர்புகொள்ள வேண்டிய நபர் மற்றும் ஆவணங்கள் வழங்கப்படும் இடம் | இறுதித் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|---|---|---|
| பொது நிதித் திணைக்களத்தினால் செயற்படுத்தப்படும் இலத்திரனியல் அரச பெறுகை **(e-GP)** முறைமையின் மூலம் (10 மில்லியன் ரூபா வரை) பொருட்களுக்கான கேள்விகளை அழைக்கும் பணியில் நாம் ஈடுபட்டுள்ளோம். கேள்விகளைச் சமர்ப்பிப்பதற்கான தகுதித் தேவைப்பாடாக முறைமையில் பதிவு செய்துகொள்ளல் வேண்டும். மேலதிக விபரங்களுக்கு **011 -2635886/071-1525234** எனும் தொலைபேசி இலக்கங்களின் ஊடாக எமது அதிகாரியை தயவுசெய்து தொடர்புகொள்ளவும். | | | | | | | |
* அரச மற்றும் அரச சார்பு நிறுவனங்களில் பாதுகாப்புச் சேவைகளை வழங்கும் முகமாக பாதுகாப்பு அமைச்சிலிருந்து பெற்றுக் கொண்ட செல்லுபடியாகும் அனுமதிப்பத்திரத்தின் பிரதியொன்றை சமர்ப்பித்தல் வேண்டும். பூர்த்தி செய்யப்பட்ட பெறுகை ஆவணங்களை "மூலப்பிரதி" மற்றும் "நகல்பிரதி" என வேறுவேறாக தயாரிக்கப்பட்ட உறைகளில் இட்டு அவ் உறைகளை மீண்டும் ஒரே உறையில் இட்டு பொறியிட்டு "செயலாளர், கெஸ்பேவ நகர சபை" பெயரில் பதிவுத் தபாலில் அல்லது தலைமையகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் கையோடு கொண்டு வந்து உள்ளிடல் வேண்டும்.
* குறித்த பெறுகை நிபந்தனைகள் பெறுகை ஆவணங்களுடன் விநியோகிக்கப்படும்.
* பெறுகை ஆவணங்களை ஏற்றுக் கொள்ளல், நிராகரித்தல் அல்லது இரத்துச் செய்தல் பற்றிய முழுமையான அதிகாரம் கெஸ்பேவ நகர சபைக்கு உரியது.
* கடந்தாண்டுகளில் கேள்வி விடயங்கள் சம்பந்தமாக அபகீர்த்தியானோர் பட்டியல் படுத்தப்பட்டுள்ள நபர்களுக்கு பெறுகை ஆவணங்கள் விநியோகிக்கப்பட மாட்டாது.

பெறுகை ஆவணங்கள் திறக்கப்படும் வேளையில் கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.

மேலதிக விபரங்களை அலுவலக நேரங்களில் 0112618100 தொ.பே. இலக்கத்தில் விசாரிக்கலாம் அல்லது நேரில் பெற்றுக் கொள்ளலாம்.

**கெஸ்பேவ நகர சபை அலுவலகத்தில்,**
**2024.10.08**

**செயலாளர்,**
**கெஸ்பேவ நகர சபை.**

## றுஹுணு பல்கலைக்கழகம் – மாத்தறை

## விலைமனுக்களுக்கான அழைப்பு

### 31வது பட்டமளிப்பு விழாவில் புகைப்படமெடுத்தல் மற்றும் வீடியோ பதிவு செய்வதற்காக விலைமனுக்கள் கோரல் - 2024

### மற்றும்

### தொலை மற்றும் தொடர்ச்சியான கல்விப் பிரிவின் 03வது டிப்ளோமா மற்றும் சான்றிதழ் வழங்கும் விழாவில் புகைப்படமெடுத்தல் மற்றும் வீடியோ பதிவு செய்வதற்காக விலைமனுக்கள் கோரல் - 2024

றுஹுணு பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழா 2024 டிசம்பர் 12 மற்றும் 13 ஆகிய இரு தினங்களில், மாத்தறை, வெல்லமடம வளவிலுள்ள ரபீந்திரநாத் தாகூர் கேட்போர் கூடத்தில் நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இங்கு சுமார் 2700 எண்ணிக்கையான பட்டதாரிகளுக்கு பட்டம் வழங்கப்படும்.

அதேபோல் தொலை மற்றும் தொடர்ச்சியான கல்விப் பிரிவின் 03வது டிப்ளோமா மற்றும் சான்றிதழ் வழங்குதல் நவம்பர் மாதம் 30ஆம் திகதி மாத்தறை, வெல்லம்மடம வளவிலுள்ள ரபீந்திரநாத் தாகூர் கேட்போர் கூடத்தில் நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இங்கு சுமார் 400 எண்ணிக்கையான சான்றிதழ்தாரிகளுக்கு சான்றிதழ்கள் வழங்கப்படும்.

பட்டமளிப்பு விழா / சான்றிதழ் வழங்கும் விழா இடம்பெறும் வேளையில் புகைப்படமெடுத்தல் / வீடியோ பதிவு செய்வதற்காக அனுமதி வழங்கப்படுவதானது இந்தத் துறையை வியாபாரமொன்றாக நடாத்திச் செல்வதற்காக பதிவு செய்துள்ள புகைப்பட / வீடியோ நிறுவனங்களுக்கு மட்டுமேயாகும் என்பதுடன் அவ்வாறான நிறுவனங்களிடமிருந்து பின்வரும் வேலைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக 2024-10-30ஆம் திகதி பி.ப. 2.00 மணி வரையில் விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

01. விழா மண்டபத்தினுள் பட்டம் / சான்றிதழ் வழங்கப்படும் வேளையில் புகைப்படமெடுத்தல் மற்றும் பட்டமளிப்பு விழாவை வீடியோ பதிவு செய்தல்.
02. பட்டமளிப்பு / சான்றிதழ் வழங்கும் விழா இடம்பெறும் நேரத்தில் பல்கலைக்கழக இடப்பரப்பில் தற்காலிக புகைப்படக் கூடமொன்றை அமைத்து அங்கு பட்டதாரிகளைப் புகைப்படமெடுத்தல்.

**விலைமனுக்களைப் பெற்றுக்கொள்ளல்**

மீளளிக்கப்படாத 5000.00 ரூபாவை விலைமனுக் கட்டணமாக றுஹுணு பல்கலைக்கழகத்தின் காசாளருக்குச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை பிரதிப் பதிவாளர் (பொது நிர்வாகம்) அவர்களுக்குச் சமர்ப்பிப்பதன் பேரில் இயைபுடைய விபரங்கள் மற்றும் விலைமனு விண்ணப்பங்களை 2024-10-28ஆம் திகதி பி.ப. 3.00 மணி வரையில் (அலுவலக நேரத்தினுள்) பெற்றுக்கொள்ளலாம்.

**விலைமனுக்களை ஏற்றுக்கொள்ளல்**

முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்களை ''மூலப் பிரதி'' மற்றும் ''நகல் பிரதி'' என வெவ்வேறான உறைகளில் இட்டு அவ்வுறைகளின் மேல் மூலையில் ''31வது பட்டமளிப்பு விழாவில் புகைப்படமெடுத்தல் மற்றும் வீடியோ பதிவு செய்வதற்காக விலைமனுக்கள் கோரல் - 2024'' அல்லது ''தொலை மற்றும் தொடர்ச்சியான கல்விப் பிரிவின் 03வது டிப்ளோமா மற்றும் சான்றிதழ் வழங்கும் விழாவில் புகைப்படமெடுத்தல் மற்றும் வீடியோ பதிவு செய்வதற்காக விலைமனுக்கள் கோரல் - 2024'' எனக் குறிப்பிட்டு 2024-10-30ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் ''தலைவர், பெறுகைக் குழு, றுஹுணு பல்கலைக்கழகம், வெல்லமடம, மாத்தறை'' எனும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். அல்லாவிடில் அந்த முகவரியிலுள்ள கணக்காளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் (இல. 01) நேரில் கொண்டுவந்து உள்ளிடல் வேண்டும். விலைமனுக்களுடன் மீளளிக்கப்படும் விலைக்கோரல் பிணை முறியாக 100,000.00 தொகையை றுஹுணு பல்கலைக்கழகத்தின் காசாளருக்குச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை இணைத்துச் சமர்ப்பித்தல் வேண்டும். தாமதமான மற்றும் முழுமையற்றதாக கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

**விலைமனுக்கள் திறக்கப்படுதல்**

2024-10-30ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு விலைமனுக்கள் திறக்கப்படும். இந்நிகழ்வில் விலைமனுதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்துகொள்வதற்கு அனுமதி வழங்கப்படும். இது தொடர்பான மேலதிக விபரங்களை 041-2233254 நீடிப்பு 12015 எனும் தொலைபேசி இலக்கத்தினூடாக பிரதிப் பதிவாளர் / பொது நிர்வாகம் அவர்களைத் தொடர்புகொண்டு விசாரித்தறியலாம்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**றுஹுணு பல்கலைக்கழகம், வெல்லமட, மாத்தறை.**
**2024-10-09.**




## ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபை

## பெறுகை அறிவித்தல்

### 2024/2025 ஆம் ஆண்டிற்கான ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபையில் அமைந்துள்ள வாகனத் தொகுதியினை காப்பீடு செய்தல்

ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபையில் அமைந்துள்ள வாகனத் தொகுதிக்காக **2024.12.01** ஆம் திகதி முதல் **2025.11.30** ஆம் திகதி வரை முழுமையான காப்புறுதியைப் பெற்றுக்கொள்வதற்கு இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் **(IRCSL)** கீழ் பதிவுசெய்யப்பட்ட காப்புறுதி நிறுவனங்கள் மூலமாக **2024.10.09** ஆம் திகதி முதல் **2024.10.30** ஆம் திகதி வரை **மு.ப.10.00** மணிக்கு கேள்வி மனுக்கள் கோரப்படும்.

உங்கள் நிறுவனத்திடமிருந்து முகவுரைக் கடிதத்தை சமர்ப்பித்து **ரூ.5,900/-** கட்டணத்தை (வட் வரியுடன்) இந்த அலுவலகத்தில் செலுத்திய பின்னர் அதற்கான கேள்விமனு படிவங்களை **2024.10.29** ஆம் திகதி **பி.ப.3.00 மணி** வரை பெற்றுக் கொள்ளலாம்.

**2024.10.30** ஆம் திகதி **மு.ப.10.00** மணி வரை கேள்விமனு படிவங்களை ஏற்றுக்கொள்ளப்படுவதுடன், **அன்றைய தினம் மு.ப.10.10** மணிக்கு மனுக்கள் திறக்கப்படும்.

**ஆர். ஏ. ஷாலிக்கா எஸ். இரணவீர,**

**நகராட்சி ஆணையாளர்,**

**ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபை இராஜகிரிய.**

SELACINE

## வழங்குநர்களைப் பதிவு செய்தல் — 2025

### தேசிய மனநல நிறுவனம், முல்லேரியா புதிய நகரம் (அங்கொட)

2025ஆம் வருடத்தில் கீழ் குறிப்பிடப்பட்ட வழங்கல் மற்றும் சேவைகளுக்காக தகுதிவாய்ந்த நிறுவனம், உற்பத்தியாளர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள், அங்கீகரிக்கப்பட்ட விநியோகஸ்தர்கள், வழங்குநர்கள், ஒப்பந்ததாரர்கள் மற்றும் அரச நிறுவனங்களிலிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2024.10.09ஆம் திகதி முதல் 2024.11.08 ஆம் திகதி வரை அலுவலக நாட்களில் மு.ப. 09.00 தொடக்கம் பி.ப. 03.00 வரையான நேரத்திற்குள் தேசிய மனநல நிறுவனத்தின் கணக்குப் பிரிவில் இருந்து விண்ணப்பப்படிவம் மற்றும் விபரங்களை பெற்றுக்கொள்ளலாம்.

ஒரு வழங்கல் அல்லது சேவைக்காக மீளளிக்கப்படாத 1000.00 ரூபா கட்டணத்தை தேசிய மனநல நிறுவனத்தின் சிறாப்பர் பிரிவில் செலுத்தி பற்றுச்சீட்டைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும் என்பதோடு, அதன் பிரதி ஒன்றை விண்ணப்பத்துடன் இணைத்து பதிவுக்காக சமர்ப்பித்தல் வேண்டும். மேலதிக விபரங்களை 011-2578234/5/6/7 (நீடிப்பு இல. 404) எனும் தொலைபேசி இலக்கத்தைத் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

**1. மேற்கூறிய வழங்கல்கள்:**

1.1 அலுவலக காகிதாதிகள்
1.2 ஆவணங்களை அச்சடித்தல்
1.3 அலுவலக உபகரணங்கள் மற்றும் தளபாடங்கள்
1.4 கணினி மற்றும் அதனுடன் தொடர்புடைய உபகரணங்கள்
1.5 மின் உபகரணங்கள்
1.6 அனைத்து வகையான வைத்தியசாலை துணிகள் மற்றும் திரைச்சீலைகள்
1.7 கொதிகலன்கள், கோப்பைகள், பிடிச்சட்டிகள்
1.8 கனரக உபகரணங்கள் மற்றும் கட்டிடப் பொருட்கள்
1.9 வாகனங்களுக்கான டயர், டியூப் மற்றும் மின்கலன்கள்
1.10 பீ.வீ.சீ. குழாய் உட்பட நீர்க்குழாய் வார்ப்பு உபகரணங்கள்
1.11 மின்சார பொருத்தல்கள் மற்றும் மின்சாரம் வழங்கலுக்கு தேவையான துணைப்பாகங்கள்
1.12 டிஜிட்டல் அச்சிடல் (பதாகைகளுக்காக)
1.13 இறப்பர் முத்திரை, பிளாஸ்டிக் வேலைகள் மற்றும் விளம்பரப் பலகை
1.14 தலையணைகள், இறப்பர் கலந்த தும்பு மெத்தைகள் மற்றும் இறப்பர் மெத்தைகள்
1.15 மெகிண்டோஸ் மற்றும் ரெக்சின்
1.16 பாதணி மற்றும் தோல் பொருட்கள்
1.17 உருக்கியொட்டல் உபகரணங்கள்
1.18 மருத்துவ / சத்திரசிகிச்சை / ஆய்வுகூட உபகரணங்கள்
1.19 X-Ray Films & Chemicals
1.20 பாவனைப் பொருட்கள் (பற்பசை, லன்ச் சீட், வெள்ளைத் தாள் போன்ற பொருட்கள்)
1.21 மருந்துகள்
1.22 வைத்தியசாலை உபகரணங்கள் (ட்ரொலிகள், கட்டில் மற்றும் சக்கர நாற்காலி)
1.23 சுத்தம் செய்யும் சவர்க்கார வகைகள் மற்றும் கழுவும் தூள்கள்
1.24 சமையலறை பொருட்கள் மற்றும் இயந்திரங்கள் வழங்குதல்
1.25 பிளாஸ்டிக் உபகரணங்கள்
1.26 மரப்பலகை வகைகள்
1.27 பிளாஸ்டிக் பெயர் பலகைகளை வழங்கி பொருத்துதல்
1.28 ஒலிபெருக்கி உபகரணங்களை வழங்கி பொருத்துதல்
1.29 தோட்ட அலங்கார மேசை/ கதிரைகள் வழங்குதல்
1.30 டோனர் மற்றும் காட்ரிட்ஜ் வழங்குதல்
1.31 வளிச்சீராக்கிகள் வழங்குதல்
1.32 இணையதள சேவைகள் மற்றும் உபகரணங்கள் வழங்குதல்
1.33 பொலித்தீன் மற்றும் அதனுடன் தொடர்புடைய உற்பத்திகளை வழங்குதல்
1.34 சடலங்களை எடுத்துச் செல்லல்
1.35 கெமரா மற்றும் துணைப்பாகங்கள் வழங்குதல்
1.36. ஊழியர் அடையாள அட்டை வழங்குதல்
1.37. CCTV கெமரா உபகரணங்கள் வழங்குதல்

**2. திருத்தவேலைகள் மற்றும் சேவைகள்:**

2.1 மின் உபகரணங்கள், ஆற்றல் கருவிகளின் திருத்தவேலைகள் மற்றும் பராமரித்தல்
2.2 கணினி இயந்திரம் மற்றும் அதனுடன் தொடர்புடைய உபகரணங்கள் பராமரித்தல் மற்றும் திருத்தவேலைகள்
2.3 வைத்தியசாலை உபகரணங்களின் திருத்தவேலைகள் (ட்ரொலிகள், கட்டில் மற்றும் சக்கர நாற்காலி ஆகியன)
2.4 எரிவாயு கட்டமைப்பு மற்றும் எரிவாயு அடுப்புகளின் திருத்தவேலைகள்
2.5 வாகன திருத்தவேலைகள் மற்றும் பராமரித்தல் வேலைகள்
2.6 சலவை இயந்திர திருத்தவேலைகள் மற்றும் பராமரிப்பு வேலைகள்
2.7 தையல் இயந்திர திருத்தவேலைகள் மற்றும் பராமரிப்பு வேலைகள்
2.8 தீங்கிழைக்கும் பூச்சிகளை அழித்தல் (கறையான் மற்றும் மூட்டைப்பூச்சி)
2.9 நிறுவனத்தின் உட்புறமுள்ள மரங்களை வெட்டி அகற்றல்
2.10 வாகனங்களின் மின் கட்டமைப்பு திருத்தவேலைகள்
2.11 வாகனங்களின் இருக்கைகள் மற்றும் அபோஸ்டின் குஷன் வேலை
2.12 முச்சக்கரவண்டி திருத்தவேலைகள்
2.13 தொலைக்காட்சி மற்றும் வானொலி மின்சாதனங்களின் திருத்தவேலைகள்
2.14 குளிர்சாதனப் பெட்டி திருத்தவேலைகள்
2.15 வளிச்சீராக்கி திருத்தவேலைகள் மற்றும் சேர்விஸ் செய்தல்
2.16 சமையலறை உபகரணங்களின் திருத்தவேலைகள் (தேங்காய் துருவும் இயந்திரம், மரக்கறி வெட்டும் இயந்திரம், வெட்டும் இயந்திரம்)
2.17 மின் விசிறிகளின் திருத்தவேலைகள்
2.18 கொதிகலன்கள் மற்றும் மின்கேத்தல் திருத்தவேலைகள்
2.19 மின்சார பராமரிப்பு மற்றும் சேவை வழங்கல்
2.20 அலுமினிய பாத்திரங்களின் திருத்தவேலைகள் (கடாரம், பானை, கோப்பை)
2.21 CCTV உபகரணங்களின் திருத்தவேலைகள்

**பணிப்பாளர்**
**தேசிய மனநல நிறுவனம்**
**முல்லேரியா புதிய நகர்**

## மகளிர் டி20 உலகக் கிண்ணம்:

# அரையிறுதிக்கான கடைசி எதிர்பார்ப்போடு இந்தியாவுடன் இலங்கை இன்று களத்தில்

மகளிர் டி20 உலகக் கிண்ணத்தில் அரையிறுதிக்கு முன்னேறுவதற்கான சிறிய எதிர்பார்ப்புடன் இலங்கை மகளிர் அணி இன்று(09) இந்திய அணியை எதிர்கொள்ளவுள்ளது.

டுபாயில் இன்று இரவு 7.30க்கு ஆரம்பமாகும் இந்தப் போட்டி இலங்கை அணிக்கு வாழ்வா சாவா ஆட்டமாக அமையவுள்ளது. ஏ குழுவில் ஆடும் இலங்கை அணி தனது முதல் இரு போட்டிகளிலும் தோல்வி அடைந்து புள்ளிப் பட்டியலில் கடைசி இடத்தில் இருப்பதோடு அந்த அணிக்கு இன்னும் இரண்டு போட்டிகளே எஞ்சியுள்ளன.



இந்நிலையில் அடுத்த இரண்டு போட்டிகளிலும் வெற்றி பெற முடியுமானால் அரையிறுதிக்கு முன்னேறுவதற்கு சிறிய வாய்ப்பு இருப்பதாக இலங்கை மகளிர் அணித் தலைவி சமரி அத்தபத்து குறிப்பிட்டார். இன்று இந்தியாவை எதிர்கொள்ளும் இலங்கை அணி குழு நிலையில் தனது கடைசி ஆட்டத்தில் வரும் சனிக்கிழமை (12) நியூசிலாந்து அணியை எதிர்கொள்ளவுள்ளது.

'எமது துடுப்பாட்ட வீராங்கனைகள் ஆடுகளத்தின் இயல்புக்கு அமைய பொருந்திச் செல்வது அவசியம். இந்த ஆடுகளங்கள் துடுப்பாட்டத்திற்கு சாதகமானது. ஆனால் இலக்கை துரத்தி ஆடும்போது எமக்கு சிரமம் ஏற்பட்டது. அந்த நிலையை எல்லா அணிகளிடமும் காண முடிந்தது.

நாம் நன்றாகப் பந்து வீசினோம். ஆடுகளம் மந்தமானது என்பது போன்ற காரணங்களைக் கூற முடியாது. நாம் நான்றாக ஆட வேண்டியது அவசியம். இந்தியாவுக்கு எதிரான போட்டியில் பயமின்றி ஆடுவது அவசியம். அவர்கள் சிறந்த ஓர் அணி. போட்டியில் சிறந்த ஆரம்பத்தைப் பெறுவதே முக்கியம்' என்று சமரி அத்தபத்து போட்டிக்கு முன்னதாக தெரிவித்திருந்தார்.

இலங்கை அணி இந்தத் தொடரில் தனது ஆரம்பப் போட்டியில் பாகிஸ்தான் அணியிடம் 31 ஓட்டங்களால் தோல்வியை சந்தித்ததோடு அந்தப் போட்டியில் பாக். அணி நிர்ணயித்த 117 ஓட்ட வெற்றி இலக்கை எட்ட முடியாமல் 9 விக்கெட்டுகளை இழந்து 85 ஓட்டங்களையே பெற்றது.

தொடர்ந்து நடப்புச் சம்பியன் அவுஸ்திரேலிய அணியை எதிர்கொண்ட இலங்கை மகளிர்கள் 20 ஓவர்களிலும் 7 விக்கெட் இழக்குக்கு 93 ஓட்டங்களையே பெற்றது. ஆஸி. அணி அந்த இலக்கை 15 ஓட்டங்களுக்குள் எட்டியது.

குறிப்பாக முதல் இரு போட்டிகளிலும் சமரி அத்தபத்து துடுப்பாட்டத்தில் சோபிக்கத் தவறி இருந்தார். இந்நிலையில் இன்றைய தினம் இந்தியாவை வீழ்த்துவதற்கு அவரது ஆட்டம் தீர்க்கமாக அமையும்.

கடைசியாக கடந்த ஜூலையில் நடந்த மகளிர் ஆசிய கிண்ண இறுதிப் போட்டியில் இந்திய அணியை வீழ்த்திய உற்சாகத்துடனேயே இலங்கை மகளிர்கள் இன்று களமிறங்கவுள்ளனர்.







நெஸ்ட்லே நெஸ்டமோல்ட் அனுசரணையில் கல்வி அமைச்சினால் நடத்தப்பட்ட அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டியின் மரதன் போட்டி தம்புள்ளையில் கடந்த சனிக்கிழமை (05) வெற்றிகரமாக நிறைவடைந்தது. இதில் ஐந்து கிலோமீற்றர் தூரம் கொண்ட மரதன் போட்டியில் மாத்தளை இந்து வித்தியாலயத்தின் எஸ். துடிஹர்ஷிகன் முதலிடத்தைப் பெற்றதோடு கமுருவல தேசிய பாடசலையைச் சேர்ந்த மதுஷங்க இரண்டாவது இடத்தையும், அக்குரம்பர மத்திய மகா வித்தியாலயத்தின் லியனகே மூன்றாவது இடத்தையும் வென்றனர்.

# சம்பியனானது வொரியஸ் அணி



**அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்**

அக்கரைப்பற்று, பள்ளிக்குடியிருப்பு பிரதேச வீரர்களுக்கிடையிலான, குடியிருப்பு பிரீமியர் லீக் மின்னொளி கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் பள்ளிக்குடியிருப்பு வொரியஸ் அணி சம்பியன் கிண்ணத்தை வென்றது.

அக்கரைப்பற்று அதாஉல்லா பொது விளையாட்டு மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற இந்தப் போட்டியின் இறுதி ஆட்டத்தில் முஹம்மதிய்யா றோயல் அணியை எதிர்கொண்ட வொரியஸ் அணி 9 ஓட்டங்களால் வெற்றியீட்டியது. தொடர் நாயகனாக வொரியஸ் அணியின் நஜாத் ஏ வஹாப் தெரிவானார்.



## சர்வதேச செய்திகள்

# தென்மேற்கு லெபனானை நோக்கி தரைவழி நடவடிக்கையை விரிபடுத்தியது இஸ்ரேல்

### ஈரான் வெளியுறவு அமைச்சர் சவூதி மற்றும் பிராந்தியத்திற்கு விரைவு

ஹிஸ்புல்லா அமைப்புக்கு எதிராக கடந்த ஓர் ஆண்டாக பரஸ்பரம் தாக்குதல்களை நடத்தி வந்த நிலையில் இஸ்ரேலிய இராணுவம் தனது தரைவழி நடவடிக்கையை தென்மேற்கு லெபனானுக்கு விரிவுபடுத்தி புதிய பகுதிகளில் ஊடுருவல்களை ஆரம்பித்துள்ளது. இராஜதந்திர தீர்வு ஒன்றுக்கு ஐக்கிய நாடுகள் சபை வலியுறுத்தியபோதும் பிராந்தியத்தில் மோதல் மேலும் உக்கிரம் அடைந்து வருகிறது.

ஓர் ஆண்டுக்கு முன்னர் பலஸ்தீன போராளிகள் தெற்கு இஸ்ரேலில் நடத்திய தாக்குதல் காசாவில் ஓர் ஆண்டாக நீடிக்கும் போரை தூண்டியதோடு தற்போது லெபனானின் ஹிஸ்புல்லா அமைப்புடனும் மோதல் உக்கிரம் அடைந்துள்ளது. இது இஸ்ரேல் மீது ஈரானின் நேரடித் தாக்குதலுக்குக் காரணமாகி இருப்பதோடு பிராந்தி அளவில் முழு அளவில் போர் மூழும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

கடந்த வாரம் இஸ்ரேல் மீது ஈரான் ஏவுகணைகளை வீசிய நிலையில் ஈரான் மீதான இஸ்ரேலின் பதில் தாக்குதல் திட்டம் குறித்து ஈரான் நேற்றும் (08) இஸ்ரேலை கடுமையாக எச்சரித்தது. இது மத்திய கிழக்கை போர் விளிம்புக்குத் தள்ளியுள்ளது.

ஈரானின் உட்கட்டமைப்புகள் மீதான எந்த ஒரு தாக்குதலுக்கு எதிராகவும் பதில் தாக்குதலை எதிர்கொள்ள வேண்டி இருக்கும் என்று ஈரான் வெளியுறவு அமைச்சர் அப்பாஸ் அரக்சி எச்சரித்தார். அரக்சி நேற்று சவூதி அரேபியா மற்றும் மத்திய கிழக்கின் ஏனைய நாடுகளுக்கான பயணத்தை ஆரம்பித்தார். பிராந்திய பிரச்சினைகள் மற்றும் காசா, லெபனானில் இஸ்ரேலின் குற்றங்களை நிறுத்துவது தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்துவதற்காகவே அவர் பிராந்திய நாடுகளுக்கு பயணிப்பதாக ஈரானின் இஸ்னா செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

ஈரான் மற்றும் இஸ்ரேல் இடையிலான மோதலில் நடுநிலை வகிக்கும் வளைகுடா நாடுகளின் நிலைப்பட்டை தமக்கு ஆதரவாக மாற்றும் முயற்சியில் ஈரான் ஈடுபடுவதாக அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

'காசாவில் இடம்பெறும் குற்றங்களின் தொடர்ச்சியாக லெபனானின் சியோனிச அரசின் (இஸ்ரேல்) வெட்ககரமான குற்றங்களைத் தடுப்பதற்கு பிராந்தியத்தில் முன்னேற்றங்களை எட்டுவது தொடர்பிலான பேச்சுவார்த்தை தொடர்ந்து முன்னெடுக்கப்படும்' என்று அரச ஊடகத்தினால் வெளியிடப்பட்ட வீடியோ உரை ஒன்றில் அரக்சி குறிப்பிட்டார்.



'இன்று ஆரம்பித்து நான் ரியாத் தொடக்கம் பிராந்தியத்தின் மற்ற தலைநகர்களில் சுற்றுப்பயணத்தை ஆரம்பித்து லெபனானில் இடம்பெறும் கொடிய தாக்குதல்களை நிறுத்துவதற்கு பிராந்திய நாடுகள் இடையே ஒரு கூட்டு அமைப்பை ஏற்படுத்த முயற்சிக்கவுள்ளேன்' என்றும் அவர் குறிப்பிட்டார்.

லெபனான் தலைநகர் பெய்ரூட் மீது தொடர்ச்சியாக வான் தாக்குதல்களை நடத்தும் இஸ்ரேல் அதன் தென் கிழக்கு எல்லையில் இருந்து தற்போது தென் மேற்கு எல்லைக்கு தரைவழி படை நடவடிக்கையை விரிவுபடுத்தியுள்ளது.

பெய்ரூட்டின் தெற்கு புறநகர் மீது கடந்த திங்கள் இரவும் தாக்குதல்களை நடத்திய இஸ்ரேல் ஹிஸ்புல்லா அமைப்பின் மற்றொரு மூத்த உறுப்பினரை கொன்றதாகக் கூறியது. அந்த அமைப்பின் வரவு செலவுத் திட்டம் மற்றும் ஏற்பாட்டியல் தலைவரான சுஹைல் ஹுஸைன் ஹுஸைனி கொல்லப்பட்டது உறுதி செய்யப்படும் பட்சத்தில் அது ஹிஸ்புல்லா மற்றும் அதன் கூட்டணியான காசாவின் ஹமாஸ் தலைவர்களை இலக்கு வைத்து இஸ்ரேல் நடத்தும் படுகொலைகளின் தொடர்ச்சியாகவே அமையும்.

இதில் பெய்ரூட் புறநகரில் நடத்திய வான் தாக்குதல் ஒன்றில் ஹிஸ்புல்லா தலை வ ர் ஹசன் நஸ்ரல்ல கொல்லப்பட்டது அந்த அமைப்புக்கு பெரிழப்பாக உள்ளது.

ஹிஸ்புல்லாவுக்கு எதிராக 'மட்டுப்படுத்தப்பட்ட, உள்ளூர் அளவிலான, இலக்கு வைக்கப்பட்ட' தரைவழி நடவடிக்கை ஒன்றை தெற்கு லெபனானின் மேற்குப் பகுதியில் ஆரம்பித்ததாக இஸ்ரேல் இராணுவம் நேற்று தெரிவித்தது.

தெற்கு லெபனானில் இஸ்ரேல் தரைவழி படை நடவடிக்கையை கடந்த செப்டெம்பர் 30 இல் ஆரம்பித்தது. அது தொடக்கம் இஸ்ரேலியப் படை எல்லையின் கிழக்குப் பக்கமே அவதானம் செலுத்தி வந்தது. அதேபோன்று தெற்கு லெபனானில் போர் நடவடிக்கைகளில் துணை இராணுவப் படை ஒன்றை பயன்படுத்துவது இது முதல் முறை என்றும் இஸ்ரேல் இராணுவம் குறிப்பிட்டுள்ளது. இந்தத் துணைப்படை ஏற்கனவே லெபனானில் தரைவழி நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கும் மூன்று படைப் பிரிவுகளுடன் இணைந்துள்ளது.

எனினும் எல்லையில் ஹிஸ்புல்லா போராளிகள் இஸ்ரேலியப் படைகளுக்கு கடும் எதிர்ப்பை வெளியிட்டு வருவதோடு இதுவரை ஒன்பதுக்கும் அதிகமான இஸ்ரேலிய துருப்புகள் கொல்லப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இஸ்ரேல் மீது தொடர்ந்து ரொக்கெட் தாக்குதல்களை நடத்தி வரும் ஹிஸ்புல்லா போராளிகள் நேற்று வடக்கு இஸ்ரேலில் உள்ள இரு பகுதிகளில் இஸ்ரேலிய துருப்புகள் மீது ரொக்கெட் குண்டுகளை வீசியதாக தெரிவித்தனர்.

லெபனானுக்கான ஐக்கிய நாடுகள் சிறப்பு ஒருங்கிணைப்பாளர் மற்றும் அந்நாட்டில் உள்ள ஐ.நா.வின் அமைதிகாக்கும் திட்டத்தின் தலைவர் ஆகியோர் நேற்று கூட்டாக வெளியிட்ட அறிவிப்பில், 'ஹிஸ்புல்லா மற்றும் இஸ்ரேலுக்கு இடையே பரஸ்பரம் தாக்குதல்கள் ஆரம்பமான கடந்த ஓர் ஆண்டில் அமைதிகாக்கும்படியான அழைப்புகள் பொருட்படுத்தப்படவில்லை' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

'ஓர் ஆண்டுக்குப் பின்னர் இன்று தினசரி பரஸ்பரத் தாக்குதல்கள் இடைவிடாத இராணுவ மோதலாக மாறி இருப்பதோடு இதன் மனிதாபிமானத் தாக்கம் பேரழிவு ஒன்றுக்கு குறையாததாக உள்ளது' என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

லெபனானில் இஸ்ரேல் நடத்தி வரும் தாக்குதல்களில் 2000க்கும் அதிமானோர் கொல்லப்பட்டுள்ளனர். தெற்கு லெபனானின் எல்லைப் பகுதியில் இஸ்ரேல் நேற்று முன்தினம் நடத்திய வான் தாக்குதல் ஒன்றில் குறைந்தது 10 தீயணைப்பு வீரர்கள் கொல்லப்பட்டதாக லெபனான் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இஸ்ரேல் கடந்த மாதம் தாக்குதல்களை தீவிரப்படுத்தியது தொடக்கம் லெபனானுக்குள் சுமார் 1.2 மில்லியன் பேர் தமது வீடுகளை விட்டு வெளியேறியுள்ளனர். இவர்களில் 179,500 பேர் அங்கீகரிக்கப்பட்ட இடம்பெயர்வு மையங்களில் அடைக்கலம் பெற்றிருப்பதோடு இவ்வாறான 977 மையங்களில் 773 இடங்கள் நிரம்பி இருப்பதாக லெபனான் அரசு தெரிவித்துள்ளது. தவிர 400,000க்கும் அதிகமானோர் அண்டை நாடான சிரியாவுக்கு தப்பிச்சென்றுள்ளனர்.

இதேவேளை யெமனில் இருந்து மத்திய இஸ்ரேலை நோக்கி வீசப்பட்ட ஏவுகணை ஒன்றை இடைமறித்ததாக இஸ்ரேலிய பாதுகாப்புப் படை தெரிவித்துள்ளது. மத்திய இஸ்ரேலின் ஜப்பா பகுதியில் இராணுவ இலக்குகள் மீது இரு ஏவுகணை தாக்குதல்களை நடத்தியதாக ஈரான் ஆதரவு யெமன் ஹூத்தி கிளர்ச்சியாளர்கள் குறிப்பிட்ட நிலையிலேயே இஸ்ரேல் இராணுவம் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

தரையில் இருந்து தரையை தாக்கும் இந்த ஏவுகணையை இஸ்ரேலிய விமானப்படை இடைமறித்ததாக இஸ்ரேலிய பாதுகாப்புப் படை கூறியது.

## காசாவில் ஐந்தில் ஒருவர் பலி

காசாவின் தெற்கு நகரான ரபாவில் தண்ணீர் நிரப்பு நிலையம் ஒன்றில் தண்ணீரை பெறுவதற்கு காத்திருந்தவர்கள் மீது இஸ்ரேலிய ஆளில்லா விமானம் ஒன்று நேற்று (08) நடத்திய தாக்குதலில் எட்டு பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டதாக பலஸ்தீன ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கொல்லப்பட்டவர்களின் உடல்கள் காசா ஐரோப்பிய மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டதாக மருத்துவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

முன்னதாக மத்திய காசாவில் கடந்த திங்கட்கிழமை இரவு இடம்பெற்ற தாக்குதல்களில் ஆறு சிறுவர்கள் மற்றும் இரு பெண்கள் உட்பட குறைந்து 25 பேர் கொல்லப்பட்டுள்ளனர். புரைஜ் அகதி முகாம் மீது இடம்பெற்ற இரு தாக்குதல்களினால் ஏற்பட்ட இடிபாடுகளில் இருந்து மேலும் சடலங்கள் மீட்கப்பட்டதாக அங்கிருந்து வரும் செய்திகள் கூறுகின்றன.

காசா மீது இஸ்ரேலின் சரமாரித் தாக்குதல் கடந்த ஓர் ஆண்டுக்கு மேல் நீடிக்கும் நிலையில் அங்கு கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் எண்ணிக்கை 42,000ஐ நெருங்கியுள்ளது.

இதன்படி காசாவில் உள்ள ஐந்து பேரில் ஒருவர் கடந்த ஓர் ஆண்டு போரில் கொல்லப்பட்டுள்ளனர். கொல்லப்பட்டவர்களில் 16,756 சிறுவர்கள் மற்றும் 11,346 பெண்கள் அடங்குகின்றனர். இது பலியான மொத்த எண்ணிக்கையில் 69 வீதமாகும்.

இதேபோன்று காசாவில் இதுவரை 97,303 பேர் காயமடைந்திருக்கும் நிலையில் அது அங்குள்ள 23 பேரில்; ஒருவருக்கு சமமாகும். கொல்லப்பட்டவர்கள் மற்றும் காணாமல்போனோர் தவிர 10,000க்கும் மேற்பட்டவர்கள் இடிபாடுகளில் புதையுண்டிருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

காசாவில் கடந்த ஓர் ஆண்டில் 75,000 தொன் வெடிபொருட்கள் வீசப்பட்டிருப்பதாக மதிப்பிடப்பட்டிருக்கும் நிலையில் இதனால் 42,000 தொன் இடிபாட்டுக் குப்பைகள் குவிந்திருப்பதோடு வெடிக்காத குண்டுகளும் அங்கே உள்ளன. இவைகளை அகற்ற பல்லாண்டுகள் தேவைப்படும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

காசா மக்கள் தொகையில் குறைந்தது 2.15 மில்லியன் மக்கள் அல்லது 96 வீதமானவர்கள் கடுமையான உணவுப் பற்றாக்குறையால் பாதிக்கப்பட்டுள்ளனர். ஐந்தில் ஒரு பலஸ்தீனர் அல்லது 495,000 பேர் பட்டினியால் பாதிக்கப்பட்டிருப்பதாக ஒருங்கிணைந்த உணவு பாதுகாப்பு அமைப்பு குறிப்பிட்டுள்ளது.



# பௌதீகவியலில் இருவருக்கு நோபல்



இயந்திரக் கற்றல் தொடர்பில் முன்னோடி பணிகளுக்காக அமெரிக்காவின் ஜோன் ஹோப்பீல்ட் மற்றும் இங்கிலாந்தின் ஜெப்ரி ஹின்டன் ஆகியோருக்கு பௌதீகவியலுக்கான நோபல் பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது.

'செயற்கை நரம்பியல் வலைப்பின்னலுடன் இயந்திர கற்றல் முறைக்கு முடியுமான வகையிலான அடிப்படையான கண்டுபிடிப்புகள் மற்றும் புத்தாக்கங்களுக்காக இந்த விஞ்ஞானிகள் கௌரவிக்கப்படுவதாக நோபல் குழு நேற்று அறிவித்தது. இதில் மனித மூளையைப் போன்று இயங்க கணினிக்கு கற்றுத்தரும் வகையிலேயே இவர்களின் கண்டுபிடிப்பு அமைந்துள்ளது.

ஹோப்பீல்ட், அசோசியேட்டிவ் நியூரல் நெட்வேர்க்குகளின் ஆய்வுக்காக பரவலாக அறியப்படுகிறார். அவர் அமெரிக்காவில் உள்ள பிரின்ஸ்டன் பல்கலைக்கழகத்தில் பணியாற்றி வருகிறார். ஹின்டன் கனடாவின் டொராண்டோ பல்கலைக்கழகத்தில் கணினி அறிவியல் பேராசிரியராக உள்ளார்.

எதிர்வரும் டிசம்பர் 10 ஆம் திகதி நோர்வேயின் ஸ்டொக்ஹோம் நகரில் நடைபெறவுள்ள நிகழ்ச்சியில், இந்த இரு விஞ்ஞானிகளுக்கும் நோபல் பரிசு வழங்கப்படவுள்ளது. ஏற்கனவே மருத்துவத்துக்கான நோபல் பரிசு விக்டர் ஆம்ப்ரோஸ், கேரி ருவ்குன் ஆகியோருக்கு அறிவிக்கப்பட்டது. இரசாயனவியல், இலக்கியம் மற்றும் அமைதிக்கான நோபல் பரிசு அடுத்தடுத்த தினங்களில் அறிவிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 ஒக்டோபர் மாதம் 9ம் திகதி புதன்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

# மாவனெல்ல பிரதேச சபை

## வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல் 2025ஆம் வருடம்

2025ஆம் வருடத்தில் வழங்கல்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்காக மாவனெல்ல பிரதேச சபையில் வழங்குநர் மற்றும் ஒப்பந்தக்காரராகப் பதிவு செய்து கொள்வதற்காக 2024-12-30ஆம் திகதி பி.ப. 3.00 மணி வரை என்னால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

எம்மால் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்துடன் உருப்படிகளுக்கு இயைபான கட்டணங்களை ''தலைவர், பிரதேச சபை, மாவனெல்ல'' எனும் பெயருக்கான காசோலை அல்லது ரொக்கப் பணமாகச் செலுத்துதல் வேண்டும்.

விண்ணப்பப்படிவங்களை பதிவுத் தபாலில் அல்லது நேரில் கொண்டு வந்து ஒப்படைக்கலாம். விண்ணப்பங்களை இட்டு அனுப்பும் கடித உறையின் இடப்பக்க மேல் மூலையில் "2025ஆம் வருடத்திற்கான வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல்" எனக் குறிப்பிடுதல் வேண்டும் என்பதுடன் ''தலைவர், மாவனெல்ல பிரதேச சபை, மாவனெல்ல'' எனும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

| தொ. இல. | பொருட்கள் மற்றும் சேவைகள் | பதிவுக் கட்டணம் |
|---|---|---|
| 01 | அலுவலக காகிதாதிகள், அச்சிடப்பட்ட ஆவணங்கள், திகதி முத்திரைகள் மற்றும் உபகரணங்கள் | ரூபா 1,000.00 |
| 02 | பல்ப், வயர்கள், மின்சார கருவிகள், வீதி விளக்குகள் மற்றும் உபகரணங்கள் | ரூபா 2,000.00 |
| 03 | அலுவலக மின் உபகரணங்கள், மரம் மற்றும் உருக்குத் தளபாடங்கள் | ரூபா 1,000.00 |
| 04 | டிஜிட்டல்/ ஓப்செட் மற்றும் ஏனைய அச்சிடும் சேவையை வழங்குதல் | ரூபா 1,000.00 |
| 05 | கையுறை, மழை அங்கிகள், முகக் கவசங்கள், கம் பூட்ஸ்கள் உட்பட பாதுகாப்பு உபகரணங்கள் | ரூபா 1,000.00 |
| 06 | சுகாதாரம் சார்ந்த உபகரணங்கள் (விளக்குமாறு, தும்புத்தடி, தூரிகை, மொப், கிருமி நாசினிகள், சவர்க்காரம் போன்றன) | ரூபா 1,000.00 |
| 07 | நிறப்பூச்சுகள், தினர், கம் வகைகள், தரையோடுகள், ஓடுகள், மண்வெட்டி, அரிவாள், சவல், கடப்பாறை உட்பட அனைத்து விதமான கனரகப் பொருட்கள் | ரூபா 2,000.00 |
| 08 | நிர்மாண கைத்தொழில் உபகரணங்கள் (கல், மணல், மெட்டல், செங்கல், கல்மண், ஹியும் குழாய்கள், தார், கோலாஸ், ஏபீசீ இன்டர்லொக்) | ரூபா 1,000.00 |
| 09 | பீடைநாசினி, இழையான் கொல்லி, கிருமிநாசினிகள், துப்புரவேற்பாட்டுத் திரவங்கள், மருந்து வகைகள் வழங்குதல் | ரூபா 1,000.00 |
| 10 | நீர்க் குழாய் உபகரணங்கள் மற்றும் பராமரிப்புப் பொருட்களை வழங்குதல் | ரூபா 1,000.00 |
| 11 | வாகனம் மற்றும் இயந்திராதிகளின் திருத்தவேலைகள் | ரூபா 2,000.00 |
| 12 | சீருடை துணிகள், காலணிகள், திரைச்சீலை, சிகிச்சையக துணி வகைகள் | ரூபா 1,000.00 |
| 13 | வாகனம் மற்றும் இயந்திராதிகளை சேர்விஸ் செய்தல் | ரூபா 2,000.00 |
| 14 | வாகனம் மற்றும் இயந்திராதிகளை வழங்குதல் | ரூபா 1,000.00 |
| 15 | பெயர்ப்பலகை, கட்அவுட், பதாகைகள், அறிவித்தல் பலகைகளைத் தயாரித்தல் | ரூபா 1,000.00 |
| 16 | கணனி, கணனி துணைப்பாகங்களை வழங்குதல், திருத்தவேலைகள் மற்றும் சேர்விஸ் செய்தல் | ரூபா 2,000.00 |
| 17 | எரிபொருள் வழங்குதல் | ரூபா 2,000.00 |
| 18 | டுப்ளோ, அச்சுப்பொறி, தொலைநகல் இயந்திரம், புகைப்படப் பிரதி இயந்திரங்களின் திருத்தவேலைகள் மற்றும் சேர்விஸ் செய்தல் | ரூபா 1,000.00 |
| 19 | டுப்ளோ, அச்சுப் பொறி, தொலைநகல் இயந்திரம், புகைப்படப் பிரதி இயந்திரங்களுக்கான டோனர், கார்ட்ரிஜ் வழங்குதல்/ மீள் நிரப்புதல் | ரூபா 1,000.00 |
| 20 | வாகனங்களுக்கான பற்றரி, டயர் மற்றும் டியூப், ரிம் வழங்குதல் மற்றும் மீள் நிரப்புதல் | ரூபா 1,000.00 |
| 21 | மரங்களை வழங்குதல் (பலகைகள், தீராந்தி, ரீப்பை, விறகு) | ரூபா 1,000.00 |
| 22 | வாகன ஆசன உறைகள், டென்ட் அமைத்தல் மற்றும் குஷன் வேலைகள் | ரூபா 1,000.00 |
| 23 | அலுமினியம் மற்றும் கண்ணாடி வேலைகள், கண்ணாடி மற்றும் கண்ணாடி பொருட்கள் | ரூபா 1,500.00 |
| 24 | மேசன் வேலை, தச்சு வேலை நீர்க் குழாய் வேலை, உருக்கியொட்டும் வேலை, பட்டறை வேலைகள் | ரூபா 1,000.00 |
| 25 | தீயணைக்கும் உபகரணங்களை வழங்குதல் மற்றும் சேர்விஸ் செய்தல் | ரூபா 1,000.00 |
| 26 | எல்.பி. எரிவாயு வழங்குதல் | ரூபா 2,000.00 |
| 27 | தகனச்சாலை திருத்தவேலைகள் மற்றும் அது தொடர்பான சேவைகள் | ரூபா 1,000.00 |
| 28 | நூலகப் புத்தகங்கள் | ரூபா 1,000.00 |
| 29 | நில அளவை சேவைகளை வழங்குதல் | ரூபா 1,000.00 |
| 30 | மொழி பெயர்ப்பு சேவைகள் | ரூபா 1,000.00 |
| 31 | ஒலிபெருக்கி இயந்திர சேவைகள் | ரூபா 1,000.00 |
| 32 | திட்டப்பட வரைஞர் சேவைகள் வழங்குதல் | ரூபா 2,000.00 |
| 33 | சட்டத்தரணி சேவைகள் | ரூபா 2,000.00 |
| 34 | இணையதள வடிவமைப்பு, தகவல் முறைமை மற்றும் மென்பொருளை வழங்குதல் நாளது தரவேற்றம் செய்தல் | ரூபா 1,000.00 |
| 35 | அபாயகரமான மரங்களை வெட்டுதல் | ரூபா 1,000.00 |
| 36 | புகைப்படமெடுத்தல் மற்றும் வீடியோ பதிவு செய்தல் | ரூபா 1,000.00 |
| 37 | உணவு வழங்குதல் மற்றும் உபசார சேவைகள் | ரூபா 1,000.00 |
| 38 | உபசாரங்களுக்குத் தேவைப்படும் பீங்கான், கண்ணாடி குவளை, கோப்பை, மக், பீரிஸ் மற்றும் அது தொடர்பான உபகரணங்களை வழங்குதல் | ரூபா 1,000.00 |
| 39 | உரப் பைகள், பொலித்தீன் உரப் பைகளை வழங்குதல் | ரூபா 1,000.00 |
| 40 | பிளாஸ்டிக், பொலித்தீன், போட் உற்பத்திகளை வழங்குதல் | ரூபா 1,000.00 |
| 41 | புல் வெட்டும் இயந்திரம், நீர் பம்பி போன்ற விவசாய உபகரணங்கள் | ரூபா 1,000.00 |
| | | |

**2. ஒப்பந்தக்காரர்கள்**

| | ஒப்பந்தத்தின் பெறுமதி ரூ. | பதிவுக் கட்டணம் |
|---|---|---|
| 01 | 250,000.00 வரையானது | 1,000.00 |
| 02 | 500,000.00 வரையானது | 1,500.00 |
| 03 | 500,000.00 விற்கு மேல் | 2,500.00 |

நிபந்தனைகள்

- ஒவ்வொரு பொருட்கள் மற்றும் சேவைகளுக்கும் வெவ்வேறாக விண்ணப்பத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
- சகல பொருட்கள் சேவைகளுக்குமான பதிவுக் கட்டணங்களை மேற்குறிப்பிட்ட வகையில் செலுத்துதல் வேண்டும் என்பதுடன், இதன்பொருட்டு ''செயலாளர், மாவனெல்ல பிரதேச சபை'' எனும் பெயரில் எழுதப்பட்ட காசோலை, காசுக்கட்டளை மூலம் அல்லது ரொக்கப் பணமாக உங்களது விண்ணப்பப்படிவத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
- ஒப்பந்த வேலைகளுக்காக பதிவு செய்து கொள்வதற்கு விண்ணப்பிக்கும் நிறுவனங்கள் மற்றும் நபர்கள் அவர்களின் இயலுமைக்கு இயைபான ஆவணங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
- மேலதிக தகவல்கள் மற்றும் விண்ணப்பப் படிவங்களை 035-2246789, 035-2246275 எனும் தொலைபேசி இலக்கத்தின் மூலம் அல்லது **mawanellaps@gmail.com** எனும் மின்னஞ்சல் முகவரியூடாக பெற்றுக்கொள்ளலாம்.

**சஞ்ஜீவனி மெனிக் விக்கிரமசூரிய**
**செயலாளர் மற்றும் அதிகாரபூர்வமான கடமைகளை**
**நிறைவேற்றும் அதிகாரி,**
**மாவனெல்ல பிரதேச சபை.**
**2024-10-09ஆம் திகதி மாவனெல்ல பிரதேச சபையில்**

**மாவனெல்ல பிரதேச சபை**
**வழங்குநர் மற்றும் ஒப்பந்தக்காரர்களை பதிவு செய்தல் - 2025**
**மாதிரி விண்ணப்பப்படிவம்**

1. விண்ணப்பதாரரின் பெயர்:.........................................
2. தேசிய அடையாள அட்டை இலக்கம்:.........................................
3. வியாபாரத்தின் பெயர் மற்றும் முகவரி: .........................................
4. வியாபாரத்தின் தன்மை: .........................................
5. தொலைபேசி/ தொலைநகல்: .........................................
6. மின்னஞ்சல்/இணையதளம்: .........................................
7. வியாபாரத்தின் பதிவிலக்கம்:.........................................
*(வியாபார பதிவுச் சான்றிதழ் பிரதி இணைக்கப்படல் வேண்டும்)*
8 பதிவுசெய்வதற்கு விண்ணப்பிக்கும் உருப்படி : .........................................
9. பதிவுக் கட்டணம் மற்றும் செலுத்தும் விதம்:.........................................
10. காசோலை மூலம் செலுத்துவதானால் இலக்கம் மற்றும் திகதி:.........................................
11. பொருட்களை போக்குவரத்து செய்ய முடியுமா/ முடியாதா என்பது பற்றி:.........................................

மேற்குறிப்பிட்ட விபரங்கள் யாவும் உண்மையானவை என இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி..................

..........................................................
வழங்குநரின் கையொப்பம்
முத்திரையுடன்

# குருநாகல் பிரதேச சபை

## 2025ம் வருடத்திற்காக வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல்

2025ஆம் வருடத்தின் பொருட்டு இந்த சபைக்குத் தேவையான பின்வரும் பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்கும் பொருட்டு உற்பத்தியாளர்கள் மற்றும் வழங்குநர்களைப் பதிவு செய்தல் 2024.12.20 ம் திகதி வரை நடைபெறும்.

பதிவு செய்து கொள்ளும் பொருட்டு பின்வரும் மாதிரி விண்ணப்பப் படிவத்தை (A4 அளவு தாளில் தயாரித்துக் கொண்ட) உபயோகித்தல் வேண்டும். விண்ணப்பிக்கும் நிறுவனம் தமது நிறுவனத்தின் வியாபாரப் பெயர்ப் பதிவுச் சான்றிதழின் புகைப்படப் பிரதியொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும். விண்ணப்பிக்கும் ஒவ்வொரு விடயத்தின் பொருட்டும் மீளளிக்கப்படாத 2000.00 ரூபா தொகை பதிவுக் கட்டணமாக அறவிடப்படும். இதை பணமாகவோ அல்லது பிரதேச சபை நிதியத்தின் பெயருக்கு காசுக் கட்டளை மூலம் ''செயலாளர், குருநாகல் பிரதேச சபை, உடதிகன, குருநாகல்'' எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். காசுக் கட்டளைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. அலுவலக நேரத்தினுள் (பி.ப. 3.00 மணிக்கு முன், வெள்ளிக்கிழமை நாட்களில் பி.ப. 2.00 மணிக்கு முன்) ரொக்கப் பணமாக பதிவுக் கட்டணத்தைச் செலுத்தலாம்.

**(அ) வழங்கல்கள்**

01. அலுவலக உபகரணங்கள் மரம் மற்றும் உருக்கு உபகரணங்கள்
02. காகிதாதிகள் (குருநாகல் நகரம் அல்லது நிறுவனத்திற்கு அண்மையிலுள்ள வழங்குநர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்)
03. அனைத்து வகையான மின்சார உபகரணங்கள் மற்றும் இலத்திரனியல் உபகரணங்கள்
    3.1 வீதி விளக்குகள் மற்றும் வீட்டு மின்னிணைப்புத் துணைப்பாகங்கள்
    3.2 அலுவலக மற்றும் வீட்டு மின்னிணைப்பு உபகரணங்கள் மற்றும் இலத்திரனியல் உபகரணங்கள்
04. குப்பை வண்டிகள் மற்றும் சுகாதார உபகரணங்கள்
05. கட்டிடப் பொருட்கள் (குருநாகல் நகரம் அல்லது நிறுவனத்திற்கு அண்மையிலுள்ள வழங்குநர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்)
06. கைத்தொழில் உபகரணங்கள், வீதி உபகரணங்கள் மற்றும் கருவிகள்
07. சீருடைகள், துணிகள் மற்றும் காலணிகள் (குருநாகல் நகரம் அல்லது நிறுவனத்திற்கு அண்மையிலுள்ள வழங்குநர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்)
08. போக்குவரத்து சேவைகள்
09. நூலகப் புத்தகங்கள், சஞ்சிகைகள், புதினப் பத்திரிகைகள்
10. மோட்டார் வாகன இயந்திராதிகள்
11. மோட்டார் வாகன திருத்த வேலைகளுக்கான உதிரிப்பாகங்கள்
12. கொங்கிறீட் சார்ந்த உற்பத்திகள்
    12.1 இன்டர் லொக், முன்வார்ப்பு கொங்கிறீட், கம்பித் தூண்கள், மலர்ச்சாடிகள், தோட்ட அலங்கார உபகரணங்கள்
    12.2 ஹியூம் குழாய்கள்
13. பெயர்ப் பலகைகள், அறிவித்தல் பலகைகள், பதாகைகள், டிஜிட்டல் அச்சுவேலைகள் போன்றன (குருநாகல் நகரம் அல்லது நிறுவனத்திற்கு அண்மையிலுள்ள வழங்குநர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்)
14. பிரசார வேலைகளுக்கான ஒலிபெருக்கி இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள்
15. அனைத்து வகையான தார் வகைகள் மற்றும் தார் சார்ந்த பொருட்கள்
16. தட்டச்சு இயந்திரம், புகைப்படப் பிரதி இயந்திரம், கணனி மற்றும் கணனி சார்ந்த உதிரிப்பாகங்கள் மற்றும் உபகரணங்கள் (குருநாகல் நகரம் அல்லது நிறுவனத்திற்கு அண்மையிலுள்ள வழங்குநர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்)
17. கிருமிநாசினிப் பொருட்கள், துப்புரவேற்பாட்டு சேவைகள்
18. கைத்தொழில் பொருட்களை வழங்குதல்
19. டயர் வகைகள் மற்றும் வாகன பெற்றரி வகைகள் (குருநாகல் நகரம் அல்லது நிறுவனத்திற்கு அண்மையிலுள்ள வழங்குநர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்)
20. விளையாட்டு உபகரணங்கள்
21. வைபவப் பொருட்கள், கதிரைகள், கூடாரங்கள், மின்குமிழ் கொடிகள் போன்றன
22. வீதிப் பராமரிப்பு வேலைகளுக்குத் தேவையான பொருட்களை வழங்குதல் (கிரவல், கல் (1.5", 3/4"), மணல், சீமெந்து, ABC, ரெஜிபோம், விறகு, தார், செட்டலின் பலகைகள், பொலித்தீன், முன்வார்ப்பு கொங்கிறீட் போன்றன)
23. பல்வேறு வகையான கன்று வகைகள், விவசாய மற்றும் தோட்ட அலங்கார உபகரணங்கள் மற்றும் பொருட்கள்
24. அனைத்து வகையான கனரகப் பொருட்கள் (குருநாகல் நகரம் அல்லது நிறுவனத்திற்கு அண்மையிலுள்ள வழங்குநர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்)
25. ஆவணங்களின் அச்சு வேலைகள்
26. தீயணைப்பு உபகரணங்கள்
27. குடிநீர் (குருநாகல் நகரம் அல்லது நிறுவனத்திற்கு அண்மையிலுள்ள வழங்குநர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்)
28. தகனச்சாலைகளுக்கு எரிவாயு வழங்குதல் (குருநாகல் நகரம் அல்லது நிறுவனத்திற்கு அண்மையிலுள்ள வழங்குநர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்)

**(ஆ) சேவை வழங்கல்கள்**

01. நொத்தாரிஸ் மற்றும் சட்டச் சேவைகள்
02. நில அளவையாளர் சேவை (குருநாகல் நகரம் அல்லது நிறுவனத்திற்கு அண்மையிலுள்ள வழங்குநர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்)
03. தேர்ச்சி பெற்ற / தேர்ச்சி பெறாத தொழிலாளர் சேவைகள் (குருநாகல் நகரம் அல்லது நிறுவனத்திற்கு அண்மையிலுள்ள வழங்குநர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்)
04. வாகன சேவைகள் (குருநாகல் நகரம் அல்லது நிறுவனத்திற்கு அண்மையிலுள்ள வழங்குநர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்)
05. தொழிலாளர்களின் சேவைகள் (குருநாகல் நகரம் அல்லது நிறுவனத்திற்கு அண்மையிலுள்ள வழங்குநர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்)
06. தண்ணீர் பவுசர்கள் மற்றும் கலி பவுசர் சேவைகள்
07. தகனச்சாலை திருத்தவேலைகள்
08. வளிச்சீராக்கி திருத்தவேலைகள் - வாகனம் மற்றும் அலுவலகம் - (குருநாகல் நகரம் அல்லது நிறுவனத்திற்கு அண்மையிலுள்ள வழங்குநர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்)
09. போக்குவரத்து சேவைகள்
10. குப்பை வண்டிகள், சுகாதார உபகரண திருத்தவேலைகள் மற்றும் உருக்கியொட்டும் வேலைகள்
11. மோட்டார் வாகன திருத்தவேலைகள் மற்றும் குஷன் வேலைகள் (குருநாகல் நகரம் அல்லது நிறுவனத்திற்கு அண்மையிலுள்ள வழங்குநர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்)
12. தட்டச்சு இயந்திரம், புகைப்படப் பிரதி இயந்திரம், கணனிகளின் திருத்தவேலைகள் (குருநாகல் நகரம் அல்லது நிறுவனத்திற்கு அண்மையிலுள்ள வழங்குநர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்)மற்றும் சேர்வில் செய்தல்
13. துப்புரவேற்பாட்டு சேவைகளை வழங்குதல்
14. அபாயகரமான மரங்களை வெட்டியகற்றுதல் மற்றும் கிணறு இறைத்தல் (குருநாகல் நகரம் அல்லது நிறுவனத்திற்கு அண்மையிலுள்ள வழங்குநர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்)
15. டிராக்டர், டிப்பர், டோசர், மோட்டர் கிரேடர், கல் உருளை, பெக்கோ இயந்திரம் போன்றவற்றை வாடகைக்கமர்த்துதல் (குருநாகல் நகரம் அல்லது நிறுவனத்திற்கு அண்மையிலுள்ள வழங்குநர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்)
16. காப்புறுதி காப்பீட்டு சேவை

**(இ) ஒப்பந்தக்காரர்களாகப் பதிவு செய்து கொள்ளுதல்**

| | | |
|---|---|---|
| 01. | 100000.00 ரூபா வரை | 2000.00 ரூபா |
| 02. | 100000.00 ரூபா முதல் 250000.00 ரூபா வரை | 2500.00 ரூபா |
| 03. | 250000.00 ரூபா முதல் 500000.00 ரூபா வரை | 3000.00 ரூபா |
| 04. | 500000.00 ரூபா முதல் 1000000.00 ரூபா வரை | 4500.00 ரூபா (CIDA பதிவு சகிதமாயிருத்தல் வேண்டும்.) |
| 05. | 1000000.00 ரூபாவுக்கு மேல் | 6000.00 ரூபா (CIDA பதிவு சகிதமாயிருத்தல் வேண்டும்.) |

**நிபந்தனைகள்:**

1. பல்வேறு வழங்குநர்களைத் தெரிவு செய்யும் போது நிராகரிப்பதற்கான காரணம் காட்டாமல் வழங்குநர்களைத் தேர்ந்தெடுக்கும் உரிமை சபைக்குரியது.
2. வேண்டுகோள் விடுக்கப்பட்டவுடன் விலைமனுக்களைச் சமர்ப்பிக்காத மற்றும் உரிய தரத்திற்கு அமைய பொருட்களை வழங்காத வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களின் பதிவு இரத்துச் செய்யப்படும்.
3. சமர்ப்பிக்கப்படும் விலைகள் ஆறு மாதங்கள் வரை செல்லுபடியாதல் வேண்டும் என்பதுடன் போக்குவரத்தின் போது ஏற்படும் சேதங்களுக்கு சபை பொறுப்புக் கூறாது.
4. வழங்கல் நடவடிக்கைகளின் போது பிரதேச சபைச் சட்ட விதிகள், நிதிச் சட்டவிதிகள், அரசாங்கத்தினால் அவ்வப்போது விடுக்கப்படும் சுற்றுநிருபங்கள், ஆலோசனைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு கீழ்ப்படிதல் வேண்டும்.
5. வழங்கல்கள் மற்றும் ஒப்பந்தங்களின் பொருட்டு பொதுவாக பதிவு செய்யப்பட்ட வழங்குநர்கள் மற்றும் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களிடமிருந்தே விலைமனுக்கள் கோரப்படும் என்பதுடன் தேவையான சந்தர்ப்பங்களில் வெளிநிறுவனங்களிடமிருந்தும் விலைகளைக் கோரும் உரிமை சபைக்குரியது.
6. விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''2025ம் வருடத்திற்கான வழங்குநர்களைப் பதிவு செய்தல்'' எனக் குறிப்பிடல் வேண்டும்.

இது தொடர்பான மேலதிக விபரங்கள் தேவைப்படின் 037-2222551, 0372030500 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டறிந்து கொள்ளலாம்.

2024 செப்டெம்பர் மாதம் 30ம் திகதி
**உடதிகன, புத்தளம் வீதி.**
**குருநாகல் பிரதேச சபையில்.**

**ஜே.ஏ. அஜித்குமாரசிங்க,**
**செயலாளர்,**
**குருநாகல் பிரதேச சபை.**

### குருநாகல் பிரதேச சபை

**வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்வதற்கான விண்ணப்பப்படிவம்**

1. வழங்குநர்/ஒப்பந்தக்காரரின் பெயர்:
2. முகவரி:
3. தொலைபேசி இலக்கம்:
4. தொலைநகல் இலக்கம்:
5. மின்னஞ்சல் முகவரி:
6. வழங்கும் சேவை/பொருள் உருப்படி இலக்கம்: (உதா: (அ)10, (ஆ) 4)
7. ஒப்பந்த வகுதி மற்றும் இயைபுடைய இலக்கம்: (உதா: (இ)4)
8. CIDA பதிவிலக்கம் / வியாபாரப் பதிவிலக்கம் / அடையாள அட்டை இலக்கம்:
9. பதிவுக் கட்டணம் ரூபா
10. காசோலை இலக்கம்:

மேற்படி தகவல்கள் சரியானவையெனவும், இயைபுடைய பதிவுச் சான்றிதழ்கள் இதில் இணைக்கப்பட்டுள்ளன என்றும் இத்தால் சான்று பகர்கிறேன். மேலும் வழங்குநராக / ஒப்பந்தக்காரராக பதிவு செய்து கொள்வதற்கு குறித்த அறிவித்தலிலுள்ள நிபந்தனைகளுக்கு இணங்குகிறேன்.

**திகதி:..........................** **கையொப்பம்: ..............................**

SUNDAY OBSERVER
Marriage Proposals
Decades of Trusted Service
Best way to fulfil your Future Dreams
Affordable & Attractive Packages for YOU.
077 7 278 948 / 011 2 429 343/ 342 / 011 2 429 383
E-mail - classified@lakehouse.lk

OBSERVER aDZ it's what you want
தினகரன் வாரமஞ்சரி
Hand over your Classified Advertisements to Our nearest Branch Office
Promotional Rates for a Classified Advertisements (Only 15 Words)
Any Single Newspaper Rs. 800/- (Except Thinakaran Varamanjari)
Two Newspapers Rs. 1,000/- (Except Thinakaran Varamanjari)
Three Newspapers Rs. 1,330/-
Anuradhapura - TEL : 025 22 22 370 FAX : 025 22 35 411 / Kandy - TEL : 081 22 34 200 FAX : 081 22 38 910
Kataragama - TEL : 047 22 35 291 FAX : 047 22 35 291 / Maradana - TEL : 011 2 429 336 FAX : 011 2 429 335
Matara - TEL : 041 22 35 412 FAX : 041 22 29 728 / Maharagama - TEL : 011 2 828 114 FAX : 011 2 828 114 / Jaffna - TEL : 021 2225361 FAX : 021 22 25 361

# மக்கள் வங்கி

## காலி பிராந்தியம்

## மீட்கப்படாத அடகு நகைகளை ஏலத்தில் விற்பனை செய்தல்

மக்கள் வங்கியின் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள கிளைகள் மற்றும் சேவை நிலையங்கள் என்பவற்றில் 2023.08.31ஆம் திகதி வரை (ஒரு வருடத்திற்கு அடகு வைக்கப்பட்ட) அடகு வைக்கப்பட்டு 2024.11.07ஆம் திகதி கொடுக்கல் வாங்கல் முடிவடையும் வரை மீட்கப்படாத தங்க நகைகள் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள திகதியில் மற்றும் இடத்தில் மு.ப.9.00 மணிக்கு ஆரம்பித்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என்பதை இத்தால் அறியத்தருகின்றோம்.

**ஏலவிற்பனை நடைபெறும் திகதிகள் 2024.11.09 மற்றும் 2024.11.10**

| ஏலவிற்பனை நடைபெறும் இடம் | காலி கோட்டை கிளை |
|---|---|
| கிளை | காலி கோட்டை, அம்பலன்கொட, எல்பிட்டிய, பத்தேகம, உடுகம, ஹிக்கடுவ, பலபிட்டிய காலி மகாவீதி, அஹங்கம, ஊரகஸ்மங்ஹந்திய, பட்டபொல, இமதுவ, தல்கஸ்வல வதுரம்ப, கொக்கல, கராபிட்டிய |
| சேவை நிலையம் | வஞ்சாவல, கிங்தொட்ட, பெட்டிகலவத்த, அம்பலன்கொட, மகாவீதி, வதுகெதர, கரந்தெனிய பிட்டிகல, குருந்துகஹஹெதெக்ம, நெளுவ, ரத்கம, கோனாபீனுவல, குமாரகந்த, கொஸ்கொட களுவெல்ல, பின்னதுவ, மிடியாகொட, யக்கலமுல்ல, போகஹகொட, நாகொட |

மேலே குறிப்பிடப்பட்டுள்ளபடி நடத்தப்படவிருக்கும் இந்த ஏலவிற்பனையை மீள அறிவிக்காமல் வங்கியின் தற்றுணிபின்படி இரத்துச் செய்வதற்கு ஒத்திவைப்பதற்கு அல்லது ஒருங்கிணைத்து நடத்துவதற்கு வங்கிக்கு உரிமை உண்டு.

பிராந்திய முகாமையாளர், மக்கள் வங்கி, பிராந்திய தலைமை அலுவலகம், இலக்கம் 22, கீழ் டிக்ஷன் வீதி, காலி.

தொலைபேசி இலக்கம் 091-2223563, 0912223564

PEOPLE'S BANK
Pride of the Nation

# கமத்தொழில் மற்றும் கைத்தொழில் அமைச்சு

# தேசிய உணவு மேம்பாட்டு சபை

NFPB National Food Promotion Board

(இலங்கை தேசிய பட்டினி இல்லாதொழிப்பு செயற்பாட்டு மையம்)

## விலைமனுக்கோரல் - போக்குவரத்து சேவை வழங்கல்

எமது சபையினால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள பாடசாலை மாணவர்களுக்கான பகல் உணவுத் வங்கும் வேலைத்திட்டத்தின் கீழ் 250 தொன் அரிசியை விநியோகிக்கும் திட்டத்திற்காக அநுராதபுர, பொலன்னறுவ, குருணாகல், யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, ஹம்பாந்தோட்டை, மொனராகல, பதுளை, அம்பாறை, மட்டக்களப்பு ஆகிய 12 மாவட்டத்தில் உள்ள 50 கல்வி வலயங்களில் காணப்படும் 3479 பாடசாலைகளுக்கு கலங்குட்டிய எமது அரிசி பதப்படுத்தும் நிலையத்திலிருந்து மேற்குறிப்பிட்ட பாடசாலைகளுக்காக அரிசியினை பாதுகாப்பாக போக்குவரத்து மற்றும் விநியோகிப்பதற்காக இதன் மூலம் விலைமனுக்கோரப்படுகின்றது.

ஒவ்வொரு பகுதிக்கும் ஏற்ற வகையில் அவை கொண்டு செல்லப்பட்டு விநியோகிக்கப்பட வேண்டும் என்பதால், பின்வரும் விளக்கத்தின்படி விலைகளை வழங்குவதற்கு வெவ்வேறு திறன் கொண்ட லொரிகள் ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.

| இல | லொரியின் அளவு | ஒரு கிலோமீட்டருக்கு ரூ. |
|---|---|---|
| 01 | சிறிய முழுமையாக மூடப்பட்ட லொரி | |
| 02 | 10 ½ அடி முழுமையாக மூடப்பட்ட லொரி | |
| 03 | 14 ½ அடி முழுமையாக மூடப்பட்ட லொரி | |
| 04 | 16 ½ அடி முழுமையாக மூடப்பட்ட லொரி | |
| 05 | 20 அடி முழுமையாக மூடப்பட்ட லொரி | |

அரிசியினை ஏற்றும் நடவடிக்கை எம்மால் செய்யப்படும், மேலும் அரிசியினை இறக்கும் நடவடிக்கை போக்குவரத்து வழங்குநரால் செய்யப்பட வேண்டும். அரிசி கொண்டு செல்லப்பட்டு நம்பகமாக, பாதுகாப்பாகவும் மற்றும் பொறுப்புடனும் பாடசலைகளுக்கு கொண்டுசென்றமைக்கான ஒப்புதல் அதிபரால் சான்றளிக்கப்பட்ட ஆவணங்கள் மீண்டும் கலங்குட்டிய ஏற்றும் இடத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.

விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதற்கான கடைசித் திகதி 2024.10.18 ஆம் திகதி மதியம் 2.30 மணியாகும், அத்தினத்தில் அல்லது அதற்கு முன் விண்ணப்பங்களை பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது இறுதி நேரத்துக்கு முன்பாக டெண்டர் பெட்டியில் இடலாம். விலைமனுக்கோரல் ஏற்றுக்கொள்ளப்படும் நேரம் முடிவடைந்த பின்னர் மனுக்கள் உடனடியாக திறக்கப்படும் மேலும் வழங்குனர் அல்லது அவரது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி அச்சந்தர்ப்பத்தில் கலந்து கொள்ளலாம். விண்ணப்பத்தினை பகுதியளவில் அல்லது அனைத்தையும் ஏற்கும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் தலைவருக்கு உண்டு.

மின்னஞ்சல் - procurement.ffhc@gmail.com web-www.nfpb.lk

மேலதிக விவரங்களுக்கு தொடர்புகொள்ளவும் - 011-2580194

பணிப்பாளர்,
**தேசிய உணவு மேம்பாட்டு சபை**
இல. 45, கிரிமண்டல மாவத்தை, நாரஹேன்பிட்ட. தொலைபேசி : 011 2506895, பெக்ஸ் : 011 2506907

# இலங்கை முதலீட்டுச் சபை

## பெறுகை அறிவித்தல்

கீழ்க்காணும் பெறுகைக்கான பெறுகை கோரும் அறிவித்தல் 2024.10.05 சனிக்கிழமை மற்றும் 2024.10.09 புதன் கிழமைகளில் (Daily News) பத்திரிகையில் பிரசுரிக்கப்படுகிறது.

